# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 198 வைகாசி 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 12 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ட்ரம்ப் – கிம் இன்று பேச்சு

சிங்கப்பூர், ஜூன் 12
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.
பரம எதிரி நாடுகளான அமெரிக்கா, வடகொரியா இரண்டுக்கும் இடையில் கடந்த சில வருடங்களாக உச்சக்கட்டக்கருத்துமோதல்கள் இருந்து வந்தன. இரண்டு நாடுகளின் அதிபர்களும் ஒருவர் மாறி ஒருவராகப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தனர். இந்தப் ›› 06

## யாழில் பிசுபிசுத்துப்போன கடையடைப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று அரை நாள் கடையடைப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணம் நகர் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் வழமைபோன்று இடம்பெற்றன. யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் ›› 06



# காலத்தைக் கடத்தாது தேர்தலை நடத்துங்கள்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அழுத்தம்

கொழும்பு, ஜூன் 12
மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை விரைவுபடுத்த வேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரியுள்ளது பவ்ரல் அமைப்பு.
சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணசபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்து எட்டு மாதங்கள் நிறைவடைகின்றன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்ததுடன் மேலும் மூன்று மாகாண சபைகளின் காலம் நிறைவடையவுள்ளது.
புதிய முறையிலாவது மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்து ›› 06

see more news in
newuthayan.com

**உள்ளூராட்சி உறுப்பினர்கள் சகலரும் குறுநில மன்னர்கள்!**
விரிவு - பக்கம் 12

**சுவாசக் குழாயில் ஆட்லறிக் குண்டு**
விரிவு - பக்கம் 11

## நல்லூர் பிரதேச சபையில் வட்டாரத்துக்கு ஒரு வீடு

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 12 வட்டாரங்களுக்கும் தலா ஒரு வீடு என்ற அடிப்படையில் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது. சபை நிதியில் இருந்து இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
நல்லூர் பிரதேச சபையின் மூன்றாவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி இந்த விடயத்தை முன்வைத்தார்.
"எமது பிரதேச ›› 06

## கடலட்டை தொழிலில் ஈடுபடும் வெளி மாவட்ட மீனவரை உடன் வெளியேற்றுங்கள்

### யாழ். மாவட்ட மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கி நின்று கடலட்டை பிடிப்பதை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று கோரி யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்



›› 06

## பாதிக்கப்பட்ட நபர்களையே கைது செய்துள்ளது பொலிஸ்

### கொக்குவில் வாள்வெட்டுச் சம்பவ வழக்கில் சட்டத்தரணி மன்றுரை

யாழ்ப்பாணம், ஜூன் 12
கொக்குவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப் ›› 06

## கடல் தொழிலாளர்களை கண்காணித்த எஸ்.ரி.எவ்

யாழ்ப்பாணம், ஜூன் 12
கடற்றொழிலாளர்களால்நேற்றுமுன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்பு போராட்டத்தை சிறப்பு அதிரடிப் படையினர் கண்காணித்தனர். ஒளிப்பதிவும் செய்தனர். அதனால் பண்ணைப் பகுதியில் உள்ள கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் முன்பாக சிறிது நேரம் பதற்றமான சூழல் நிலவியது.
யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் ›› 06

## விபத்தில் சிக்கிய இளைஞர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 12
விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த 24 வயதுடைய இளைஞர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சஜீவன் (வயது24) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். ›› 06

## கொழும்பு–யாழ். பேருந்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 12
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தில் கடத்தப்பட்ட 8 கிலோ 560 கிலோ கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதைக் கடத்தினார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று நேற்றுமுன்தினம் ›› 06

## பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலாட்டுகிறது ரி.என்.ஏ

### பரு. கடற்றொழிலாளர் சமாசம் குற்றச்சாட்டு அடியோடு மறுக்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
இழுவைமடி விவகாரத்தில் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செய்கின்றது என்று பருத்தித்துறை கடற்தொழிலாளர் சமாசத்தலைவர் குற்றஞ்சாட்டினார்.
கடற்றொழில் சமாசத் தலைவரின் குற்றச்சாட்டு எதுவித அடிப்படையும், ஆதாரமும் அற்ற குற்றச்சாட்டு. ›› 06

## காசு வாங்கியோர் விவரம் எம் கைகளில் இருக்கிறது

### நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 12
தங்கி நின்று கடலட்டை பிடிப்பதற்கு வெளி மாவட்ட மீனவர்களுக்கு 5 கடற்றொழிலாளர் சங் ›› 23

## தென்னந்தோப்பில் தேடுதல் சிக்கியது 20 கிலோ கஞ்சா!



மன்னார், ஜூன் 12
தென்னந் தோப்புக்குள் பதுக்கப்பட்டிருந்த 20 கிலோ 200 கிராம் கஞ்சாப் பொதி செய்யப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சா 20 லட்சம் ரூபா பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார், பேசாலை பிரதேச சபைக்குட்பட்ட காட் ›› 06

## போராட்டத்துக்கு அழைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட மாவை!

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வத்தால் கடற்றொழிலாளர்களின் போராட்டத்துக்கு வலிந்து அழைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா அங்கிருந்து அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்.
யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கடற்றொழிலாளர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று சம்மேளனத் தலைவர் வே.தவச்செல் ›› 06

# தயாசிறி எம்.பியிடம் 5 மணிநேர விசாரணை

**கொழும்பு, ஜூன் 12**
**விளையாட்டுத் துறையின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகரவிடம் நேற்று ஐந்து மணிநேர குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர். பேப்சுவல்ஸ் ட்ரசரீஸ் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்டமை தொடர்பிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.**

பேப்ச்சுவல்ஸ் ட்ரசரீஸ் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்டமை தொடர்பில் வாக்குமூலமளிக்க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர குற்றப்புலனாய்வு பிரிவில் நேற்று மு.ப. 10.30 மணிக்கு முன்னிலையானார்.
அமைச்சரிடமிருந்து 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரையில், ஐந்து மணிநேரம் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் வாக்குமூலம் பதியப்பட்டு, மூன்றரை மணியளவில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறியினார்.
2015ஆம் ஆண்டு பேப்ச்சுவல்ஸ் ட்ரசரீஸ் நிறுவனத்திடமிருந்து ஒரு மில்லியன் பெறுமதியான காசோலையொன்றைப் பெற்றுக்கொண்டமை தொடர்பிலேயே அமைச்சர் தயாசிறி நேற்றுக் குற்றப்புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலமளித்திருந்தார்.
கடந்த சில நாள்களாக அமைச்சரை வாக்குமூலமளிக்கக் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் முன்னிலையாகாத அமைச்சர் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். (ற-61)

## மாணிக்கக்கற்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஜூன் 12
மாணிக்கக்கற்கள் ஒருதொகை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
தங்கல்லப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
இவரிடமிருந்து 33 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான பென்ஸி வகையான மாணிக்கக் கற்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இவர் பேருவளைப் பகுதியில் உள்ள மாணிக்ககல் வியாபாரி ஒருவரிடம் இருந்து குறித்த மாணிக்கக் கற்களை அபகரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 12,200 கெரட் எடையுடைய மாணிக்கக் கற்களே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## பதவி மாற்றத்தால் கட்சியில் முன்னேற்றம் காண முடியாது

### கூறுகின்றார் முன்னால் அரசதலைவர்



கொழும்பு,ஜூன் 12
ஐக்கிய தேசியக்கட்சியின் அரசில் அங்கம் வகித்து கொண்டு அரசுக்கு எதிரானபோராட்டங்களைமுன்னெடுப்பதில் எந்தப் பயனுமில்லை. முதலில் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசில் இருந்து விலக வேண்டும். இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்ச தெரிவித்தார்.
நூல் வெளியிட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதவிகளில் மாற்றம் செய்வதால், கட்சியை எப்போதும் கட்டியெழுப்ப முடியாது.
அரசதலைவர் பகிரங்கமாக தலைமை அமைச்சரை விமர்சிக்கின்றார். தலைமை அமைச்சர் அரசதலைவரை விமர்சிக் கின்றார். நாட்டின் தலைவர்களின் இவ்வாறர்ன நடத்தை சமுகத்துக்குப் பெரிய கேடு.
அரசதலைவர் ஆட்சி முறையை ஒழிப்பதாகக் கூறுகின்றனர். அதுவும் சந்தேகத்துக்குரிய நிலைமையாகவே உள்ளது. மீண்டும் சூழ்ச்சி செய்து தேர்தலை நடத்தாமல் விட்டு விடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.என்றார். (ற.ரி4)

## ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன் 12
ஏறாவூர் மாவடிவேம்பிலுள்ள வீடொன்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.
சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
26 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டார்.
இவர் நுண்கடன் பிரச்சினை காரணமாக உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

## நீர்த்தாங்கி குடைசாய்ந்து விபத்து



யாழ்ப்பாணம்,ஜூன் 12
முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் பெரிய நீர்த்தாங்கியைக் கொண்ட கனரக வாகனமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்து நேற்று நடந்துள்ளது.
நீர்த்தாங்கியைக் கொண்ட கனரக வாகனத்தைப் பின்நோக்கி நகர்த்தி திருப்புவதற்கு முற்பட்ட போதே வடிகானுக்கு மேல் இடப்பட்டிருந்த சிமெந்துத் தட்டு உடைந்து நீர்த்தாங்கி குடைசாய்ந்தது எனக் கூறப்பட்டது.
விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்தனர். (ற.ரி4,102)

## துப்பாக்கிகளுடன் பத்து பேர் கைது

கொழும்பு,ஜூன் 12
மொனராகலை எத்திமலையில் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் பத்து பேர் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.
35 தொடக்கம் 75 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
இவர்களிடமிருந்து மிருகங்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

## லலித் வீரதுங்கவின் மனு நவ.26 அன்று விசாரணை

கொழும்பு, ஜூன்12
முன்னாள் அரசதலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்புகளை ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷபெல்பிட ஆகியோர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
தீபாலி விஜேசுந்தர மற்றும் அச்சல செங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு ஆராயப்பட்டது.
மேன்முறையீட்டு மனு தொடர்பிலான எழுத்துமூலமான வாதங்களை நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.
கடந்த அரசதலைவர் தேர்தலின் போது நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விகாரைகளுக்கு சில் துணிகளை விநியோகித்ததன் மூலம் அரசுக்கு 650 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கில் லலித் வீரதுங்க, அனுஷபெல்பிட ஆகியோரை குற்றவாளிகள் என அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க அவர்களுக்கு மூன்றாண்டு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்திருந்ததுடன் தண்டமும் விதித்திருந்தார். தண்டம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டவிரோதமானது எனச் சுட்டிக்காட்டி மேன்முறையீட்டைச் செய்துள்ள மனுதாரர்கள், தண்டனையை இரத்துச் செய்து, தம்மை வழக்கில் இருந்து முழுமையாக விடுதலைசெய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ரி5)

## பிரசன்ன உட்பட மூவருக்கு எதிரான வழக்கு விசாரணை

கொழும்பு, ஜூன்12
வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி 64 மில்லியன் பணத்தை பெற்றுக்கொண்டமை உட்பட சில குற்றச்சாட்டுக்களின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க உட்பட மூன்று பேருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கின் சாட்சி விசாரணைகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன முன்னிலையில் சாட்சி விசாரணை நடைபெற்றது.
சாட்சியமளித்த வர்த்தகர், கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு பிரசன்ன ரணதுங்க தனக்குப் பணத்தை வழங்குமாறு அச்சுறுத்தினார் எனக் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினமே பிரசன்ன ரணதுங்க அவரது மூன்று பாதுகாப்பு அதிகாரிகளுடன் வர்த்தக நிலையத்துக்கு வந்து அன்றைய தினமே பணத்தைத் தர வேண்டும் என அச்சுறுத்தினார் எனவும் கூறியுள்ளார்.
பிரசன்ன ரணதுங்க அச்சுறுத்தல் விடுத்த தொலைபேசி உரையாடல் தொடர்பான குரல் பதிவும் நீதிமன்றத்தில் ஒலிபரப்பப்பட்டது; இதனையடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். (ற-ரி5)



## இராணுவ வாகனம் மோதி முதியவர் படுகாயம்

சாவகச்சேரி,ஜூன் 12
படையினரின் வாகனம் மோதியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று மீசாலை வடக்கு புத்தூர் சந்தி, கனகன்புளியடிச் சாலையில் இடம்பெற்றது.
சரசாலை வடக்கைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் பாலகுலேந்திரன் (வயது-66) என்பவரே படுகாயமடைந்தவராவார்.
வரணியில் இடம்பெற்ற சாவு வீட்டுக்குச் சென்று விட்டு சைக்கிளில் சைக்கிளில் வீடு திரும்பியவரை கனகன் புளியடிச் சந்தி ஊடாக மீசாலை முதன்மைச் சாலைக்குச் சென்ற படையினரின் பேருந்து மோதியதெனத் தெரிவிக்கப்பட்டது.
படுகாயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.
விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2,9)



ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம்

## மாணவர் இருவர் கைதானமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 12
யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில், அதே பாடசாலையின் பழைய மாணவர் இருவரைக் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் இனந்தெரியாத சிலரால் அண்மையில் தாக்கப்பட்டார்.

குறித்த ஆசிரியர் கடமை முடிந்து வீடு திருப்பிக் கொண்டிருந்தபோது பாடசாலைக்கு அண்மையில் வைத்து இனம் தெரியாத சிலரால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பழைய மாணவர்கள் இருவர் கடந்த சில தினத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த பழைய மாணவர்கள் மீது பொய்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களை விடுவிக்கக் கோரி நேற்றுக் காலை பாடசாலையை சேர்ந்த 20 மாணவர்கள் வரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"தவறு செய்யாதவனுக்கு சிறைவாசம், தவறு செய்தவர்களோ உல்லாசம், அகிம்சை வழிப் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள், சிறைக்குச் சென்ற மாணவனின் மனநிலை என்னாகும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை இந்தப் பாடசாலையில் ஆயிரத்து 500 இக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் வெறுமனே 20 மாணவர்கள் வரையிலேயே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந.ரி2.8)

# கடும் மழையால் 551 பேர் பாதிப்பு

**கொழும்பு, ஜூன் 12**
**கண்டி மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாகப் பெய்த கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக 5 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 116 குடும்பங்களைச் சேர்ந்த 551 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 வீடுகள் சேதமடைந்துள்ளன.**

இவ்வாறு முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்தார்.

பாதஹேவாஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் 9 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 58 பேரும், குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், பஸ்பாகே கோரளய பிரதேச செயலகத்துக்குட்பட்ட 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும், உடுநுவர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 7 குடும்பங்களைச் சேர்ந்த 26 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பான இடங்களில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 378 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)



## பொலிஸாரின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மானிப்பாய்,ஜூன் 12
பொலிஸாரின் ஏற்பாட்டில், மானிப்பாய், இந்துக் கல்லூரியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இலங்கை பொலிஸில் இளைஞர்களை இணைப்பது, போதைப் பொருள் ஒழிப்பது மற்றும் வீதிப் போக்குவரத்து தொடர்பிலும் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதில், வடமாகண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் எம். சுதானந்தன் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் நிதியிலிருந்து 50 மாணவர்களுக்கான சீருடைகளும் இதன்போது வழங்கப்பட்டது. (ந.ரி2.26)



*அரச தலைவர் தலைமையில்*

## விஞ்ஞானக் கல்லூரியின் ஆண்டு நிறைவு விழா

கொழும்பு,ஜூன் 12
கல்கிஸ்சை விஞ்ஞானக் கல்லூரியின் 40 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" திட்டத்தின் கீழ் இப் பாடசாலையில் ஆரம்ப பிரிவுக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மற்றும் வகுப்பறைக் கட்டடம் ஆகியவற்றை அரச தலைவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் "வித்யாபிமானி" நினைவுச் சஞ்சிகை அரச தலைவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலையில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் அரச தலைவரால் வழங்கப்பட்டது

கல்லூரியின் அங்கவீனமுற்ற மாணவி ஒருவருக்கு சக்கர நாற்காலி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அரச தலைவர் வருகையை நினைவுகூரும் முகமாக கல்லூரி வளாகத்தில் நாக மரக்கன்றும் நடப்பட்டது.

கல்கிஸ்சை பிரதேசத்தில் மக்கள் பிரதிநிதியாக இருந்த விவியன் குணவர்தனவின் கோரிக்கையின் பேரில் முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் மற்றும் பீட்டர் கெனமன் ஆகியோரின் அனுசரணையில் கல்கிஸ்சை விஞ்ஞானக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. "விஞ்ஞானமே எதிர்காலமாகும்" என்பதை குறிக்கோள் வாசகமாகக் கொண்ட இப்பாடசாலையில் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, பிரதி அமைச்சர் இரான் விக்ரமரத்ன, மேல்மாகாண கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவங்ச ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ந.ரி2)

## தென்னைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 12
போரின் பின்னர் மக்கள் மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மண் அணைகள், பற்றைக்காடுகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கையில் தென்மராட்சிப் பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

அல்லாரை, மீசாலை வடக்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய கிராம அலுவர் பிரிவுகளில் காணப்படும் மண் அணைகளையும், துணாவில் மேற்கு, மிருசுவில் தெற்கு, மாசேரி, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு, தாவளை இயற்றாலை, உசன், மந்துவில் கிழக்கு, கோயிற்குடியிருப்பு, மண்டுவில், கல்வயல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் காணப்படும் பற்றைக் காடுகளையும் சீராக்கும் பணிகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

துப்புரவாக்கப்படும் இடங்களில் தென்னைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# இலவசம் எனத் தெரிவித்து 30 ஆயிரம் ரூபா அறவீடு!

*தாமரைக் கோபுரத்தில் வீழ்ந்து உயிரிழந்தவரின் உறவினர்கள் கவலை*

கிளிநொச்சி, ஜூன் 12
கொழும்பு, தாமரைக் கோபுரத்தில் இருந்து வீழ்ந்து உயிரிழந்த கிளிநொச்சி மாணவனின் உடலை இலவசமாகக் கொண்டு வருகின்றோம் என்று கூறிப் பின்னர் 30 ஆயிரம் ரூபா பணம் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கோணேஸ்வரன் நிதர்சன் கொழும்பு தாமரைக் கோபுரக் கட்டுமானப் பணியின்போது வீழ்ந்து உயிரிழந்தார். இவர் இந்த ஆண்டு தொழில்நுட்பப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றவிருந்தார். பெருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இவர் தொழிலுக்குச் சென்றிருந்தார் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடலைக் கொண்டுவருவதற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நடவடிக்கை எடுத்திருந்தார் என்று குடும்பத்தினர் கூறுகின்றனர். எரிபொருள் செலவை மட்டும் கொடுக்குமாறு அவர் கோரியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனம் மூலம் உடல் அக்கராயனுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் வாகனச் செலவாக 30 ஆயிரம் ரூபா பெறப்பட்டது. கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு சென்றுவர வாடகைக்கு வாகனம் பிடித்திருந்தால் 20 ஆயிரம் ரூபாவே செலவாகும். அதைவிட பலர் இதற்கு உதவத் தயராக இருந்தனர். இந்தநிலையில் இவர்கள் இப்படி நடந்துகொண்டது கவலை தருகின்றது என்று உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் செயலாளர் சேதுபதியிடம் கேட்டபோது,

பிரதேச சபை உறுப்பினர் ஒருவரே வாகனத்தைக் கோரியிருந்தார். அவரிடம் வாகனத்துக்கான கொடுப்பனவு 30 ஆயிரம் ரூபா எனத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எமக்கும் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் எந்தத் தொடர்பாடலும் நடக்கவில்லை என்று அவர் கூறினார். (ற-35)


விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



எங்கள் குறை தீர்க்க
சிங்க வாகனத்தில் வருகிறாள்

சிம்ம வாகினியே வீரமாகாளித் தாயே எழுந்து வா
சின்னத்தனங்களை ஒழிக்க வல்லவளே எழுந்து வா
அம்மணி ஜகதாம்பிகையே துயர்தீர்க்க எழுந்து வா
ஆற்ற முடியாத துன்பம் தீர்க்க வல்லவளே எழுந்து வா
இம்மா நிலத்தில் உன்னை சரண்புகுந்தோம் தாயே
இரங்கி வழிகாட்டி வாழவைக்க எழுந்து வா
அம்மா அம்மா ஆதி உலக நாயகியே நீதான்
அகிலமிதை காவல் செய்ய வல்லவள் நீ எழுந்து வா

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

[இன்று (12.06.2018) செவ்வாய்க்கிழமை
வண்ணை வீரமாகாளியம்பாளின் 9 ஆம் திருவிழா]
சிம்ம வாகனத்தில் எழுந்தருளுகின்றாள்
அன்னதானம் இடம் பெறும்.

## பலாப்பழத்துக்கு குறைந்தது மவுசு

யாழ்ப்பாணம், ஜீன் 12
யாழ்ப்பாணம்தென்மராட்சிபிரதேசத்தில் பல பகுதிகளில் பலாப்பழங்களின்விலைமிககுறைவாகஇருப்பதாகவியாபாரிகளால்தெரிவிக்கப்பட்டது. சாதாரணமாக ஒரு பழம் சுமார் 80 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. கடந்த வாரம் தொடக்கம் வீசி வரும் அதிக காற்றால் பலாமரங்கள் முறிந்து பழங்கள் பாதிக்கப்படுவதாகசெய்கையாளர்கள்கவலையடைகின்றனர். (72)

## மகோற்சவம்

வடமராட்சி, ஜீன் 12
வடமராட்சி பொலிகண்டி திருவருள்மிகு கல்யாணவேலவர் சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணிக்கும் சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திரு விழாவும், 28ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு ஊறணி சமுத்திரத்தில் நடைபெறும்தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவுறும். (173)

★★★★

யாழ்ப்பாணம், ஜீன் 12
உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து15 தினங்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும்26ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும், மறநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளதாகஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

## ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜீன் 12
கலைமகள்சனசமூகநிலையத்தின் 65ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலக ரீதியாக ஆக்கத்திறன் போட்டிகள் நடைபெறவுள்ளன.
சித்திரம் மற்றும் பொது அறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளது.
இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர்நாளைபுதன்கிழமை தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (23)



யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு விழிப்புலனற்றோர் சங்கக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பாடசாலைமாணவிஉட்பட இருவருக்கு சங்கத்தின்உப.தலைவர் ஆ. மகேந்திரனால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைக்கப்பட்டன. (23)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகள் சிலரை தனது இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து அவர்களது வாழ்வாதார நிலைகள் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர். (114)

# ஒலிபெருக்கிப்பாவனையில் கட்டுப்பாட்டைப் பின்பற்றுக

### மானிப்பாய் பொலிஸாரிடம் வலி. தென் மேற்குத் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜீன் 12
வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் ஒலி பெருக்கிப்பாவனைஅதிகரித்துள்ளமையால் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.
எனவே அவர்களின் நலன் கருதியும் சூழலைக்கருத்தில்கொண்டும், ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்கும் போது கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு வலி. தென் மேற்குப் பிரதேச சபை தவிசாளர் அ. ஜெபநேசன் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைக் கோரியுள்ளார்.
ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்குதல் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஆலயங்களில்இடம்பெறும்திருவிழாக்களின் போது ஒலி பெருக்கிகளின் பாவனைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. எனவே மக்களின் நலன் கருதி பிரதேச எல்லைக்குள் ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி கொடுக்கும் போது, சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து அத்தியாவசியமாக ஒலி பெருக்கிப் பாவனைதேவைப்படும்இடப்பரப்புஎல்லையையும் பாவனை நேரத்தையும் வரையறுத்துக் கொடுப்பதுடன் ஒலி பெருக்கியால் எழுப்பப்படும் ஒலி சூழலைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்என்றகட்டுப்பாட்டுடன்வழங்குவது சிறந்ததாக இருக்கும் என்பதால், மேற்படி விடயங்களை ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி கொடுக்கும் போது கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (115)



## கண்புரை நோயாளர்களுக்கான கண் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், ஜீன் 12
யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைப்பிரிவு படைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ண ஹெட்டியாராச்சியின் திட்டமிடலுக்கு அமைவாகஎடேரமுல்லசிங்ககலகத்தின்ஏற்பாட்டில்யாழ்ப்பாணத்தில் உள்ள கண்புரை நோயாளர்களுக்கான கண் பரிசோதனை முகாம் பலாலி இராணுவ மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இதில் 353 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு மேலதிக மருத்துவ சேவையை பெறவேண்டியவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்துச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (72)

# குடிதண்ணீர் விநியோக திட்ட ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி, ஜீன் 12
சாவகச்சேரி பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்ட மட்டுவில் சந்திரபுரம் பிரிவு மக்களுக்கான குடிதண்ணீர்விநியோகத்திட்ட ஆரம்ப நிகழ்வு மட்டுவில் தெற்கு கலுவம் சிவன் கோவில்முன்றலில்நாளை மறுதினம்வியாழக்கிழமை காலை10.00மணிக்குபிரதேச சபைத் தவிசாளர் க. வாம தேவன் தலைமையில்நடைபெறும்.
இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப்பிராந்தியஉதவிஉள்ளூராட்சி ஆணையாளர் ந. திருலிங்கநாதனும் சிறப்புவிருந்தினராகதென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபுவும் மதிப்புறு விருந்தினராக ஓய்வு நிலைதொழில்நுட்பஅலுவலர் கு. செல்வரத்தினமும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
மட்டுவில்பிரதேசத்தில்குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படுவதனால்வேம்பிராய்க்கிணற்றிலிருந்து மட்டுவில் வடக்கு மட்டுவில் கிழக்கு சரசாலை ஆகிய பிரிவுகளுக்குகுடிதண்ணீர்ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது மட்டுவில் சந்திரபுரம் கிராமத்திற்கான குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)



யாழ்ப்பாணம்வயாவிளான்மத்தியகல்லூரியில்கடமையாற்றியஅதிபர் பொ. சிவரஞ்சன்மற்றும்ஆசிரியர்களுக்கானபிரிவுபசாரநிகழ்வுகல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் வே.த. ஜயந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



சீரமைப்புத் தேவைகளுக்காக 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 80 சிமெந்துப் பைக்கற்களைச் சாவகச்சேரி சிவகாமி சுந்தரி அம்பாள் வீதியைச் சேர்ந்த வே. இரமேஸ்வரன் என்பவருக்கு மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸால் அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசசபை அலுவலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (9,26)

# அனுமதி இன்றி வீதிகளில் பொருள் பறித்தால் நடவடிக்கை

## நல்லூர் பிரதேச சபை பொதுமக்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 12

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளின் வீதிகளில் தனியாரால் அனுமதி இன்றிப் பறிக்கப்படும் கட்டடப் பொருள்களான மணல், கற்கள் போன்றவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சபையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு, சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சபையின் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் தவிசாளர் அறிவித்தல்களை வழங்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல வீதிகளில் அரச திணைக்களங்கள் அல்லாத தனியார் பலர் கற்கள், மணல் போன்ற கட்டடப் பொருள்களை முறையற்ற விதத்தில் வீதிகளில் பறித்துள்ளனர்.

அவ்வாறு வீதிகளில் கட்டடப் பொருள்கள் பறிப்பதாக இருந்தால் சபையிடம் முறையான அனுமதி எடுத்திருக்கவேண்டும். சபையின் அனுமதி எடுக்காது முறையற்ற விதத்தில் வீதிகளில் கட்டடப் பொருள்களை பறிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது எனக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதனைச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன் - என்றார். (8)

# அனுமதி பெறாமல் 5 கோபுரங்கள் அமைப்பு

## சபையின் செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜீன் 12

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் தொலைத்தொடர்பு கோபுரங்களில் 5 கோபுரங்கள் முறையாக அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ளன என்று சபையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

உறுப்பினர் சிவலோகநாதன் கடந்த அமர்வில் சபைக்குட்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் விவரங்கள் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு சபையின் செயலர் நேற்றுப் பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தமாக பத்து தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ளன. அவற்றில் 5 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் முறையான அனுமதிகள் எவையும் பெறப்படாது அமைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது புதிதாக ஒரு தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க விண்ணப் பம் செய்யப்பட்டது. முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அது நிராகரிக்கப் பட்டது.

பொதுவாகத் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைக்கும் போது பல திணைக்களங்களின் பரிந்துரைக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அந்தவகையில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதம், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபார்சு, தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் பரிந்துரை, பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம் எனப் பல முக்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் எமது சபை எல்லையில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்களில் அரைவாசிக் கோபுரங்களுக்கு முறையான அனுமதிகள் எடுக்கப்படாமல் அமைக்கப்பட்டுள்ளன-என்றார். (8)

### உறுதியில் குறிப்பிடப்படாவிடினும்

# பயிர் செய்யப்படும் நிலங்களில் கட்டடங்கள் அமைக்க முடியாது

## நல்லூர் பிரதேச சபையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜீன் 12

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் நிலங்கள் உறுதியில் பயிர்ச் செய்கை நிலம் என்று இல்லாவிட்டாலும், அந்த நிலங்களில் கட்டடங்கள் அமைக்க சபை அனுமதி கொடுக்கக்கூடாது என்று சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதுபற்றிய விவாதம் அடுத்த அமர்வில் இடம்பெறவுள்ளது. நல்லூர் பிரதேச சபையின் அமர்வு தவிசாளர் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு உறுப்பினர் கு. மதிசுணன் தெரிவித்ததாவது:

எமது சபைக்கு உட்பட்ட பல விவசாய நிலங்கள் வேறு தேவைக்கு பயன்படுத்தப்படுவதால் விவசாயச் செய்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. விவசாய குடும்பங்களும் அருகி வருகின்றன. அவர்களின் வாழ்வாதாரமும் சில சந்தர்ப்பங்களில் கேள்விக்குறியாகி வருகின்றது.

போர்க் காலத்தில் எமது பிரதேசத்துக்கும் தென்னிலங்கைக்குமான வீதித்தொடர்புகள் முற்றாகத்துண்டிக்கப்பட்டிருந்தன. எமது உணவுத்தேவைகளை எமது விவசாயிகளே நிறைவேற்றிவந்தார்கள். நாம் உணவுப் பஞ்சத்தில் இருந்து மீண்டு வாழ்ந்துவந்தோம். ஆனால் போர் முடிவடைந்த பின்னர் நிலைமை முற்றாகமாறி பல விவசாய நிலங்கள் பறிபோகின்றன.

எமது விவசாயிகளின் நிலங்களை புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் வசதி படைத்தவர்களும் அதிக பணத்துக்குக் கொள்வனவு செய்து அதில் திருமண மண்டபங்களையும் விசாலமான கட்டடங்களையும் அமைத்துவருகின்றனர். இதனால் விவசாய நிலங்கள் பறிபோவதுடன் விவசாய உற்பத்திகளும் வெகுவாகக் குறைவடைந்து செல்கின்றன. எனவே விவசாய நிலங்களை விற்பனை செய்வதைத் தடைசெய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தவிசாளர். விவசாய நிலங்களை விற்பனைசெய்வதை நாம் கட்டுப்படுத்த முடியாது. ஒரு நிலத்தை விற்பனை செய்வதற்குக் காணி உரிமையாளருக்கு உரிமை இருக்கின்றது. அதில் நாம் தலையிட முடியாது.

விவசாயக் காணிகளில் கட்டடம் கட்டும்போது கோரப்படும் விண்ணப்பங்க ளுக்கு அனுமதியைக் கொடுக்காதுவிடலாம். இதுதொடர்பாக நாம் சட்ட ஆலோசனைகளையும் பெறவேண்டியுள்ளது. எனவே இந்த விடயத்தை அடுத்த அமர்வுக்கு ஒத்தி வைப்போம் - என்றார். (4,8)

### சந்தைக் கட்டடத்தொகுதியை ஆராய

# நிபுணத்துவ ஆலோசனையை பெறுவதற்குச் சபை அங்கீகாரம்

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி சந்தைக் கட்டடத்தொகுதி தொடர்பாக ஆராயும் குழு நிபுணத்துவ ஆலோசனையை பெறுவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் நேற்று சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்காக தவிசாளர் இதைச் சபையில் முன்வைத்தார்.

திருநெல்வேலி சந்தைக் கட்டடத் தொகுதி தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழு பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. அதில் முதற்கட்டமாக கட்டடத்தை மீள் நிர்மாணம் செய்வதா? அல்லது சீரமைப்புச் செய்வதா? என நிபுணத்துவ ஆலோசனையை துறைசார்ந்த வல்லுநர்களிடம் இருந்து பெறுவதற்கு சபையின் அங்கீகாரத்தை கோரியுள்ளனர். எனவே சபையின் அங்கீகாரத்தை கோருகின்றேன் என்றார்.

இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஆதரவு தெரிவிக்க சபை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதேவேளை திருநெல்வேலி கட்டட அமைப்பு பொருத்தமற்ற விதத்தில் அமைந்துள்ளதாக மாகாண அவைத்தலைவர் உட்பட பலர் சுட்டிக்காட்டியதுடன் மழைகாலங்களில் விவசாயிகள் மற்றும் சந்தை வியாபாரிகள் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் இது தொடர்பாக ஆராய குழு நியமிக்கப்பட்டது. (8)

# ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜீன் 12

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது தொடர்பான கடிதம் வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

சபையின் உறுப்பினர் க. வாசுகி இந்தத் தீர்மானத்தை சபையில் பிரேரித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில நாள்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் மற்றும் மன உளைச்சல் ஏற்படுத்தக் கூடிய சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதிலும் பெரும்பான்மையான சம்பவங்கள் எமது சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளிலேயே இடம்பெற்றுள்ளன.

எமது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் அதிபரின் நெருக்குதல் காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகி தவறான முடிவெடுத்து உயிரைமாய்த்தார். அவர் இறந்து நீண்ட நாள்களாகியும் இன்றுவரை அவரின் இறப்புக்கு நீதி கிடைக்கவில்லை. எமது எல்லைக்குட்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாகவும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அண்மைக்காலமாக பாடசாலை ஆசிரியர்கள் மீது பல தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் முதல்வர் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

இது தொடர்பில் சபை உறுப்பினர் கிரிதரன் தெரிவித்தாவது,

அண்மைய நாள்களாக பாடசாலை ஆசிரியர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. உயர் அதிகாரிகளால் துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர். வன்புணர்வு இலஞ்சம், என பல குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே இதனை முக்கிய விடயமாகக் கருத்தில் எடுத்து உரிய தீர்வு காண வேண்டும் - என்றார்.

இறுதியாக இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண முதல்வருக்கும் சபையின் தீர்மானத்தை அனுப்புவதாக சபையின் தவிசாளரால் தெரிவிக்கப் பட்டது. (8)

# காரைக்காலில் அமைந்துள்ள கழிவு தரம்பிரித்தல் நிலையத்தை இடம்மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜீன் 12

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள கழிவு தரம்பிரித்தல் நிலையத்தை அங்கிருந்து வேறு இடத்துக்கு இடம்மாற்றுமாறு பிரதேச சபை உறுப்பினர் கௌசலா கோரிக்கை விடுத்தார்.

நல்லூர் பிரதேச சபையின் மூன்றாவது அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான கழிவு தரம்பிரிக்கும் நிலையத்தை அங்கிருந்து அகற்றுமாறு அப்பகுதி மக்கள் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து கோரி வருகின்றனர்.

அது தொடர்பாக சபைக்கு நேரடியாக வந்தும் பல அதிகாரிகளையும் சந்தித்தும் கோரிக்கை விடுத்துள்ள போதும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்து ஆலயமான காரைக்கால் சிவன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதி மக்கள் துர்நாற்றத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதனை இடமாற்றக் கோரி பலரும் கோரிக்கை விடுத்துள்ள போதும் எந்த முன்னேற்றமும் இல்லை. அதனாலேயே அப்பகுதி மக்கள் என்னை தெரிவு செய்து இந்த சபைக்கு அனுப்பியுள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது எனது வட்டாரத்துக்கான வாக்குச்சாவடி காரைக்காட்டு சிவன் ஆலயத்திலேயே அமைக்கப்பட்டது. அங்கு கடமையில் இருந்த தேர்தல் உத்தியோகத்தர்கள் கூட துர்நாற்றத்தினால் மூக்கைப் பொத்திக் கொண்டே கடமையில் ஈடுபட்டனர். இவ்வாறான நிலையில் அப்பகுதி மக்களின் நிலைமையை அதிகாரிகள் புரிந்துகொள்ளவேண்டும் என்றார்.

கழிவு முகாமைத்துவ இடத்தினை இன்னொரு இடத்துக்கு மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல. எனவே இதனை முழுமையாக ஆராய்ந்த பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் பதில் வழங்கினார். (8)

see more news in NEWUTHAYAN.COM

## யாழில்...

கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தால் கடையடைப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பு பிசுபிசுத்தது.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கி நின்று கடலட்டை பிடிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி, யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் கடையடைப்புப் போராட்டத்துக்கு, யாழ்ப்பாண மாவட்டக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே. தவச்செல்வம், கடந்த சனிக்கிழமை இந்த அழைப்பை விடுத்தி ருந்தார்.

தங்களது போராட்டத்துக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு வழங்குகின்றது என்றும் அவர் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடையடைப்புக்கு முழுமையான ஆதரவு வழங்கும் என்று அறிக்கையின் ஊடாகத் தெரியப்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கிய நகரங்களான சுன்னாகம், நெல்லியடி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை நகரங்கள் வழமைபோன்று இயங்கின. தென்மராட்சியில் மட்டும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன.

சந்தைகள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், எரிபொருள் விற்பனை நிலையங்கள் என்பன வழமைபோன்று இயங்கின. பொதுப் போக்குவரத்துச் சேவைகள், தனியார் போக்குவரத்துச் சேவைகள் என்பனவும் இயங்கின. (ற-5,7,26)

## ட்ரம்ப்...

பின்னணியில் இவர்கள் இருவருக்கும் இடையில் இன்று அமைதிப் பேச்சு நடைபெறவுள்ளமை பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தைப் பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் சிங்கப்பூரின் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா விடுதியில் இன்று காலை 9 மணிக்கு (இலங்கை நேரப்படி காலை 6.30) சந்தித்துப் பேசவுள்ளனர்.

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 14)

## நல்லூர்...

சபையின் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இருந்து வட்டாரத்துக்கு ஒரு வீடு வீதம் வழங்கப்படவுள்ளது. ஒரு வீட்டின் பெறுமதி 8 லட்சம் ரூபாவாக இருக்கும்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கங்கள், போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்பற்றை வட்டார உறுப்பினர்கள் இனங்கண்டு தெரியப்படுத்த வேண்டும். எமது அதிகாரிகள் ஆராய்ந்து வீட்டுத் திட்டம் வழங்கப்படும். மலசலகூடம் அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா வழங்குவது தொடர்பாகவும் ஆராய்கின்றோம்" என்று அவர் குறிப்பிட்டார். (ற-8)

## விபத்தில்...

இவர் கடந்த வாரம் மல்லாகம், குப்பிளானில் விபத்துக்குள்ளானார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவருக்குத் தொடர் சிகிச்சை வழங்கப்பட்டிருந்தது. சிகிச்சை பயனின்றி அவர் நேற்று மாலை உயிரிழந்தார். (ற-21,72)

## கொழும்பு...

புளியங்குளத்தில் பொலிஸாரால் மடக்கப்பட்டது. தெற்கில் இருந்து வடக்குக்கு கஞ்சா கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

பேருந்து சோதனையிடப்பட்டது. அதிலிருந்து இரு பைகளில் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதைக் கொண்டு வந்தார் என்ற சந்தேகத்தில் கதிர்காமத்தைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸ் காவலில் உள்ளார் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

## பிள்ளையைக்...

அதனை முற்றாக மறுக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கி நின்று கடலட்டை பிடிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தால் நேற்று நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் பேரணியின் முடிவில் பருத்தித்துறைக் கடற்தொழிலாளர் சமாசத்தின் தலைவர் வர்ணகுலசிங்கம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்வ ளத்தை அள்ளிச் செல்கின்றனர். இதனைத் தடுப்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இழுவைமடி தடைச் சட்டவரைவைத் தயாரித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அரசிதழில் பிரசுரிப்பதற்கான ஆதரவு நாடாளுமன்றத்தில் கிடைத்தது. அந்தச் சட்டவரைவை நடைமுறைப்படுத்தாமல் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தி வைத்துள்ளனர்." என்று அவர் குற்றஞ்சாட்டி னார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் வினவப்பட்டது.

"இந்தக் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றேன். பல இடர்களுக்கு மத்தியிலேயே இந்தச் சட்டவரைவை நான் உருவாக்கிக் கொண்டு வந்தேன். முன்னைய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் இது தொடர்பில் பல தடவைகள் பேச்சு நடத்தியிருந்தேன். இந்தியாவுக்கும் சென்று குரல் எழுப்பியிருந்தேன். இந்தச் சட்டவரைவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இப்போதும் நான் அழுத்தம் கொடுத்து வருகின்றேன்." என்று அவர் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் இது தொடர்பில் தெரிவித்தபோது,

"இந்தச் சட்டவரைவைக் கொண்டுவரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடுமையாக உழைத்தார். முன்னைய மீன்பிடி அமைச்சரைச் சந்திப்பதற்கும் அவர்தான் ஏற்பாடுகள் செய்து தந்திருந்தார்"-என்றார். (ற-5,7,26,114)

## தென்னந்தோப்பில்...

டாஸ்பத்திரி பகுதியிலேயே நேற்றுமுன்தினம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

போசாலை பொலிஸாருக்கு மன்னார் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வழங்கியுள்ளனர். அதையடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது. கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. கஞ்சா உள்ளூர் விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததா?, அல்லாது வேறிடம் கொண்டு செல்லப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததா? என்பது தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன என்று பேசாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,56)

## வெளி மாவட்ட...

பட்டது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் பழைய சிறைச்சாலைக்கு முன்பாக அமைந்துள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் கடற்தொழிலாளர்கள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஒன்றுகூடினர். நூற்றுக் கணக்கானோர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்தனர். அங்கிருந்து கண்டி வீதி வழியாக மாவட்டச் செயலகம் நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்ட னர்.

கடல்வளத்தைச் சுரண்டாதே, கடலட்டை பிடிப்போரை வெளியேற்று என்ற கோசங்களை எழுப்பியவாறு ஊர்வலம் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது. மாவட்டச் செயலகத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து மனுவைப் பெற்றுக் கொண்டார்.

அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் நோக்கிப் போராட்டக்காரர்கள் சென்றனர். ஆளுநரின் உதவிச் செயலர் செல்வநாயகத்திடம் மனுவைக் கையளித்தனர். யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு இறுதியாகச் சென்ற போராட்டக்காரர்கள் அங்கு மனுவைக் கையளித்தனர். போராட்டம் மதியத்துடன் முடிவுக்கு வந்தது. (ற-5,7,26)

## போராட்டத்துக்கு...

வம் அலைபேசியில் தொடர்புகொண்டு அழைத்துள்ளார். சுகவீனம் காரணமாக மருந்து உட்கொண்டுள்ளேன் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதிலளித்துள்ளார். ஊர்வலத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும், அதை ஆரம்பித்து வைக்க வர வேண்டும் என்று சம்மேளனத் தலைவர் கோரியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பணியகத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சென்றார். சம்மேளனப் பிரதிநிதிகளுடன் பணியகத்தினுள் கலந்துரையாடிக் கொண்டிருந்தபோது, பணியகத்து வெளியே சுமார் 15க்கும் குறைவான இளைஞர்கள், 'அரசியல்வாதிகள் வேண்டாம்' என்று கோசம் எழுப்பினர்.

தொடர்ச்சியாகக் கோசம் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து, சம்மேளனப் பணியகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வெளியேறினார். நாடாளுமன்ற உறுப்பினர் வெளியேறியதைத் தொடர்ந்து, பணியகத்தின் முன்பாகக் கூடியிருந்த சிலர் கரகோசம் எழுப்பினர்.

போராட்டத்தில் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளக் கூடாது, வெளியேறவேண்டும் என்று இளைஞர்கள் கோசம் எழுப்பியிருந்த போதும், பேரணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், ஈ.பி.டி.பி. பிரதேச அமைப்பாளர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஊர்வலத்தின் முடிவில், சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலருக்கு கைலாகு கொடுத்து அனுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினரை வலிந்து அழைத்தமை உண்மையா என்று சம்மேளனத் தலைவரை 'உதயன்' தொடர்பு கொண்டுகேட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்தமையை ஏற்றுக் கொண்ட சம்மேளனத் தலைவர், தனிப்பட்ட ஒரு சிலரே அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக அவருக்கு எதிராகக் கோசமிட்டனர் என்று தெரிவித்தார். இந்தச் சம்பவத்துக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோருகின்றேன் என்றும், தனது மனவேதனையை வெளிப்படுத்துகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5,7,26,114)

## கடல்...

கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் பேரணியின் முடிவில் மனுக் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர், வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலர் ஆகியோரிடம் மனுக் கையளித்த பின்னர், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத் துக்கு மனுக் கையளிப்பதற்குப் போராட்டக்காரர்கள் சென்றனர். லஞ்சம் வாங்காதே', 'உதவிப் பணிப்பாளரை மாற்று' என்று போராட்டக்காரர்கள் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாகக் கோசம் எழுப்பினர். மனுவை வாங்க வந்த உதவிப் பணிப்பாளர் திரும்பிச் சென்றுவிட்டார். போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் கோசம் எழுப்பினர்.

கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு அருகில் அமைந்துள்ள சிறப்பு அதிரடிப் படையின் முகாமிலிருந்தவர்கள் போராட்டக்காரர்களை கண்காணித்தனர். தமது அலைபேசிகளில் ஒளிப்படமும் எடுத்தனர்.

நீரியல்வளத் திணைக்களத்துக்குள் அத்துமீறி போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்ட தால் அங்கு சிறிது பதற்றம் ஏற்பட்டது. கடற்தொழில் சங்க மற்றும் சமாசப் பிரதிநிதிகள் உதவிப் பணிப்பாளருடன் கலந்துரையாடியதற்கு அமைவாக போராட்டக்காரர்களின் மனுவை அவர் பெற்றுக் கொண்டார். (ற-5,7,26)

## காலத்தைக்...

வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும்." என்று அந்த அமைப்பு கடிதம் மூலம் கோரியுள்ளது.

முடிவடைந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு உறுதியான தீர்மனங்களை முன்வைக்காதுள்ளது. எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதனாலேயே சபாநாயகருக்குக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்று பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள் ளது.

மாகாண சபைத் தேர்தல் புதிய சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்டால் எல்லை நிர்ணய அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப் படவேண்டும். மாகாண சபைகளுக்கான கால எல்லை நிறைவடைந்து ஒரு மாத கால பகுதிக்குள் எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பிக்க நாடாளுமன்றம் கடமைப்பட்டுள்ளது என்று அந்த சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் தெரிவாக, எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் தலைமை அமைச்சர் தலைமையில் குழு நியமிக்கபட்டு அதனுடாக எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான ஆய்வுகளை மெற்கொள்ள முடியும். குறிப்பிட்ட இரண்டு மாதங்களில் தலைமை அமைச்சரின் குழுவால் எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியும்.

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட ஒரு சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றமே கவனத்தில்கொள்ளாமல் உள்ளமை பிரச்சினைக்குரிய விடயமாகும். நாடாளுமன்றத்தின் தலைவராக உங்களை மக்கள் தெரிவு செய்துள்ளமைக்கு முதன்மைக் காரணம தலைவர் என்ற ரீதியில் மக்களும் வைத்துள்ள சிறப்பு நம்பிக்கையாகும். எல்லை நிர்ணய அறிக்கையை விரைவில் சமர்ப்பித்து மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இது தொடர்பில் பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கருத்துத் தெரிவித்தபோது,

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பில் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டது. எல்லைநிர்ணய அறிக்கையும் முன்வைக்கப்படவில்லை. இது நாடாளுமன்றத்துக்கு வழங்கபட்டுள்ள பொறுப்புகளில் இருந்து மீறும் வகையிலேயே அமைந்துள்ளது.

நாடாளுமன்றத்தின் தலைவர் என்ற ரீதியில் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கப் புதிய முறையிலாவது மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளைச் சபாநாயகர் கரு ஜயசூரிய மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ற-31)

## பாதிக்கப்பட்ட...

பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் தாக்குதலுக்குள்ளானவர்கள். முறைப்பாட்டாளர் மற்றும் அவருடன் இணைந்தவர்களே தாக்குதல் நடத்தினர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார்.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று முறைப்பாட்டாளர் எதிர்வரும் 18ஆம் திகதி மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு காந்தி சனசமுக நிலையத்துக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் முற்பகல் வாள்வெட்டு இடம்பெற்றது. 4 மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல், அந்தப் பகுதி இளைஞன் ஒருவரைத் தாக்கியது. இளைஞன் காயமடைந்தார். அங்கிருந்து தப்பித்த கும்பலை, அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடித் துரத்திச் சென்றனர். கும்பலில் வந்த ஒருவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது. மடக்கிப் பிடிக்கப்பட்டவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தனர்.

எனினும் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதன்போது சந்தேநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மேற்கண்டவாறு மன்றுரைத்தார். சம்பவம் தொடர்பான சிசிரிவி காணொலிப் பதிவு ஒன்றும் அவரால் மன்றில் முன்வைக்கப்பட்டது.

"காணொலியில் இரண்டு தரப்பும் மோதுகின்றன. மற்றைய தரப்பிடம் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் உள்ளன" என்று மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

பொலிஸார் மற்றும் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணியின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

முறைப்பாட்டாளரை வரும் 18ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்தார்.

வன்முறைச் சம்பவம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு மன்று கட்டளையிட்டது. (ற-103)

## மைத்திரிக்கு ஆதரவு கிடையாது

### ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜீன் 12

அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு கூட்டணி உருவாக்கி தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அடுத்துவரும் அரசதலைவர் தேர்தலில் களமிறக்கவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலரும் தற்போதைய அமைப்பாளருமான அமைச்சர் துமிந்த திசாநாயக்க அண்மையில் தெரிவித்தார். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் தேர்தலில் களமிறங்குவாரானால் அவருக்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆதரவு வழங்கப்போவதில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பத்தரமுள்ளையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசு மக்கள் தீர்ப்புக்கு அஞ்சியுள்ளது. அதனால்தான் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாது பிற்போடுவதற்கு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இவ்வாறு தேர்தல்களை பிற்போடுவதானது ஜனநாயகத்தின் சாவுப் பயமாகவே அமைந்துள்ளது. ஒவ்வொரு தேர்தலையும் மக்கள் போராடிப்பெற வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சியில் ஜனநாயகம் உரிய முறையில் பேணப்பட்டு வந்தது. அதனால்தான் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஏதாவது ஒரு தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முன்னைய அரசால் வடக்கு மாகாண சபையில் வெற்றியீட்ட முடியாததெனத் தெரிந்த போதிலும் அங்கும் தேர்தல் நடத்தப்பட்டது. சுய இலாபங்களுக்காக ஜனநாயகத்தை புறந்தள்ளவிட முடியாது.

அத்துடன் நாட்டில் தற்போது சர்ச்சை மிகுந்த நெருக்கடி நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசின் முறையற்ற நிர்வாகத்தாலேயே அந்த நிலமை உருவாகியுள்ளது. இன்னும் தொடர்ந்தால் மக்கள் மென்மேலும் இன்னல்களைச் சந்திக்க வேண்டி வரும் - என்றார். (5.31)

# பிணைமுறி குற்றவாளிகளை காப்பாற்றுகிறார் மைத்திரி

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி

கொழும்பு, ஜீன் 12

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குற்றவாளிகளைக் காப்பாற்றும் வகையிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கூட்டு அரசு ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே மத்திய வங்கி பிணைமுறி ஊழல் இடம்பெற்றது. மத்திய வங்கி ஊழல் இடம்பெற்றமை தெரிந்தவுடனேயே நாம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து உண்மைகளைக் கண்டறியவும், அதற்காக மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரனைப் பதவி நீக்கம் செய்து சுயாதீனமாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனக் கூறினோம்.

உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு தயாராக இருக்கவில்லை. இதனை அடுத்தே கோப் குழுவின் மூலமாக உண்மைகளை வெளிக்கொண்டுவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக, பிமல் ரத்நாயக, நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் இணைந்து உண்மைகளை வெளிக்கொண்டுவரும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். கோப் அறிக்கையை மூடி மறைக்க ஏனைய நபர்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். அழுத்தம் கொடுக்கப்பட்டது, பல இழுத்தடிப்புகள் இடம்பெற்றது. நீதிமன்றம் வரையில் சென்று அறிக்கையைத் தடுக்க சுஜீவ சேனசிங்க போன்றவர்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். அதையும் தாண்டி நாம் இந்த அறிக்கையை வெளிக்கொண்டுவந்து உண்மைகளை வெளிப்படுத்தினோம். அறிக்கை வெளியிடப்பட்டபோதும் அதனை ஏற்றுகொள்ளக் கூடிய வகையில் இல்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்தனர்.

இதன் பின்னரே அரச தலைவர் தலையிட்டு மத்திய வங்கி ஊழலைக் கண்டறிய அரச தலைவர் ஆணைக்குழுவை நியமித்தார். அதிலும் பல உண்மைகள் வெளிவந்தன. இப்போது அலோசியஸின் சில நிறுவனங்களில் இருந்து பணம் பெற்றுக்கொண்டதாக 118 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றை வெளிப்படுத்தவேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் பணம் பெற்றதாகப் பொய்யான காரணிகளை கூறி மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளைச் சிலர் முன்னெடுத்து வருகின்றனர். கோப் குழுவில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் நான்கு பேரும் பணம் பெறவில்லை என்று இரகசிய பொலிஸ் அறிக்கை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் உள்ளது. பணம் பெற்றுக்கொண்ட நபர்கள் யார் என்பது குறித்தும் வெளிபடுத்தவேண்டும்.

ஆணைக்குழுவின் அறிக்கையை கையில் பெற்றுக்கொண்ட அரச தலைவர் மைத்திரி அதில் எத்தனை பக்கங்கள் உள்ளது என்பதை தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட அறிக்கையில் நூற்றுக்கணக்கான பக்கங்கள் மறைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை வெளிப்படுத்த முடியும் என்று இப்போது சட்டமா அதிபர் தெரிவித்தார். சில பக்கங்களை அரச தலைவர் மறைத்தார் என்பது இப்போது வெளிப்படையாக தெரியவந்துள்ளது. இப்போதாவது அதனை வெளிப்படுத்த வேண்டும். அதேபோல் மத்திய வங்கி பிணைமுறி பரிமாற்றலில் அர்ஜூன் அலோசியஸின் நிறுவனத்துக்கு கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையில் 12 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளதாக உரிய நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் மூலமாக அறிய முடிகின்றது. பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டை ஈடுசெய்யவேண்டும்.

இவ்வாறன நிலமைகளில் தான் அரச தலைவர் இந்த ஆண்டு ஆரம்பத்தில் பல வாக்குறுதிகளைக் கொடுத்தார். விசாரணைகளை மேலும் பலப்படுத்த இரண்டாம் அரச தலைவர் ஆணைக்குழு அமைத்து குற்றவாளிகளைக் கண்டறிவதாகக் கூறினார். சிறப்புச் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து குற்றவாளிகள் குறித்து விசாரணை நடத்துவதாகவும் கூறினார். ஆனால் இன்றுவரையில் அவர் வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. மக்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை ஈடுசெய்ய அரசால் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுமில்லை. இப்போதாவது அரச தலைவர் மைத்திரி தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். அதற்காக உடனடியாக விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தவேண்டும்.

அர்ஜூன் அலோசியஸின் நிறுவனங்களில் இருந்து நிதி பெற்றுக்கொண்டமை ஊழல் குற்றம் அல்ல என்ற தர்க்கமே இப்போது முன்வைக்கப்படுகின்றது. தேர்தலுக்காக நிதி வழங்கப்பட்டது என்ற வாதத்தை முன்வைத்து, தமது நியாயங்களைக் கூறுகின்றனர். தேர்தலுக்காக நிதி பெறப்பட்டது குற்றம் அல்லாத போதிலும் ஊழல் செய்த நிறுவனம் என்ற நீதிமன்றக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து இவ்வாறு நிதி பெற்றுக்கொண்டமை குற்றமாகவே கருதப்பட வேண்டும் - என்றார். (5.61)

## கோத்தா களமிறங்குவதற்கு வாசுதேவ கடும் எதிர்ப்பு



கொழும்பு, ஜீன் 12

பொது எதிரணி என்பது தனிப்பட்ட கட்சியல்ல. அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பொதுத் தீர்மானங்களையே எடுக்க வேண்டும். அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்குவது என்று கூட்டு எதிரணியினரால் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயகார இவ்வாறு தெரிவித்தார்.

கோத்தபாயவை அரசதலைவராக்கவேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்கின்றேன் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ள நிலையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு நாளுக்கு நாள் பலவீனமடைந்து செல்கிறது. இதன் காரணமாக கூட்டு எதிரணியினர் பலம் அதிகரித்துள்ளது. மக்களின் ஆதரவு கட்சிக்கு மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதே தவிர ஒரு சில உறுப்பினர்களுக்கு அல்ல என்ற விடயத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முன்னாள் சபாநாயக்ர் சமல் ராஜபக்சவை பொது வேட்பாளராக களமிறக்க விருப்பங்களைத் தெரிவித்து வருகின்றனர். மக்களின் ஆதரவு பெற்ற ஒருவரையே வேட்பாளராக களமிறக்க வேண்டும். இது தொடர்பில் பொது எதிரணியினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபாய ராஜபக்சவைக் களமிறக்க முடிவுகள் எடுக்கப்பட்டதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட பொது எதிரணியினர் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. பொது எதிரணி என்பது தனிப்பட்ட கட்சியல்ல. அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பொதுத் தீர்மானம் எட்டப்பட வேண்டும் என்றார். (5)

# 20ஆவது திருத்த சட்டவரைவு ஒற்றையாட்சியைப் பாதிக்குமாம்

## வாசுதேவவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜீன் 12

மத்திய, மாகாண அரசுகளுக்கிடையில் அதிகாரப் பரவலாக்கம் உறுதியற்ற நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் 20ஆவது திருத்தம் நாட்டின் ஒற்றையாட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத் தீர்மானம் தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்தத் தீர்மானமான்து மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்காகக் கொண்டு வருவதாக தெரிவித்து அதற்கு எதிரான கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

20ஆவது திருத்தத் தீர்மானத்துக்குப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றபோதும் எம்மை பொறுத்தமட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் தீர்மானமானது நாட்டின் ஒற்றையாட்சி, இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருப்பதால் நாங்கள் அதனை எதிர்க்கின்றோம்.

இவர்கள் அவசரப்பட்டு இதனைக் கொண்டுவருவது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகும்.

மாகாண மற்றும் மத்திய அரசுக்கிடையிலான இணைப்பு உறுதியான நிலை இருக்குமானால் இந்தத் தீர்மானம் தொடர்பில் சிந்திக்கலாம். அரசுக்கும் மாகாண சபைகளுக்குமான அதிகாரப் பரவலாக்கம் இன்னும் உறுதியான நிலையில் இல்லை. இன்னும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் நாட்டின் ஐக்கியத்தை பாதுகாத்துக் கொள்வது மிகவும் அத்தியாவசியமானதாகும். இதனை நாடாளுமன்றத்தாலும் செய்யலாம். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாடாளுமன்றம் எடுக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மேற்கொள்ளமுடியாது. அவரின் தலைமையில் மத்திய அரசின் அதிகாரத்தை நலிவடையச்செய்யும் நடவடிக்கையே இடம்பெறுகின்றது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையாகும். எனவே இந்தக் கோரிக்கையை நாம் எதிர்க்கின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்திருக்கும் 20ஆவது திருத்தமானது நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் ஐக்கியத்தைப் பாதிக்கும். அதற்கு இடமளிக்க முடியாது. எங்களுக்கு ஒற்றையாட்சியும்தேவை அதேபோன்று அதிகாரப் பரவலாக்கமும் தேவை என்றார். (5.61)

# கூட்டு அரசு மோதலை வேடிக்கை பார்க்கிறோம்

## மகிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 12
நாட்டின் இரு தலைவர்களும் தங்களுக்குள் மோதிக் கொள்கிறார்கள். நாம் அதனை கேட்டுக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசிலுள்ள யாரையும் பேச வேண்டிய தேவை எனக்கு இல்லை. அவர்களே தங்களுக்குள் முரண்பட்டுக் கொள்கின்றார்கள்.
ஐந்து விரல்களும் ஒன்று போன்று இல்லையெனவும் இவ்வாறு இருப்பதால், கருத்து முரண்பாடுகள் வருவது இயல்பானது எனவும் கூறுவார்கள். ஆனால், எமது நாட்டில் இரண்டு விரல்கள் சேர்ந்தே செயற்பட முடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது.
மேலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மிக விரைவில் இன்னும் சிலர் வெளியேறி எம்முடன் இணைவார்கள் - என்றார். (5)

# வடக்கில் ஆயுதப் போராட்டம் பலமடைய 1981ஆம் ஆண்டு தேர்தல்தான் காரணமாம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 12
ஜனநாயகம், வாக்குரிமை, மற்றும் ஒரு நாட்டின் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்கு தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த வேண்டியது முக்கியமானது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்காளர் தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுர மாவட்டச் செயலகத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் வரலாற்றில் மோசடிகள் நிறைந்த மூன்று தேர்தல்கள் நடந்தன. 1999ஆம் ஆண்டு நடந்த வடமேல் மாகாண சபைத் தேர்தல். 1982ஆம் ஆண்டு நடந்த மக்கள் கருத்து வாக்கெடுப்பு. 1981ஆம் ஆண்டு நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் ஆகியனவே அவை.
யாழப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின்போது, வாக்களிப்பு நிலையங்களில் கொழும்பு, குருநாகல் பகுதிகளில் இருந்து, கொண்டு வரப்பட்ட வெளியாள்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இது, வாக்குப்பெட்டிகள் காணாமற்போகக் காரணமாயிற்று. பின்னர் சில வாக்குப் பெட்டிகள் மீட்கப்பட்டன. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட அன்றே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
இந்தச் சம்பவம், மிதவாத தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் தேர்தல் மீதான நம்பிக்கையை உடைத்தது. வாக்குகளுக்குப் பதில் ரவைகள் என்ற நிலைக்கு அவர்கள் செல்ல வழியமைந்தது.
வடக்கில் ஆயுதக் குழுக்கள் பலமடைய, 1983ஆம் ஆண்டு கலவரம் தான், காரணமானது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், இந்தக் குழுக்களின் தோற்றுவாய் என்று, 1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைத்தான் நான் நினைக்கிறேன்,
1982ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில், இளைஞர்களைப் பிரதிநித்துவம் செய்த அரசியற் கட்சி ஒன்று பெற்றுக் கொண்ட வாக்குகளை வைத்துப் பார்த்தால், 1983இல் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் அந்தக் கட்சிக்கு 5 தொடக்கம் 10 ஆசனங்கள் கிடைத்திருக்கும்.
ஆனால் இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படாததால் அவர்கள் தேர்தலின் மீது நம்பிக்கையிழந்தனர். இது அவர்களில் சிலர் ஆயுதம் ஏந்த வழியமைத்தது. இதன் தொடர்ச்சியாக 60 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
பொருத்தமற்ற தேர்தல்கள் மற்றும் தேர்தல்களைப் பிற்போடுவது, உயிரிழப்புக்களையும், அழிவுகளையும் தான் கொண்டு வரும்.
1972ஆம் ஆண்டு அரசமைப்பின் மூலம், அப்போதைய அரசு தனது பதவிக்காலத்தை ஐந்தில் இருந்து ஆறு ஆண்டுகளாக நீடித்தது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுவிலகி, புதிய தேர்தலை எதிர்கொண்டார். அது அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணம்.
வடமத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தி, அங்குள்ள வாக்காளர்கள் தமது விருப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைவழங்கவேண்டியது, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கடப்பாடாகும்-என்றார். (5)

# அமைச்சரவையில் சிறிய மாற்றம்!

கொழும்பு, ஜூன் 12
கூட்டு அரசின் அமைச்சரவையில், சிறிய மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரை, அமைச்சரவைக்குள் உள்ளீர்த்துக்கொள்ளும் வகையிலேயே, இந்த மாற்றம்செய்யப்படவுள்ளது.
புதிதாகச் சிலருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.
முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட அறுவருக்கே பதவிகள் வழங்கப்படவுள்ளன.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தன்னுடைய தனிப்பட்ட பயணத்தைமுடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர், அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும் இடையில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது, இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அதற்கு, அரச தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளாரென்றும் அறியமுடிகின்றது. (5)

# சீனா பணம் வழங்க மறுப்பு



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியதால், இலங்கைக்குக் கிடைக்கவிருந்த இறுதித் தவணைப் பணமான, 585 மில்லியன் அமெரிக்க டொலரை தற்காலிகமாக இடைநிறுத்த சீனா நடவடிக்கை எடுத்தது.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் செயற்கைத் தீவு பகுதியைப் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த சீனா அனுமதி கோரியிருந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, சீனாசெலுத்த வேண்டியஇறுதித் தவணைப் பணத்தைச் செலுத்தாது தாமதித்து வருவதாகத் தெரியவருகிறது.(5)

## கேலிச்சித்திரம்




நன்றி: அவந்த ஆட்டிகல

# காற்றுடன் கூடிய காலநிலை படிப்படியாகக் குறைவடையும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 12
நாட்டிலும் நாட்டைச் சுற்றியுள்ள கடற் பிரதேசத்திலும் நிலவி வரும் காற்றுடன் கூடிய காலநிலை படிப்படியாகக் குறைவடையக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.
நாட்டைச் சுற்றி மேற்கு, தெற்கு, மத்திய, வடக்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் அடிக்கடி மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டது.
நேற்றுக் காலை திணைக்களம் வெளியிட்ட வானிலை அறிக்கையில் மேற்கு, சப்ரகமுவ, மத்திய ,தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஓரளவுக்கு மழை பெய்யக் கூடும் என்றும் குறிப்பிடப்பட்டது. (5)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு புதிய கடன் திட்டம்

## பணிப்பாளர் நாயகம் தடல்லகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12
சமுர்த்திப் பயனாளிகளின் முதலீடுகள் குறித்து மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டமொன்றுமுன்னெடுக்கப்படவுள்ளது.
இதன் மூலம், புதிய கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி, சமுர்த்திப் பயனாளிகளுக்குக் கூடுதல் கடன் தொகையை வழங்குவதே நோக்கமாகும் என்று சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் ஜே.தடல்லகே தெரிவித்தார்.
அனைத்துச் சமுர்த்தி வங்கிகளிலும், தகவல் தொழில்நுட்பத்தின் கீழ் ஒன்றிணைத்து வைப்பீட்டாளர்களுக்கு, வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
முறையான முகாமைத்துவத்தின் கீழ் வைப்பீட்டாளர்கள், வங்கி மீது கொண்ட நம்பிக்கை மேலும் அதிகரித்ததால், 2016ஆம் ஆண்டிலும் பார்க்க 2017 ஆம் ஆண்டு சமுர்த்தி வங்கியின் வருமானம் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (5)

# வீட்டாரை மிரட்ட சவப்பெட்டி வாங்கிய வர்த்தகர்

கொழும்பு, ஜூன் 12
மீரிகம தலாகொலயாய பிரதேசத்தில் ஹோட்டல் உரிமையாளர் சவப்பெட்டியையும், இறப்பு வீடுகளுக்குப் பயன்' படுத்தப்படும் பொருள்களையும் கொள்வனவு செய்து வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.
அவரது வீட்டில் எவரும் உயிரிழக்காத நிலையில், வர்த்தகர் இவ்வாறு செயற்பட்டமை குறித்துச் சந்தேகம் ஏற்பட அயலவர்கள் இது குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.
இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் வீட்டுடன் கூடிய ஹோட்டலைச் சோதனையிட்டபோது சவப்பெட்டி உள்ளிட்ட பொருள்களைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.
உயிரிழப்பு நிகழாத நிலையில் ஏன் இவ்வாறு சவப்பெட்டி கொள்வனவு செய்யப்பட்டது என்று பொலிஸார் கேள்வி எழுப்பியுள்ளனர்.
குடும்பத்தினர் தம்மை ஒழுங்காக கவனிப்பதில்லை எனவும் அவர்களை அச்சுறுத்தும் நோக்கில் சவப்பெட்டிக் கொள்வனவு செய்ததாகவும் ஹோட்டல் உரிமையாளர் தெரிவித்தார்.
சவப்பெட்டியொன்றை வீட்டில் வைத்திருப்பது சட்ட விரோதமான செயல் கிடையாது என்றபோதிலும், சவப்பெட்டியை மீளவும் மலர்ச்சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (5)

# வடக்கு மக்களின் மனங்களை வெல்ல தமிழ் தலைமைகள் தவறுகின்றனவா?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஜூன் 12

மக்களுடன் கலந்து வாழ்ந்து மனங்களை வெல்ல, வடக்கின் தமிழ்த் தலைமைகள் தவறி வருகின்றனவா? இது கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்டப் போக்கா ? அல்லது இந்தப் போக்கு யாழ்ப்பாணத்தையும் ஆட்கொண்டு வருகிறதா? நடிகர் – வழி – அரசியலர் ரஜினிகாந்த், தெரிந்தோ தெரியாமலோ தமிழகத்தைப் பற்றி சொன்னது போல, ஈழத்து வடக்கில் 'சிஸ்டம்' சரியில்லையா? அல்லது ஒட்டுமொத்த 'சிஸ்டமுமே' சரியில்லையா? அமைச்சர் மனோகணேசன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.



சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு கட்டளை அதிகாரி கேணல் ரட்ணப் பிரிய பந்துவுக்குக் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், மக்கள் கண்ணீர் மல்கப் பிரியாவிடை கொடுத்தனுப்பினர். இந்தச் சம்பவம் தொடர்பில் முகநூலில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

சற்று முன் கேணல் ரட்ணப் பிரியவுடன் பேசினேன். "ஐந்து ஆண்டுகளாக ஒரு கணமும் ஆயுதத்தைக் கையில் எடுக்காமல் பணி செய்தேன். மக்கள் மனங்களை வெல்ல முடிந்தது, சேர். இனியும் பணி செய்யக் காத்திருக்கேன்" - என்றார். இது பற்றி எனக்குத் தெரியும் என்றேன்.

ஏனெனில் கடந்த சில மாதங்களுக்கு முன், கொழும்பில் என் அமைச்சுக்குப் படையெடுத்து வந்து என்னைச் சந்தித்த, பெருந்தொகை முன்னாள் போராளிகள் குழுவினர், இவரது இடமாற்றத்தை இல்லாமல் செய்யுமாறு மன்றாடிக் கண்ணீர் விட்டு அழுது கேட்டுக் கொண்டார்கள்.

மூன்று ஆண்டுகள் இராணுவ சேவையை முடித்தவர்கள் இடமாற்றம் பெறவேண்டும் என்ற பின்னணியில், ஐந்து ஆண்டுகள் பணியில் இருந்துவிட்ட இவரது இடமாற்றத்தை, மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், சில மாதங்களுக்கு மாத்திரமே தாமதிக்க என்னால் முடிந்தது.

இப்போது ரட்ணப் பிரிய இடமாற்றம் பெற்றுத் தெற்கின் கம்பகா மாவட்ட அம்பேபுஸவுக்குப் போகிறார். நிற்க, இது இப்படியே இருக்க, பூதாகரமாக எழும் கேள்வி, இது எப்படி? என்ன காரணம்?

மேற்கண்ட மற்றும் கீழ்வரும் கேள்விகள் பலவற்றுக்கு என்னிடம் பதில்கள் அல்லது கருத்துக்கள் உள்ளன. அவைபற்றி இங்கு இப்போது சொல்ல வரவில்லை. சொன்னால் வடக்கிலும், தெற்கிலும் இருக்கும் கோமாளிகள் சிலருக்குக் கோபம் வரும். இதை எதிர்மறையாகப் பார்க்கலாமா? நேர்மறையாகப் பார்க்கலாமா? இத்தகையை உபசரிப்பு, வெளிப்படையான ஆதரவு, இன்று வடக்கில் அரசியல்வாதிகள் எவருக்கும் இருக்கிறதா? தெரியவில்லை.

அது ஒருபுறம் இருக்க, இன்று 'சிங்கள இராணுவம்', 'மங்கள இராணுவம்' ஆகிறதா? இது நல்லதா? கெட்டதா? என்று பதிவிட்டார். (5)

போர் இல்லாத நிலையில்

# இலங்கை வான்படைக்கு ரூ.64.8 பில். ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன் 12

வான்படைக்கு 64.8 பில்லியன் ரூபாவுக்கு, பல்வேறு வகையான உலங்கு வானூர்திகளையும், ஆளில்லா வேவு வானூர்திகளையும் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காகப் பாதுகாப்பு அமைச்சு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை விரைவில் அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எயர் வைஸ் மார்சல் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஓய்வுபெற்றதை அடுத்து, முன்னர் இருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பணிகள் செயலிழந்தன.

ரஷ்யாவிடமிருந்து பத்து எம்ஐ 171 எஸ்எச் உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்யும் திட்டம் இதில் பிரதானமானது. இவை போக்குவரத்து மற்றும் போர்த் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடியவை.

இதற்காக, 2015ஆம்ஆண்டு ரஷ்யாவால் அறிவிக்கப்பட்டு, மீண்டும் புதுப்பிக்கப்பட்ட 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்த முடியும்.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் கடற்படைக்கு ரஷ்யாவிடம் இருந்து ஜிபார்ட் 5.1 போர்க் கப்பலை வாங்கத் திட்டமிடப்பட்டது. இந்தியாவிடம் இருந்து வாங்கும் ஆழ்கடல் ரோந்துக் கப்பலை விட இது விலை அதிகம் என்பதால், இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அதேவேளை, வான்படை நான்கு எம்ஐ 17 உலங்கு வானூர்திகளைக் 14.3 பில்லியன் ரூபாவுக்கு வாங்கத் திட்டமிட்டது. ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளுக்கு இவை தேவையாக உள்ளன.

ஐ.நா. சட்டவிதிகளின் கீழ் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள் தமது சொந்தத் தளபாடங்களையே பயன்படுத்த வேண்டும். இந்த முதலீட்டை மீட்க நீண்டகாலம் செல்லும்.

இதைவிட, வான்படைக்கு நான்கு ஆளில்லா வேவு வானூர்திகளை 6.2 பில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யவுள்ளது.

மேலும் ஆறு பயிற்சி உலங்குவானூர்திகளை 4.87 பில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யும் திட்டமும் உள்ளது.

மிக முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டுக்காக, 11.48 பில்லியன் ரூபாவுக்கு இரண்டு பெல் 414 உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டது.

பயன்படுத்தப்பட்ட இரண்டு பெல் 206 பி ஜெட் ரேஞ்சர் உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்யும் திட்டமும் வான் படையிடம் உள்ளது.

பெல் உலங்குவானூர்திகளின் கொள்வனவுகள் அனைத்தையும் சிங்கப்பூரிலுள்ள தரகர் மூலமே மேற்கொள்ளப்படவுள்ளன. அந்தத் தரகரே, வெளிநாட்டுக்கடன்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வார். அந்தத் தரகர் யார் என்று இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

மிக முக்கிய பிரமுகர்களின் பயணத்துக்காகப் பயன்படுத்தப்படும் பெல் 414 உலங்கு வானூர்திகள் ஒப்பீட்டளவில் சிறியவை. மேற்குலக முக்கிய பிரமுகர்கள் ரஷ்ய தயாரிப்பு உலங்கு வானூர்திகளிலேயே பயணம் செய்கின்றனர். ஐ.நாவின் பயன்பாட்டில் எம்.ஐ.17 உலங்கு வானூர்திகளே உள்ளன.

வான்படைக்கு மாத்திரம் 64.8 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இப்போது போர் இல்லாத நிலையில் இத்தகைய பெரிய கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை என்ன? எனினும், முப்படைகளின் பயன்பாட்டிலுள்ள போர்த்தளபாடங்கள் புதுப்பிக்கப்பட்டு, நவீனமயப்படுத்தப்படவேண்டும் என்ற வாதமும் உள்ளது.

பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ள போது, வரி செலுத்துபவர்களின் பணத்தை இராணுவ ஆயுதக் கொள்வனவுகளுக்குப் பயன்படுத்துவது முறையா என்ற கேள்வியும் உள்ளது. இப்போது அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் சூழல் இல்லை. அதைவிட, பொருளாதாரத்தில் சில துறைகளுக்கு உதவ வேண்டுமாயின், படைக்குறைப்பை செய்யவேண்டும் என்று சிலமேற்குலக அரசுகள் கோர ஆரம்பித்திருக்கின்றன, என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (5)



## இணைய வர்த்தகம் குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 12

இணையத்தளம் ஊடாக இடம்பெறும் நிதி மோசடி தொடர்பில் வர்த்தகர்கள் அவதானமாக இருக்குமாறு இலங்கைக் கணினி அவசரப் பிரிவு எச்சரிக்கை விடுத்தது.

இணையத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வோர், பொருள்களைக்கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவு செய்யும் கணக்குகள் தொடர்பில் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

மின்னஞ்சல் ஊடாகத் தகவல் உறுதி செய்த பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு தகவல் தொழில்நுட்ப மூத்த பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்தார்.

மின்னஞ்சல்கள் ஊடாக மோசடியாளர்களால் வழங்கப்படுகின்ற கணக்கு இலக்கங்கள் மூலம் நிதி மோசடி செய்யப்படுவதாக இலங்கை கணினி அவசரப் பிரிவு தெரிவித்தது.

அவ்வாறு 10 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா மேலும் தெரிவித்தார். (5)

# இலங்கையில் காலூன்றியுள்ள 62 சீன அரசு நிறுவனங்கள்

கொழும்பு, ஜூன் 12

சீன அரசுக்குச் சொந்தமான, 62 நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்திருக்கின்றன அல்லது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சீன வங்கியின் முகாமையாளர் சுவான் வொங் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடுகளைச் செய்துள்ள மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 62 சீன அரசு நிறுவனங்களில் 26 நிறுவனங்கள் தமது பிராந்தியத் தலைமையகங்களை இலங்கையில் அமைத்தனர். இதனால்தான், தெற்காசியாவில் எமது தலைமையகங்களில் ஒன்றாக இலங்கையைத் தெரிவு செய்தோம். இந்தக் கிளை மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளிலுள்ள எமது கிளைகளின் வணிக நடவடிக்கைகளைக் கவனிக்கும்.

மூலோபாய அமைவிடம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் ஏனைய கவரும் தன்மைகளால், எதிர்காலத்தில் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் இடமாக இலங்கை மாறும். கொழும்பில் எமது கிளையைத் திறக்கும், பிராந்தியத் தலைமையகத்தை அமைக்கும் முடிவில் அதுவும் செல்வாக்குச் செலுத்தியது, என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, சீனத் தூதரக, பொருளாதார விவகாரங்களுக்காகப் பணியகத்தின் அதிகாரியான, யா சூயுவான், அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் முதலீடு செய்வதற்குச் சீன நிறுவனங்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் மிக முக்கியமான வெளிநாட்டு நேரடி முதலீட்டு வளமாகச் சீனா மாறியுள்ளது. சீனாவுக்கான ஏற்றுமதி மற்றும் முதலீடுகளை கவருதல் முக்கியமானது.

கடந்த ஆண்டு சீனாவில் இருந்து 2 லட்சத்து 70 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தனர். இது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான பங்களிப்பாகும். கடந்த சில ஆண்டுகளில் சீனாவின் பொருளாதாரம் உயர்ந்தளவு வீதத்தில் வளர்ந்து வருகிறது, என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மையில் முறைப்படி ஆரம்பிக்கப்பட்ட சீன வங்கி, ஜூலை மாதம், கொழும்பில் தனது கிளையைத் திறக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# கோத்தாவின் பாதை தவறானது

## 'யூரேன்' அடிக்கிறார் தயான்


கொழும்பு, ஜூன் 12

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார் என்று, முன்னாள் இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

சிங்கள வார இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கோத்தபாய ராஜபக்ச தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார். அவரைச் சுற்றிப் பண முதலைகளும், கடும்போக்கு இராணுவத்தினரும்தான் இருக்கிறார்கள்" என்றும் கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்சவின் அரசியல் பாதையை உருவாக்குவதற்காக, எலிய அமைப்பை ஆரம்பிப்பதில் முக்கிய பங்காற்றியவர் தயான் ஜயதிலக என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு தற்போது ரஷ்யாவுக்கான தூதுவர் பதவி வழங்கப்படலாம் என்று கூறப்பட்டுவருகின்ற நிலையிலேயே, மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)




## திட்ட அலுவலகத்துக்கான வாடகைக் கட்டடத்தினைப் பெறுவதற்கான கோரிக்கை

**திட்ட அலுவலகத்துக்கான பின்வரும் வசதிகள் மற்றும் நியந்தனைக-ளின் அடிப்படையில் வாடகைக்கு கட்டடத்தினை வழங்க விரும்புப வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. வதிவிட அளவு குறைந்தது 2200 சதுர அடிகளைக் கொண்டதாகவும் அண்ணளவாக ஆறு அறைகளுடன் பெரியளவிலான மண்டபம் கொண்ட தாகவும் ஆகக் குறைந்தது இரு வாகன தரிப்பிட வசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் இலிருந்து (இல #63. நல்லூர் குறுக்குவீதி. நல்லூர்) 1km சுற்று வட்டத்திலும். பிரதான வீதிகளுக்கு அண்மையிலும். யாழ்ப்பாண மாநகர எல்லைக்கு உட்பட்டு இருப்பதும் விரும்பத்தக்கது.
3. முற்பணம்,வழங்கப்படமாட்டாது
4. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் **வீட்டு உரிமையாளரின் முழுப்பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்-பார்க்கும் மாதாந்த வாடகைத் தொகை** ஆகிய விவரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கிய தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் **" திட்ட அலுவலகத்துக்கான வாடகைக் கட்டடம்"** என எழுதப்பட்ட கடித உறையினுள் இடப்பட்டுப் பிரதிப் **பிரதம செயலாளர் அலுவலகம், திட்டமிடல், வடக்கு மாகாணம், இல.#63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 2018.06.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (CS31942)(11,17)

## மரணஅறிவித்தல்



தோற்றம் 18 . 01 . 1928 — மறைவு 10 . 06 . 2018

### சுப்பிரமணியம் சிவப்பிரகாசம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த கந் தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**184, அரசடி வீதி,**
**கந்தர்மடம்.** (CS 17412) (14,17)

**தகவல்:**
**சி.அருள்நாதன்(மகன்)**

**021 221 9036/ 077 631 6668**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கணபதிப்பிள்ளை சுவாமிநாதன்

**(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், முன்னாள் இ.போ.ச.சாரதி - பருத்தித்துறை)**

தோற்றம் 13.03.1934 — மறைவு 13.05.2018

கடந்த 13.05.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் கணபதிப்பிள்ளை சுவாமிநாதன் அவர்களின் அந்தி-யேட்டிக் கிரியைகள் இன்று (12.06.2018) செவ்வாய்க்கிழமை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்திலும் நடைபெறும். நாளை (13.06.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சுகயீனம் உற்றிருந்த காலத்தில் ஆதரவு வழங்கிப் பார்வை யிட்ட வைத்தியர்கள். வைத்தியசாலை ஊழியர்கள். உறவினர்கள். அன்பர்களுக்கும். மரண நிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல்மொழி பகிர்ந்தோருக்கும். கண்ணீர் அஞ்சலிகளை வழங்கியோருக்கும் மற் றும் பல உதவிகளை எமக்குத் தந்து துயர்துடைத்தோருக்கும். தொலை பேசியூடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது நன்றி-களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**இல்லம் - 076 938 8361**
**தமிழ்மாறன் (மகன்)- (001)64796 94917**
**தமிழ்ச்செல்வன் (மகன்) - (0045) 7561 0319**

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(CS17351)(11,17)

Galaxy Star
வெற்றி வாரம் 255 / திகதி 10.06.2018
வெற்றி இலக்கங்கள் 11 02 12 29 51
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,817,072/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 300
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.06.10
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 82,977,493/-
V 17 21 29 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 778

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலகத்தின்
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி அலுவலர்
**தெய்வேந்திரம் வினோதன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்

### கனகசபை தெய்வேந்திரம்

அவர்கள் 08.06.2018 வெள்ளிக்கிழமை காலமடைந்துவிட்டார். பிரிவுத்துயரிலுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம் - தென்மராட்சி** (IN 7006) (14,17)

## வாடகைக்கு விடப்படும்

ஆட்டோ மெக்கானிக் கராஜ் நடத்துவதற்கு ஏற்ற இடம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு விடப்படும்.
**இடம்:- ஓட்டுமடம் சந்தி.** (CS17414)(11,17)

**071 131 0048**

## காணிவிற்பனைக்கு

A9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 2 பரப்புக்காணி உடனடி விற்பனைக்குண்டு.

**077 386 7124** (IN/9485) (11,17)

## தவறிவிட்டது

இரத்தினசிங்கம் நிரஞ்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை ( 751592035V). வாகன சாரதி அனுமதிப்பத்திரம். வரிப்பத்திரம். Celinco Insurance ஆகியன 06.06.2018 புதன்கிழமை ஸ்ரான்லி வீதி யில் பழைய தபாற்கந்தோர் வீதியூடாக பஸ் தரிப்பிடத்-துக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 412 0208, 021 222 2717** (CS/17413)(11,17)

## உதயன்

**விளம்பர தொடர்புகளுக்கு,**
**advt@uthayan.com,**
**021 493 1111**

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியச் சபை
## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு கட்டட வசதி தேவை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

ரெண்டர் தொடர்பிலக்கம் - ETF/SS/PUR/PN/2018/096

குறிப்பிட்ட கட்டடத்தில் பின்வரும் வசதிகள் இருத்தல் வேண்டும்.

- ஆகக் குறைந்தது 1500 - 2000 சதுர அடிபரப்பு
- நகரத்திலிருந்து 02 கி.மீ. தூரத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்
- வாகனதரிப்பிடம் / துவிச்சக்கரவண்டிகள் 10 நிறுத்தக் கூடிய வசதி
- மூன்று கட்டமின்சாரம் (Three phase)
- தொலைபேசி வசதிகள்
- குழாய் நீர் வசதி
- பொதுமக்களுக்கு இலகுவான பிரவேச வழி இருத்தல் வேண்டும்
- குத்தகைக் காலம் ஆகக் குறைந்தது 03 வருடங்கள்

தங்களது விலைமனுக்களை வழங்கல் பிரிவு. **இல. 44/5, 04 ஆம் மாடி நாராஹேன்பிட்ட வீதி**, நாவலை என்ற முகவரிக் குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரில் சமுகமளித்தோ **2018.07.03 மு.ப. 10.30 மணிக்கு முன்னர் வழங்கல் பிரிவிலுள்ள இல. 05 ரெண்டர் பெட்டியில் இடுவதற்கு முடியும்.**

மேலதிக தகவல்களுக்குப் பிரதிபொது முகாமையாளரை (சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள்) அழைக்க. தொ.இல. **0112504982**

விலைமனுக்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"கட்டட இடவசதி– யாழ்ப்பாணம்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி**
**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை**
**த.பெ. 807,**
**கொழும்பு - 05.**

சேவைக்காலம் சேர்க்கப்படாது

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வடக்கு முதலமைச்சரிடம் மனு

யாழ்ப்பாணம், ஜூன்12

சேவையாற்றிய 3 வருட சேவைக்காலம் சேர்க்கப்படாதுபாதிக்கப்பட்டஆசிரியர்கள்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்குமாகாணத்தின்வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் 01.07.2013இல் ஆசிரியர் நியமனம் கிடைத்துச் சேவையாற்றும் ஆசிரியர்களின் மூன்று வருட சேவைக்காலம் சேர்க்கப்படாதுள்ளது. இதனால்அவர்கள் சம்பள ஏற்றம், பதவி உயர்வு என்பவற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் பல்வேறு தரப்பினரிடமும், அரசியல் வாதிகளிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனிடமும் கோரிக்கைவிடுத்தனர்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர்கள், கடந்த6ஆம்திகதிகாலை10 மணிக்கு கைதடியிலுள்ள வடமாகாண சபை பேரவைச்செயலகத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை சந்தித்துக் கலந்துரையாடி தமது பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்து, தமது கோரிக்கைகள் அடங்கிய மனுஒன்றையும்கையளித்துள்ளனர்.

குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் கடந்த 01.07.2013 இல் ஆசிரியர் நியமனம் கிடைத்து ஆசிரியர்சேவைக்குள் இணைத்துக்கொள்ளப்பட்ட எமது சேவைக் காலம் 01.08. 2016இல்இருந்துதற்போது கணிக்கப்பட்டுள்ளது. இதனால்எமதுசேவைக்காலம் மூன்று வருடங்களால் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த போர் காலம் உள்ளடங்கலாக கடந்த 15வருடத்துக்கும் மேலாக எந்தவித கொடுப்பனவுமற்ற நிலையில் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வந்த எமக்கானநிரந்தரஆசிரியர் நியமனம், அரச கட்டுப்பாடற்ற பகுதியில் வசித்தோம் என்ற காரணத்தாலும், அரசியல் காரணங்களாலும் அப்போது வழங்கப்படவில்லை.

கடந்த 2009ஆம் ஆண்டு வடமாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது கூட நாம் மட்டும் புறக்கணித்து ஒதுக்கப்பட்டோம்.

நிரந்தர நியமனத்தில் நாம் தொடர்ந்தும் திட்டமிட்டுப் புறக்கணித்துஒதுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி எமக்கான நியமனத்தை வலியுறுத்தி நாம் தொடர்ச்சியாக மேற்கொண்ட போராட்டம் காரணமாக கடந்த 01.07. 2013இல் எமக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதாகக் கூறி வடமாகாணக் கல்வி அமைச்சால்ஆசிரியஉதவியாளர் என்னும் நியமனம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாம் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைப்பயிற்சிகளையும் முடித்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறியுள்ளோம்.

இந்த நிலையில் எமது சேவைக்காலத்தில்மூன்று வருடத்தைச் சேர்க்காமல் விட்டுள்ளமையால் ஆசிரியர்சேவையில்எமதுபதவி உயர்வு, சம்பள ஏற்றம் போன்றவற்றிலும்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

முன்னைய காலங்களிலும், தற்போதும்தொண்டர் ஆசிரியர்களுக்குஆசிரியர் சேவை தரம் 311 என்ற நியமனமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எமக்கு மட்டுமேஆசிரியஉதவியாளர் என்ற நியமனம் வழங்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

எனவே எமது சேவைக் காலம், வயது என்பவற்றைக் கருத்தில்கொண்டு எமக்கு வடமாகாணக் கல்வி அமைச்சால் நியமனம் வழங்கப்பட்ட 01.07. 2013இல் இருந்து எமது சேவைக் காலத்தை ஆசிரியர் சேவை தரம் 311 ஆகக் கணித்துவிடுபட்டுள்ளஎமது சேவைக் காலத்தையும் சேர்க்கஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (எ-426)

# பளை கரந்தாய்க் காணிகள் இந்த வாரம் அளக்கப்படும்

*மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு*

**கிளிநொச்சி, ஜூன் 12**

**பளை கரந்தாய் காணிகளை இந்த வாரம் அளப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய காணி சீர்திருத்த உதவி பணிப்பாளர் தமக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே கரந்தாய் கிராமம் ஆகும்.

பளை கரந்தாய் கிராம சேவகரின் பிரிவில் 1976ஆம் ஆண்டு குடியமர்ந்த மக்கள் இடப்பெயர்வுகளின் பின்னர் மீண்டும்2010ஆம்ஆண்டுகுடியமர்ந்திருந்த மக்களை தென்னை பயிர்ச் செய்கை சபை 2015ஆம் ஆண்டு அடாவடியாக அங்கிருந்து வெளியேற்றியது.

இதில்பலர்பளைபொலிசாரால்கைதாகியும் இருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அந்த காணிகள் மக்களுடைய காணிகள் ஆக இருந்தால் அதற்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டதுடன்கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த மக்கள் பல்வேறு இடங்களுக்குச்சென்றும்பயன் கிடைக்காத நிலையில் யாழ்ப்பாண மனிதஉரிமைகள்ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

இதன் பயனாக மக்களுடைய காணிகளை இரு வாரங்களுக்குள் மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்என உரிய அதிகாரிகளுக்கு யாழ்ப்பாணமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவால் தை மாதம் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்படத்தக்கது. இருந்தும் இதுவரைஅதற்கானஏற்பாடுகள்செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது.

கடந்த மாதம் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக்குழுகூட்டத்திலும்குறித்தகாணிகள்மாத இறுதிக்குள்மக்களிடம்கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்என காணிசீர்திருத்த ஆணைக்குழுவின் உதவி பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை அதற்கானஆரம்பவேலைகள்கூட இடம்பெறவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் கனகராஜிடம்கேட்டபோது, யாழ்ப்பாணப்பிராந்திய காணி சீர்திருத்த உதவி பணிப்பாளரால் இந்த வாரம் அளவீடுகள் செய்யப்படும் எனவும் அதற்கான அனுமதிகள் கிடைக்பெற்றுள்ளது என்றும் கடந்தவாரம்தெரிவிக்கப்பட்டதுஎன்று தெரிவித்தார்.

இது தொடர்பாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிராந்திய உதவி பணிப்பாளரிடம்தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட போது அவர் எமது அழைப்புக்கு பதில் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# சுவாசக் குழாயிலிருந்து 50 கிராம் இரும்பு 9 வருடங்களின் பின்னர் அகற்றப்பட்டது

*யாழ். போதனா மருத்துவமனையில் சத்திரசிகிச்சை; ஆட்லறி வகைக் குண்டின் பகுதி என்று தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஜூன்12

ஆட்லறி வகைக் குண்டின் சுமார்50கிராம்நிறையுடைய இரும்புப்பகுதியை 9 வருடங்களாகச் சுவாசக் குழாயில் சுமந்துகொண்டு அந்தரித்த இளைஞனுக்கு யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் வெற்றிகரமாகச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனை வரலாற்றில் நீண்ட காலத்தின்பின்னர் இந்த வகைச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு உட்பட்ட இளைஞனுக்கே இவ்வாறுசத்திரசிகிச்சைசெய்யப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில்குண்டுத்தாக்குதலில்ஆட்லறிவகையானதுஎன்றுநம்பப்படும்குண்டு வெடித்தபோது அதன் பகுதி அவருக்குள் பாய்ந்துள்ளது. அது அவரதுவலதுதோள்மூட்டுக்குக்கீழேமுதுகுப்புறமாகத் துளைத்தவாறு உள்ளே சென்றுள்ளது. வவுனியாவுக்கு பொதுமக்களுடன் இடம்பெயர்ந்தார் அவர். வவுனியாமருத்துவமனையில்சிகிச்சைபெற்றார். அவருக்குக் குண்டின்பகுதிதாக்கியதாகக்கருதியேசிகிச்சைபெற்றார்.

"நாள்கள்சென்றன, காயம்மாறியது. ஆனால்அதன்பின்னர்என்னால்பாரதூரமானவேலைகளைச்செய்யமுடியவில்லை. நிமிர்ந்தோ சரிந்தோ படுத்துறங்க முடியாது, குப்புறவேபடுத்துஉறங்கமுடியும். அவ்வாறுபடுத்தாலும் இருமல் விடாது இருந்துகொண்டே இருக்கும்"

அதன் பின் "இருமல், சளித் தொல்லை தாங்கமுடியாது 2 வருடங்களின் பின்னர் 2011 ஆம் ஆண்டு கிளிநொச்சி மருத்துவமனைக்குச்சிகிச்சைக்குச்சென்றேன்.

அங்கு மருத்துவர்கள் எனது நெஞ்சுப் பகுதியை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பின்னர்தான் இரும்புத் துண்டு ஒன்று எனது நெஞ்சறையில் உள்ளது என்று கூறினர். எக்ஸ்ரே கதிர் மூலமாக எடுத்தபடத்தையும் காண்பித்தனர். என்னால் அதை நம்பவே முடியவில்லை" என்றார் காயமடைந்த இளைஞர். பின்னர் யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காகக்கொழும்பிலுள்ளஇரண்டுமருத்துவமனைக்குச் சென்றும்சிகிச்சைபெறமுடியாதுதிரும்பிவரவேண்டிய நிலை ஏற்பட்டது.

பின்னர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுஇன்றுவரைசிகிச்சைபெற்றுவந்தஅவர்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இருதய நெஞ்சறைசத்திரசிகிச்சைப்பிரிவுக்குஒன்றரைமாதங்களுக்குமுன்னர்மாற்றப்பட்டார். அங்குஇருதயநெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் எம்.எஸ். முகுந்தன் பரிசோதனை செய்துசத்திரசிகிச்சைசெய்யநடவடிக்கைஎடுக்கப்பட்டது.

"கடந்த வியாழக்கிழமை சுமார் 6 மணித்தியாலங்கள் சத்திர சிகிச்சை செய்து அந்தப் இரும்புத் துண்டு அகற்றப்பட்டது. குறித்த குண்டின் பகுதி வலதுபுற நுரையீரல் சுவாசக் குழாயில் தங்கி நின்றுள்ளது. அது சுவாசப்பை ஊடாகவேசுவாசக்குழாய்குள்சென்றிருக்கவேண்டும்ஆனால் அது எப்படி நகர்ந்தது என்பது விசித்திரமாகவே உள்ளது. குண்டின் பகுதி தங்கியிருந்த இடத்தில் சுவாசக்குழாய் விரிவடைந்து குழாய் சேதமடைந்து அதில் சளி தேங்கி அவருக்குச் சிக்கலைக் கொடுத்துக்கொண்டிருந்தது. இரும்பினாலான அந்தக் குண்டின் பகுதி சுமார் 50 கிராம் நிறையுடையது" என்று சத்திரசிகிச்சை செய்த மருத்துவ நிபுணர் முகுந்தன் தெரிவித்தார்.

மயக்க மருந்து நிபுணர் பிறேமகிஸ்ணா தலைமையிலா குழு, தாதியர் குழு, மருத்துவஉதவியாளர் குழுஆகியவற்றின் உதவியுடன் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. (எ-4)



கிளிநொச்சிமாவட்ட சதுரங்கசங்கத்தால் நடத்தப்பட்ட 2018 ஆம்ஆண்டுக்கான சதுரங்கபோட்டியில்பெண்கள்பிரிவில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலத்தைச் சேர்ந்த பு. கலையிசை 12வயதுப் பிரிவில் முதலாம் இடத்தையும் பு. நந்துஷா 10வயதுப் பிரிவில் முதலாம் இடத்தையும் ஆ. பிரணகா 12வயதுப் பிரிவில் 9ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (222)

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் சகலரும் குறுநில மன்னர்களே!

*கூறுகிறார் உள்ளூராட்சி உறுப்பினர்*

யாழ்ப்பாணம், ஜீன் 12
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவருமே குறுநில மன்னர்களாகவே கருதப்படுகின்றனர்.
இவ்வாறு நல்லூர் பிரதேச சபை உப தவிசாளர் எஸ். ஜெயன் தெரிவித்தார்.
நல்லூர்பிரதேசசபையின் அமர்வுதவிசாளர்த. தியாகமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. வரலாற்று மன்னர்களுக்கு சிலை அமைப்பதுதொடர்பானவிடயத்தைத் தவிசாளர்சபையில் முன்வைத்தார். உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். அவர்களின் சம்மதத்தோடு யாழ்ப்பாணம்திருநெல்வேலிச்சந்தியில்சிலைவைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
அதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களில் சங்கிலியமன்னன், எல்லாளன், பண்டாரவன்னியன், காக்கைவன்னியன், ராஜசிங்கன், கீர்த்திசிங்கன் போன்ற மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். அவர்கள் கல்வி, கலை, கலாசாரத்திலும் தமிழர் வரலாற்றில் அழியாது இடம்பிடித்துள்ளனர். சங்கிலியமன்னன் யாழ்ப்பாணத்தை நல்லாட்சி புரிந்த மன்னனாகவும் அவருடையஅரண்மனை, இராசதானிகல்வியங்காடு நல்லூரில் உள்ளன. அவரின் ஞாபகார்த்தமாக கிட்டு பூங்காவில் அவருக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
திருநெல்வேலியில் சங்கிலிய மன்னனுக்கு சிலை அமைக்கவேண்டிய தேவைப்பாடு இல்லை. தமிழ் மன்னர்வரிசையில்பண்டாரவன்னியனுக்குச்சிலை வைப்பதற்குப் பரிந்துரைக்க முடியும். அவர் குறுநில மன்னனாக இருந்த போதும்ஆங்கிலேயரால்தோற்கடிக்கமுடியாதமன்னனாகவும், மாவீரனாகவும்திகழ்ந்தார். சூழ்ச்சியாலும் துரோகத்தாலும்தோற்கடிக்கப்பட்டார். வீரவரலாற்றுநாயகன்பண்டாரவன்னியனுக்குச் சிலை வைக்கவேண்டும்.
நல்லூர்பிரதேசசபைமுன்னர்கிராமசபையாக இருந்தபோது தவிசாளராகப் பணியாற்றியிருந்தவர் குமாரகுலசிங்கம். தவிசாளராகக் கடமையாற்றியபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.
அவருக்கு திருநெல்வேலிச் சந்தியில் சிலை வைக்க ஆரம்பகாலத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதனால்எமதுநிலத்தைஆண்ட மன்னர்களில்ஒருவருக்குச்சிலைவைப்போம் - என்றார்.
இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த சபை உறுப்பினர் கு.மதிசுணன், சிலைவைப்பதாகஇருந்தால்நாம்தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்படபலருக்கு வைக்க முடியும்.
சிலைகள் அமைப்பதை விடுத்து அபிவிருத்திகளைச் செய்யவேண்டும். சிலை வைப்பதாக இருந்தால் நல்லூர் இராசதானிக்கு உட்பட்ட சங்கிலிய மன்னனுக்கு வைக்க வேண்டும் - என்றார். (4.8)

### பளை இத்தாவிலில்

# வீடுகளைத் தூக்கிவீசி காற்று கடுந்தாண்டவம்

*30 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன*

**பளை இத்தாவில் கிராமத்தில் குடியமர்ந்த 30 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது மண்டபத்தில்தங்கியுள்ளன. அவர்கள்தங்கியிருந்த தற்காலிக வீடுகள் காற்றால் தூக்கி வீசப்பட்டன. மேலும் பல கடுமையாகச் சேதமடைந்தன. அதனால் அங்கு தொடர்ச்சியாகத் தங்கியிருக்க முடியாது இடம்பெயர்ந்துள்ளோம் என்று பாதிக்கப்பட்டிருக்கும் அவர்கள் தெரிவித்தனர்.**





"தங்கியிருந்த தற்காலிக வீடுகள் தூக்கி வீசப்பட்டன. மேலும் பல கடுமையாகச் சேதமடைந்தன. அதனால் அங்குதொடர்ச்சியாகத்தங்கியிருக்கமுடியாதுஇடம்பெயர்ந்துள்ளோம்" என்று பாதிக்கப்பட்டிருக்கும் அவர்கள்தெரிவித்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இத்தாவில் கோவில்காடு கிராமத்தில் இந்தநிலை ஏற்பட்டுள்ளது. அண்மையநாள்களாகத் தொடர்சியாகப் பலத்த காற்று நாடு முழுவதும் வீசிக்கொண்டிருக்கிறது.
அதன்தாக்கம்குறித்தபகுதியில்குடியிருக்கும்பொதுமக்களைப் பாதித்துள்ளது.
குறித்த கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்டு தமக்கான இருப்பிடங்களைத் தாமே அமைத்து பொதுமக்கள் குடியமர்ந்துள்ளனர். இந்தநிலையிலேயே காற்றின் தாண்டவம் அவர்களது தற்காலிக வீடுகள் சின்னாபின்னமாகிஇடம்பெயர வைத்துள்ளது.
15 குடும்பங்கள் வீடுகளை விட்டுவெளியேறியுள்ளன.
அவர்கள் இத்தாவில் கிராமத்தில் காணப்படுகின்ற பொது மண்டபத்தில் தங்கியுள்ளனர். மேலும்15 குடும்பங்கள்பகுதியளவில்பாதிக்கப்பட்டுள்ளன.
'காணிகள் வழங்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் ஆகின்றபோதும் இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை.
ஆனால் வேறு சில இடங்களில் காணிகள் வழங்கப்பட்டு5 மாதங்களில்அவர்களுக்கானவீடுகள்வழங்கப்பட்டுள்ளன. தங்களுக்கு ஏன்அதற்கானநடவடிக்கை எடுக்கப்படவில்லை?' என்றுஅவர்கள்கேள்வியெழுப்புகின்றனர். தற்போது மக்களுக்கான உணவுகளை இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் அரசியல் தலைவர்கள் வழங்கி வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
'பாதிப்புகள்தொடர்பாகநேரடியாகச் சென்று' ஆராய்ந்து உரியவர்களுக்குத்தெரியப்படுத்தவுள்ளேன். உணவு வழங்கலுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது அரச சார்பற்ற நிறுவனம்ஒன்றுதற்காலிக வீடுகளை அமைத்து வருகின்றது.
அவர்களிடம் வேலைகளைத் துரிதப்படுத்தி மக்களுக்குத் தற்காலிக வீடுகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களுக்குப் பணித்துள்ளேன்' என்று பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளர் ப. ஜெயராணி தெரிவித்தார். (எ4,6)

### ஆசிரியர்களுக்கான கடன் வசதி

யாழ்ப்பாணம், ஜீன் 12
மிக குறைந்த வட்டியில் வடமாகாணத்தில் உள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தேசியசேமிப்புவங்கியின் ஊடக கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கடன் பெறுவதற்கு (ஆகக்கூடியது 3.5 மில்லியன் ரூபா) விரும்பும் ஆசிரியர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

### அரச அதிகாரிகளுக்கு சபை உறுப்பினர்கள் அச்சுறுத்தலா?

மாந்தை மேற்கு சபை கூட்டத்தில் குற்றச்சாட்டு

மன்னார் ஜுன் 12
மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்தில் கடமையாற்றுகின்றசில அதிகாரிகளையும், ஒரு சில கிராம அலுவலகர்களையும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சிலர் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருவதாக மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.
மாந்தை மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாந்தை மேற்குபிரதேசசெயலாளர் எஸ். கேதீஸ்வரனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.
அங்கு அதிகாரிகள் சிலரே இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள்மேலும்தெரிவித்ததாவது:
உங்களை தூக்குவோம், இடமாற்றம் செய்வோம் என அதிகாரிகளை அவர்கள் அச்சுறுத்துகின்றனர்.
மேலும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டஆளும்தரப்பு உறுப்பினர்கள் சிலர் பிரதேச செயலாளர் போன்று செயற்படுவதோடு தவறான முறையில் காணிகளைமக்களுக்குவழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.
தமது சட்ட விரோத செயற்பாடுகளுக்குஎதிராகசெயற்படுகின்ற அதிகாரிகளுக்கு எதிராகவே அவர்கள் செயற்படுகின்றனர். மிரட்டுகின்றனர். எங்களைஅச்சுறுத்தும் உறுப்பினர்களிடம் 'பெக்கோ' இயந்திரமா இருக்கின்றது எங்களை தூக்குவதற்கு? கேள்வி எழுப்பினர். எதிர்வரும் காலங்களில் இவ்வாறு செயற்பட அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர். "சபைஉறுப்பினர்கள் அச்சுறுத்தக்கூடாது. இனிமேல் அவ்வாறு நடந்தால் சபைச்செயலாளர் அதுபற்றிய உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தவேண்டும்" என்று இணைத்தலைவர்கள்தெரிவித்தனர். (எ-56)



ஒட்டுசுட்டான்

## தான்தோன்றீஸ்வரரின் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜீன் 12
வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவுஒட்டுசுட்டான்பூலோக நாயகிஉடனமர்வேகாவனேஸ்வரப் பெருமானாகிய தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்தமகோற்சவம்இன்றுசெவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சிறப்பு பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து16நாள்கள்இடம்பெறவுள்ள விழாவில் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை ,காலை தேர்த்திருவிழாவும் 27ஆம்திகதிபுதன்கிழமைதீர்த்தத்திருவிழாவும்இடம்பெறவுள்ளது.
அடியார்கள் அனைவரும் வருகைதந்து தான்தோன்றீஸ்வரப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-222,500)

# குளங்களைச் சீரமைக்க இராணுவம் வேண்டாம்

*சிவசக்தி ஆனந்தன் எம்.பி காட்டம்*

வவுனியா, ஜீன் 12
வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் மற்றும் ஈச்சங்குளம் போன்ற பகுதிகளில் உள்ள கமநல திணைக்களங்களுக்குக் கீழுள்ள குளங்களை இராணுவம் சீரமைத்து வருகின்ற நிலையில் குளங்களை இராணுவம் சீரமைப்பதை அனுமதிக்க முடியாதென ஆனந்தன் எம்.பி காட்டமாகத் தெரிவித்தார்.
வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம்நாடாளுமன்றஉறுப்பினரும், ஒருங்கிணைப்புகுழுஇணைத்தலைவருமான சிவசக்தி ஆனந்தன் விளக்கம் கோரினார்.
இதன்போது கமநல திணைக்கள அதிகாரி, "இது வவுனியா மாவட்ட செயலரின் ஏற்பாட்டின் மூலமே மேற்கொள்ளபட்டு வருகின்றது" என தெரிவித்தார்.
இதன்போது சிவசக்தி ஆனந்தன் மேற்படி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"எமது பகுதியில் ஒப்பந்தகாரர்கள் பலர் இருக்கின்றபோது இராணுவம் குளத்தைசீரமைப்புச்செய்வதன்நோக்கம் என்ன? இவ்வாறான செயற்பாட்டால்பகுதியில்உள்ளமக்கள்மத்தியில் ஒருவித குழப்ப நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பாக பகுதி மக்களுக்கு முன்னரே தெரியப்படுத்தினீர்களா?
பொதுமக்களுடன் தொடர்புடைய கட்டடங்களையோ, அல்லது குளங்களையோஅமைப்பதெனில்இராணுவத்தினரிடம் குறித்த ஒப்பந்தங்கள் வழங்கப்படக்கூடாது என்று தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்" என்று காட்டமாகத் தெரிவித்தார்.
இது தொடர்பாக எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில்பேசி முடிவெடுக்கப்பட வேண்டும்- என்றும் தெரிவித்தார். (எ-110)

# பிணைமுறி மோசடி விசாரணை அறிக்கையைச் சமர்ப்பியுங்கள்

## வலியுறுத்துகிறது ஜே.வி.பி

கொழும்பு, ஜீன் 12

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் அரசதலைவர் ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கையின் எஞ்சிய 106 ஆவணங்களும் விரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு அதன் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பேப்புச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்திடம் இருந்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ச பணம் பெற்றுக்கொண்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையும் இல்லை - என்றார். (ற-ரி5)

## ஆசிரியர்களை நியமிப்பதில் இன ரீதியில் பாரபட்சம்

### கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜீன் 12

கிழக்கு மாகாண அரச பாடசாலைகளில் தமிழ்மொழி மூல விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதில் இடம்பெற்ற இன ரீதியான பாரபட்சம் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தெரிவித்தார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"கிழக்கு மாகாணத்திலுள்ள அரச பாடசாலைகளுக்கு 216 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிக்கவுள்ளனர். இவர்களில் 88 பேர் தமிழ் மொழி மூலமும் 128 பேர் சிங்கள மொழி மூலமும் நியமிக்கப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளே அதிகம் உள்ளதையும் அதற்கு மாறாகக் குறைவாக உள்ள சிங்கள மொழிமூலப் பாடசாலைகளுக்கு அளவுக்கு அதிகமான ஆசிரியர்கள் நியமனம் செய்ய பட்டியல் வெளியாகியிருக்கும் விடயத்தையும் மத்திய அரசின் நிரல் கல்வி அமைச்சின் ஆள்சேர்ப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

இதன் காரணமாக அவர்கள் 73 தமிழ் மொழிமூல விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர் - என்றார். (ற-ரி5)

## சிறுமி கடத்தல்: சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜீன்12

அக்கரப்பத்தனை போட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த ஐந்து வயது சிறுமியின் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தலவாக்கலை லிந்துலை நகரசபையின் தலைவர் அசோக சேபால உள்ளிட்ட எண்மரின் விளக்கமறியல் எதிர்வரும் 18ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## துப்பாக்கிச் சூடு: சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜீன் 12

கிராண்பாஸ் பகுதியில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 28 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் நேற்றுப் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி கிராண்பாஸ் பகுதியில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் புத்திக ரங்க திசேரா என்ற நபர் கொல்லப்பட்டதோடு, மூன்று பேர் காயமடைந்தனர். (ற-ரி5)



## உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு

மன்னார், ஜீன் 12

வெளிச்சம் அறக்கட்டளையால் விசேட தேவைக்குட்பட்டவர்கள் வாழும் குடும்பங்களுக்கு உதவி வழங்கி வைப்பு.

மடுவிலுள்ள பூசாரியார் குளம், முள்ளிக்குளம் போன்ற பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட சிறப்புத் தேவையுடையோர் உள்ள குடும்பத்தினருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிப்பொருள்கள் வெளிச்சம் அறக்கட்டளையால் நேற்று வழங்கப்பட்டது.

இதில் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், செயலாளர் தி.கார்த்திக், பொருளாளர் செ. மேனதாஸ் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் றஜீவ் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர், பூசாரியார் குளம் முன்பள்ளி ஆசிரியர் மற்றும் சுரேஷ் போன்றவர்களும் கலந்துகொண்டனர். (ற-ரி4,110)

## மன்னார் சதொச வளாகத்தில் அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பம்



மன்னார், ஜீன் 12

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள விற்பனை நிலைய வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புகள் அகழ்வுப் பணி நேற்றுடன் 11ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணியை மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இந்த அகழ்வுப் பணி சிறப்பு சட்ட மருத்துவ நிபுணர் டபில்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஸ தலைமையிலான குழுவினராலும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோம தேவா தலைமையிலான குழுவினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்றைய நாள் அகழ்வு பாணிக்கான ஒத்துழைப்பை வழங்குவதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பாக அதன் உத்தியோகத்தர்களும், சிறப்புத் தடவியல் நிபுணத்துவ பொலிஸார், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள், சட்டத்தரணிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற,ரி4,56)

## மணல் கடத்திய சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு,ஜீன் 12

காத்தான்குடியில் மணல் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 40 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இவரிடமிருந்து மணல் கடத்தலுக்குப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் கைப்பட்டப்பட்டது. மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## தங்க ஆபரணங்கள் கடத்தியவர் கைது

கொழும்பு, ஜீன் 12

டுபாய் நாட்டில் இருந்து தங்க ஆபரணங்களைக் கடத்தி வந்த பெண் வர்த்தகர் ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

கேகாலை வரக்காபொல பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதான பெண் வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பெண் வர்த்தகர் அணிந்திருந்த காற்சட்டையில் இந்த ஆபரணங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பெறுமதி சுமார் 80 இலட்சம் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்க அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

## நுழைவிசையின்றி தங்கியிருந்தவர் கைது

நுழைவிசையின்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவரை கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம மாவத்தையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 35 வயதான சீனப் பெண் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சீனப் பெண் கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## தொழிற்சாலையில் தீ விபத்து

கொழும்பு, ஜீன் 12

களுத்துறை, தொடங்கொடச் சந்தியில் அமைந்துள்ள இரண்டு மாடிக்கட்டடத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது.

மேல் மாகாண சபை உறுப்பினர் ஜகத் விதானாவுக்குச் சொந்தமான ஒரு ஆடைத் தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொடப் பொலிஸார் மற்றும் களுத்துறை தீயணைப்புப் படையினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் சேத விவரங்களும் மதிப்பிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தொடங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## கணவனைக் கொலைசெய்த பெண் கைது


கொழும்பு, ஜீன் 12

திம்பிரியாலந்தயில் கணவனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் பொண்ணொருவர் கைதுசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது கணவனை மனைவி அலவாங்கால் தாக்கியுள்ளார் இதன் போதே அந்த நபர் உயிரழந்தார் எனக் கூறப்பட்டது.

3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

கைதுசெய்யப்பட்ட 42 வயதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)



## சந்திப்பு வெற்றிபெற பாப்பரசர் பிரார்த்தனை

உரோம், ஜீன் 12

"அமெரிக்க அதிபர் ட்ரம்ப் -வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு வெற்றிபெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன்" என்று தெரிவித்தார் பாப்பரசர் பிரான்சிஸ்.

வத்திக்கானில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அரை நூற்றாண்டுக்கும் மேலான பகைநாடுகளாக விளங்கிவரும் அமெரிக்கா - வடகொரியா நாடுகளுக்கு இடையே சமரசத்தை ஏற்படுத்தும் வகையிலும், வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவும் சிங்கப்பூரில் நாளை மறுதினம் (இன்று) இருநாட்டு தலைவர்களும் சந்தித்துப் பேசுகின்றனர். இந்தப் பேச்சின் மூலம் கொரிய தீபகற்பத்தில் வாழும் மக்களுக்கும், இந்த ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பாதை உருவாக்கப்பட வேண்டும். அதற்காக நான் பிரார்த்திக்கிறேன்" என பாப்பரசர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## போராட்டக்காரிதான் அன்யா

இங்கிலாந்தைச் சேர்ந்த 6 வயது அன்யா ஓட்லே, அரிய வகை சிறுநீரகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறாள். சமீபத்தில் நடந்த திருமண நிகழ்ச்சியில் அன்யா பாடிய 'போராட்டப் பாடல்' உலகம் முழுவதும் வைரலாகியிருக்கிறது.

"2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு விழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது அன்யா மிகவும் சோர்வாக இருந்தாள். வயிறு கொஞ்சம் பெரிதாகத் தெரிந்ததால் உடனே மன்செஸ்டர் குழந்தைகள் மருத்துவமனையில் சேர்த்தபோது சிறுநீரகத்தில் எலுமிச்சை அளவு புற்றுக் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது.

"ஒவ்வொரு கீமோ தெரபியின் போதும் மிகவும் சோர்ந்து போனாள். ஒருகட்டத்தில் தனக்கு ஏதோ பிரச்சினை என்பதை உணர்ந்துகொண்டாள். நான் விரைவில் சாவடைந்துவிடுவேனா என்ற அவளது கேள்வி என்னை நிலைகுலைய வைத்தது. உனக்கு வந்திருப்பது புற்றுநோய்தான். ஆனால் தைரியமாக இருந்தால் அதை விரட்டிவிடலாம் என்று சொன்னவுடன், அவளின் முகம் மலர்ந்தது. அன்று முதல் கீமோ தெரபி எடுக்கும்போது பெரிய அளவில் அழுகையோ, புலம்பலோ அவளிடம் இல்லாமல் போனது. மற்ற குழந்தைகள் எல்லாம் அழுதுகொண்டிருப்பார்கள். இவள் தைரியமாக மருத்துவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பாள்.

வலியிலிருந்து அவள் கவனத்தைத் திருப்ப, அவளுக்குப் பிடித்த லிட்டில் மிக்ஸ் ஆல்பங்களை வாங்கிக் கொடுத்தேன். அதைத் கேட்டு, கேட்டு தன்னுடைய துன்பங்களை மறந்தாள். 28 தடவைகள் எடுத்த கீமோ தெரபியின் விளைவாக புற்றுக் கட்டி காணாமல் போய்விட்டது. ஜீலை வரை கீமோ எடுக்க வேண்டியிருக்கிறது. மீண்டும் புற்றுநோய் வந்துவிடாமல் இருப்பதற்காக மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும். உடலைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அன்யாவின் முடியை வெட்டி அவளுக்கு ஒரு விக் தயார் செய்து கொடுத்தோம். ஆனால் அதை அவள் அணிய விரும்பவில்லை. எனக்குப் புற்றுநோய் இருப்பது எல்லோருக்கும் தெரியட்டும், என்னைப் பார்த்து எல்லோரும் தைரியமாக இருக்கட்டும் என்று சொல்லிவிட்டாள். எங்கள் வீட்டுத் திரும ணத்தில் முதல் முறை மேடையேறிப் பாடினாள். பாட்டுக்கு இடையில், "இது போராட்டத்துக்கான பாடல். நான் நோயிலிருந்து மீண்டு வந்ததற்கான பாடல்" என்று அவள் சொன்னவுடன் அத்தனை பேரும் கண்ணீர் விட்டனர். சிரித்துக்கொண்டே பாடலைப் பாடி முடித்தாள் அன்யா. இந்தக் காணொலி சமூகவலைதளங்களில் பரவியது. இதுவரை 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பார்த்திருக்கிறார்கள்" என்கிறார் அன்யாவின் அம்மா கேத்ரின். (ம)



# ட்ரம்ப்- இன்று ே

சிங்கப்பூர், ஜீன் 12

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

கடந்த 1910ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை ஜப்பானின் ஆட்சியின் கீழ் கொரியா இருந்தது. இரண்டாம் உலகப்போரின்போது கொரியா மீட்கப்பட்டது. போரில் வென்ற வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் கொரியாவை இரண்டாகப் பிரித்தன.

ரஷ்யாவின் ஆதரவுடன் வடகொரியாவில் கம்யூனிச ஆட்சியும் அமெரிக்காவின் ஆதரவுடன் தென்கொரியாவில் முதலாளித்துவ ஆட்சியும் அமைந்தன. 1950ஆம் ஆண்டு ஜீனில் தென்கொரியா மீது வடகொரியா திடீர் தாக்குதல் தொடுத்தது. இந்த போர் 1953ஆம் ஆண்டு ஜீலை வரை நீடித்தது. இதன் பின்னரும் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் நீடித்து வந்தது.



கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பரில் கிம் ஜோங் உன், வடகொரியாவின் புதிய அதிபராக பதவியேற்றார். அதன்பின் அந்த நாடு அடுத்தடுத்து அணு ஆயுத, ஏவுகணைச் சோதனைகளை நடத்தியதால் கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்தது. வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்று அஞ்சப்பட்டது. வடகொரியா மீது ஐ.நா. சபையும் அமெரிக்காவும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன.



இந்தப் பின்னணியில் தென்கொரியாவின் தீவிர முயற்சியால் சியோலில் கடந்த பெப்ரவரியில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றது. அதன்பின் கடந்த ஏப்ரலில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னும் சந்தித்துப் பேசினர். அப்போது அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்திக்க கிம் விருப்பம் தெரிவித்தார். இதனை ட்ரம்ப் ஏற்றுக் கொண்டார். பல்வேறு குழப்பங்களுக்குப் பிறகு ஜீன் 12ஆம் திகதி அதாவது இன்றைய தினம் இரு தலைவர்களும் சிங்கப்பூரில் சந்

## பட்டுப்பாதைத் திட்டத்துக்கு இந்தியா தொ

பீஜிங், ஜீன் 12

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு இந்தியா தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகிறது.

தென் கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா, வளைகுடா நாடுகள், ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றை நிலம் மற்றும் கடல் பாதைகளால் ஒருங்கிணைத்து 'பி.ஆர்.ஐ.' என்னும் பட்டுப்பாதை திட்டத்தை சீனா நிறைவேற்ற உள்ளது. அனைத்து நாடுகளுக்கும் பயன் அளிக்கும் திட்டம் இது என்று சீனா கூறினாலும், ஆசிய பிராந்தியத்தில் அந்த நாடு தனது ஆதிக்கத்தை செலுத்தும் நோக்கத்தில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கருதி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது இந்தியா.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சீனா சுமார் 80 நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. சாங்காய் ஒத்துழைப்பு மாநாடு சீனாவின் கிங்தாவோ நகரில் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. இறுதிநாளில் இந்தியாவிடம் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு ஆதரவைக் கேட்டது சீனா. எனினும் இந்தியா மறுத்துவிட்டது.

சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள ரஷ்யா, பாகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய பிற நாடுகள் ஒப்புதல் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# -கிம்
# பேச்சு



அமெரிக்கா
ம் என்று
அமெரிக்கா
ருளாதாரத்

தென்கொ
பற்சியால்
ப்ரவரியில்
ம்பிக் தொட
பகேற்றது.
ரலில் வட
ஜாங் உன்
திபர் மூன்
ப் பேசினார்.
அதிபர் ட்ரம்
நப்பம் தெரி
ம்ப் ஏற்றுக்
குழப்பங்க
2ஆம் திகதி
தினம் இரு
ப்பூரில் சந்

தித்துப் பேச்சு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

**சிங்கப்பூரில் கிம் ஜோங் உன்**

வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் இருந்து அதிபர் கிம் ஜோங் உன், 'ஏர் சீனா' விமானத்தில் நேற்றுமுன்தினம் மதியம் சிங்கப்பூர் சென்றார். வானூர்தி நிலையத்தில் அவரை அந்த நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் வரவேற்றார். அங்கிருந்து செயின்ட் ரெஜிஸ் நட்சத்திர விடுதிக்கு கிம் சென்றார். சில மணி நேரங்களுக்குப் பிறகு சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை அதிபர் கிம் சந்தித்துப் பேசினார். அப்போது, அதிபர் ட்ரம்புடனான சந்திப்பு வெற்றியடைந்தால் சிங்கப்பூரின் பங்கு வரலாற்றில் பதிவு செய்யப்படும் என்று கிம் தெரிவித்தார். சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய உதவிய சிங்கப்பூருக்கு அவர் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

**அதிபர் ட்ரம்ப் வருகை**

கனடாவின் கியூபெக் நகரில் நடைபெற்ற ஜி7 மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அங்கிருந்து நேரடியாக சிங்கப்பூர் சென்றார். நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு சிங்கப்பூரின் விமான படைத்தளத்தில் தரையிறங்கிய அவரை, 'வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் வரவேற்றார்.

அப்போது, நிருபர்களிடம் ட்ரம்ப் பேசியபோது, "அமைதித் திட்டத்துக்காக சிங்கப்பூர் வந்துள்ளேன். இதுபோன்ற முயற்சி மிகவும் அரிய நிகழ்வு" என்று தெரிவித்தார். அங்கிருந்து சங்கிரிலா விடுதிக்கு ட்ரம்ப் சென்றார்.

**இன்று சந்திப்பு**

அதிபர் ட்ரம்பும் அதிபர் கிம்மும் சிங்கப்பூரின் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா விடுதியில் இன்று காலை 9 மணிக்கு (இலங்கை நேரப்படி காலை 6.30) சந்தித்துப் பேசுகின்றனர். இந்த சந்திப்பின்போது வடகொரியாவில் உள்ள அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்துவார் என்று தெரிகிறது. வடகொரியாவில் விரைவில் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்படும் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சந்திப்புக்காக சிங்கப்பூரின் சார்பில் இலங்கை மதிப்பில் சுமார் 330 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. (ம)



# குழந்தைப் பலி

மத்திய அமெரிக்க நாடான பெருவில் கொலம்பிய நாட்டின் சிமு கலாசாரத்தில் ஏராளமான குழந்தைகள் கடவுள் நம்பிக்கையில் பலி கொடுக்கப்பட்டத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர் கேம்பிரியல் பிரிட்டோ கூறும்போது, "இதுவரை கொலம்பியாவின் சிமு கலாசாரத்தில் 56 குழந்தைகள் பலி கொடுக்கப்பட்டுள்ளதை பெருவின் ஹன்ச்சாகோ நகரில் கண்டறிந்துள்ளோம். இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம்.

கடவுள் நம்பிக்கைக்காக பலி கொடுக்கப்பட்ட இந்த குழந்தைகளின் வயது சுமார் 6 முதல் 14 வரையில் இருக்கக்கூடும். இதில் சுவாரஸ்சிய மான தகவல் என்னவென்றால் அந்த குழந்தைகளின் கன்னத்தில் ஒரு வெட்டு காணப்படுகிறது" என்றார். (ம)

# ஹொடைடா துறைமுகத்தில் கடுமையான தாக்குதல்கள்

சனா, ஜூன் 12

ஏமனின் இரண்டாவது பெரிய துறைமுகம் ஹொடைடா. இந்தத் துறைமுகம் ஏமனின் கேந்திர வர்த்தக நிலையமாகவும் இருந்து வருகிறது. இதனால் இந்தத் துறைமுகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஏமன் அரசும், அரசுக்கு எதிரான ஹவுத்தி ஆயுதக் குழுவும் முயன்று வருகின்றன.

சமீப காலமாக ஹொடைடா துறைமுகத்துக்காக இரு தரப்பும் கடும் போரில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக அல் துர்யாமி பகுதியில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடந்த தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் ஹொடைடாவுக்கான தாக்குதல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.

தற்போது போர் நடைபெறும் பகுதியில் சுமார் 2 லட்சம் பேர் வாழுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ட்ரம்ப்-புடின் வியன்னாவில் சந்தித்துப் பேசத் திட்டம்

வொஷிங்டன், ஜூன் 12

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் வியன்னாவில் சந்தித்துப்பேசத்திட்டமிடப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரியா விவகாரத்தில் அமெரிக்கா - ரஷ்ய இடையிலான நேரடி மற்றும் மறைமுக மோதல்கள், ரஷ்ய உளவாளி ஸ்கிர்போலுக்கு அமெரிக்கா அடைக்கலம் கொடுத்தமை, ஏனைய சில பழைய கணக்குகள் உள்ளிட்டவற்றில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் சமீப காலமாக விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் ட்ரம்ப் - புடின் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்த வேண்டும் என்று பன்னாட்டு அமைப்புக்கள் பலவும் வலியுறுத்தி வந்தன. இந்தப் பின்னணியில் இவர்கள் இருவரும் ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளனர் என்று ரஷ்ய அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

புடினும் ட்ரம்பைச் சந்தித்துப் பேச அண்மையில் விருப்பம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# தொடர்ந்து மறுப்பு



# ஜின் பிங்கை இந்தியாவுக்கு வருமாறு அழைத்தார் மோடி

புதுடெல்லி, ஜூன் 12

சீன அதிபர் ஜி ஜிங் பிங்கை இந்தியா வுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி.

சாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொண்ட பின்னரேயே இந்த அழைப்பை மோடி விடுத்தார். அவரின் அழைப்பை ஜின் பிங் ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக ஜின் பிங்கின் அழைப்பை ஏற்று மோடி கடந்த ஏப்ரல் மாதம் சீனாவுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள வூகன் நகரில் இருவரும் சந்தித்துப் பேசியிருந்தனர். (ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வரலாற்றுப் பாடம்!

வரலாற்று முக்கியத்துவம் மிக்க சந்திப்பு ஒன்று இன்று நடைபெறுகிறது. அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் வடகொரிய அரச தலைவர் கிம் ஜோங் உன் இருவருக்கும் இடையிலான சந்திப்பே இன்று நடைபெறுகிறது. சிங்கப்பூரில் உச்சக்கட்டப் பாதுகாப்புக்கு மத்தியில் உள்நாட்டு நேரப்படி காலை 9 மணியளவில் (இலங்கை நேரப்படி காலை 6.30 மணி) இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர். அணுவாயுத வல்லமையுள்ள இந்த இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு வெற்றியளிக்க வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பு.

கொரியத் தீபகற்பப் போர் 1953ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கொரிய நாடுகளுக்கு இடையே தீராப்பகை நிலவிவந்தது. தென்கொரியா சாம்பராக்கப்படும், அதன் ஆதரவு நாடான அமெரிக்கா தீக்கிரையாக்கப்படும் என்றெல்லாம் முழங்கி வந்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை, அணுவாயுதச் சோதனை என்பவற்றையும் கடந்த 2016, 2017ஆம் ஆண்டுகளில் வடகொரியா மிக அதிகளவில் முன்னெடுத்திருந்தது. அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகளினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் பொருளாதாரத் தடைகளை வடகொரியா வாங்கிக் குவித்திருந்தது. மூன்றாம் உலகப் போர் ஒன்று வெடிக்குமானால் அதன் தோற்றுவாயாக கொரியத் தீபகற்பமே இருக்கும் என்கிற நிலைப்பாடே இருந்தது. இவை அனைத்தையும் மாற்றியுள்ளது ஓர் ஒலிம்பிக் தொடர்.

குளிர்கால ஒலிம்பிக் தொடர் இந்த வருடம் தென்கொரியாவில் நடைபெற்றது. தென்கொரியாவின்கடும் முயற்சியின் பயனாக வடகொரியா பங்கெடுத்தது. இதையடுத்து கொரிய நாடுகள் மீண்டும் தமக்குள் நட்புப் பாராட்ட ஆரம்பித்தன. கொரிய அதிபர்களின் சந்திப்பு இரு நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள அமைதிக் கிராமமான பான்முன்ஜியோமில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பை அடுத்து அமெரிக்க அரச தலைவர் ட்ரம்பையும் சந்திக்க விருப்பம் தெரிவித்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். இதையடுத்து இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

மூன்றாம் உலகப் போரின் தோற்றுவாயாகக் கருதப்பட்ட இரண்டு நாடுகள் இன்று பேச்சில் ஈடுபடுகின்றன. ஆயுதங்களால் பலப்பரீட்சை செய்யவிருந்த நாடுகள் இன்று அமைதிக்கான பேச்சில் ஈடுபடுகின்றன. பாராட்டப்பட வேண்டிய விடயமிது. இதே மாற்றம் ஏனைய நாடுகளிடையே நிலவும் பனிப்போர்களிலும் ஏற்பட வேண்டும் என்பதே பன்னாட்டு ஆர்வலர்களின் வேணவா.

ரஷ்யா – அமெரிக்கா, இந்தியா – சீனா, இந்தியா – பாகிஸ்தான், பாகிஸ்தான் – பங்களாதேஷ், இஸ்ரேல் பலஸ்தீனம், இஸ்ரேல் – ஈரான், ஈரான் – அமெரிக்கா, கட்டார் – சவூதி என ஆசியா, ஆபிரிக்கா, அரபு நாடுகள், மத்திய கிழக்கு, ஐரோப்பியா என்று எங்குபார்த்தாலும் போர்மேகம் சூழ்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கில் ஈரான், இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகியவற்றுக்கிடையிலான விவகாரம் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. அடுத்த உலகப்போரின் தோற்றுவாய் என்கிற நிலைப்பாடு அது. இத்தகைய போக்கைக் கைவிட்டு நிபந்தனைகள் அற்றதும், ஆத்மார்த்தமானதுமான பேச்சே அமைதிக்குத் தீர்வு என்பதை தலைமைகள் உணர வேண்டும்.

உலக நாடுகளின் பொது அமைப்பாக உள்ள ஐக்கிய நாடுகள் சபை இது விடயத்தில் காத்திரமான நகர்வுகளைமேற்கொள்ளவேண்டும். வெறும்கண்டன அறிக்கைகளுடன் தனது கடமையை முடித்துக் கொள்ளும் பாணியைக் கைவிட்டு ஆக்கபூர்வமானதை உருவாக்கும் பாதையை ஐ.நா. அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு வல்லரசு நாடுகள் தத்தமது வீட்டோ அதிகாரத்தை நியாயத்தின் பக்கமாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும். சுருங்கச் சொல்லின், பேசி முடிவெடுப்பதைத் விடுத்து முடிவெடுத்துவிட்டுப் பேசுகின்ற போக்கு உலகுக்கே பெரும் ஆபத்து.

# 2020ஆம் ஆண்டில் நாட்டின் அரசியல் அதிகாரம் எவர் கைகளில் சேரும்?

சிங்களமூலம்–மேஞ்ஞுநாத(மவ்பிம)
தமிழில்–வி.எஸ்.ரீ




**1956** ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கவின் தலைமையில் அரசொன்றை நிறுவ முன்னின்று செயற்பட்டவர். தோசைக்கல்லைச் சூடேற்றித் தயார்ப்படுத்தியவர். ஹேன்பிட்டிகெதர ஞானசீய தேரராவார். அதே போன்று 1994 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் அரசையும், 2015 ஆம் ஆண்டில் கூட்டு அரசையும் பதவிக்குக் கொண்டுவர தோசைக் கல்லைச் சூடேற்றித் தயார்ப்படுத்தியவர் மாதுளுவாவே சோபித தேரராவார். சரி இருக்கட்டும், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுத் தேர்தல் மூலம் புதிய அரசொன்றை நிறுவும் முயற்சியில் தோசைக்கல்லைச் சூடேற்றித் தயார்ப்படுத்தப்போவது எவராயிருக்கலாம்?

ஜே.ஆரினது தூய்மையான சமூகத்தில் (தர்மிஷ்ட சமாஜய), நியாயமற்ற விதத்தில் பழிவாங்கப்பட்ட சோபிததேரர், நியாயமான சமூகமொன்றுக்காக சந்திரிகாவுக்கு உதவினார். சோபிததேரரது முக்கிய குறிக்கோளாக அமைந்தது நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை இல்லாதொழிப்பதாகும். சோபித தேரர் நினைத்த மாதிரி சந்திரிகா, சிறிமாவோவினது மகளாக நடந்து கொள்ளவில்லை. சிறிமாவோ, ஜே.ஆரினது சர்வாதிகார இலட்சணம் கொண்ட அரசமைப்புக்கு எதிராக எதுவித அச்சமோ, தயக்கமோ இல்லாது கருத்து வெளியிட்டு வந்தார். அதனாலேயே ஜே.ஆரினது பழி வாங்கலுக்கு சிறிமாவோ உட்பட நேர்ந்தது. ஆனால் சிறிமாவோவின் மகளான சந்திரிகாவின் போக்கு அவ்வாறு அமையவில்லை. இதனால் சோபித தேரர் சந்திரிகாவால் ஏமாற்றப்பட நேர்ந்தது. சந்திரிகா அரச தலைவராக நிறைவேற்று அதிகாரத்தையும் தம்வசம் கொண்டு நிர்வாகத்தை முன்னெடுத்தார்.

### தமது முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து செயற்பட்ட சோபித தேரர்


இருந்தபோதிலும், சோபித தேரர் நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவியை ஒழித்துவிடும் தமது முயற்சிகளைக் கைவிட்டாரில்லை. பொருத்தமான வேளை பார்த்து தமது போராட்டத்தை மீண்டும் சோபித தேரர் ஆரம்பித்தார். இந்தத் தடவை சோபித தேரர் பொது வேட்பாளரொருவரைத் தேர்ந்தெடுத்தார். மூன்று முக்கிய விடயங்களை முன்னிலைப்படுத்தி நியாயமான ஜனநாயக மற்றும் மக்களது விருப்புக்கேற்ற அரச நிர்வாகத்துக்கான பொது மக்களது திட்டமென, திட்டமொன்றைச் சமர்ப்பித்தார். அதற்கு பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவராயிருந்த ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து இணக்கம் தெரிவித்தனர். அந்த விதத்திலேயே சோபித தேரர் 2015 ஆம் ஆண்டின் ஜனவரி 8 மாற்றத்துக்கு அடி கோலி வைத்தார். அத்தோடு நிறுத்திக்கொள்ளாத சோபிததேரர், தமது 73 ஆவது பிறந்த நாளன்று, அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரிடம் தமது பத்து ஆலோசனைகள் அடங்கிய திட்டமொன்றையும் கையளித்தார்.



சோபித தேரர் முக்கியமாக நிறைவேற்று 'மல்ரி பரலு'க்கு எதிராகவே தமது போராட்டத்தை நடத்தினார். சகல கெட்ட செயற்பாடுகளிலும், சகல நியாய வீனங்களிலும் நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையின் நிழல் படித்திருக்கின்றது என்பது சோபித தேரரது கருத்தாக அமைந்திருந்தது. அவர் மகிந்தவின் தலைமையிலான அரசை கடுமையான விதத்தில் விமர்சித்து வந்தார்.

### அரசதுறைகள் அனைத்திலும் பின்னடைவு நிலையே

“நாடொன்றின் நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும், அதன் தனித்துவத்துக்கு அழுத்தம் வழங்கும், கடும் பயங்கரமான நிலைமை அது. சட்டமா அதிபர் திணைக்களத்தையும் அரச தலைவர் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தார். இத்தகைய நிலையில் நீதித்துறையின் சுதந்திரத்தை எவ்வாறு எதிர்பார்க்க இயலும்? இத்தகைய போக்கு நீதித்துறையுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு செயலிழந்துள்ளது. இங்கு நடத்தப்படும் தேர்தல்கள் குறித்து எவருக்காவது நம்பிக்கை இருக்கின்றதா? தற்போது செயற்படும் பொலிஸ் தரப்பு, அரசுக்கு ஆதரவான பொலிஸ் தரப்பே, இல்லையேல் எவ்வாறு தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு அதிவேக நெடுஞ்சாலையில் ஊர்வலம் போக முடிந்தது? அந்த ஊர்வலத்தை பொலிஸ்



ஜனவரி 8ஆம் திகதிய புரட்சி நாட்டு மக்களுக்குத் தற்போது கசந்து போயுள்ளது. இஞ்சியைக் கொடுத்து மிளகாய் வாங்கிக் கொண்டது போன்று தமது நிலமை ஆகிப் போய்விட்டதாக பொதுமக்கள் வெறுப்புடன் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை நாட்டு மக்கள் உரிய வகையில் பயன்படுத்தி மாற்றமொன்றை மேற்கொள்ள முடியும். அது குறித்து தற்போது எத்தகைய எதிர்வு கூறலையும் மேற்கொள்ள இயலாதுள்ளது.

தரப்பினர் தடுத்து நிறுத்தாததேன்? தேர்தல் நடைமுறையை மீறும் தரப்புக்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தேர்தல் ஆணையாளரால் முடிந்ததா? தவறிழைப்போருக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்குக் கிடையாது. இடம் பெற்றது நியாயமற்ற தேர்தல். அது பொதுத் தேர்தலாக இருந்திருக்குமானால், காபந்து அரசொன்றின் கீழ் நடத்தப்படவேண்டியதே நியாயம். தேர்தல் வேளையில் பொலிஸாரை நிர்வகிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட வேண்டும். எமது முக்கியமான யோசனை, நிறைவேற்று அரச தலைவர் நடைமுறை ஒழிக்கப்பட்டு அதன் அதிகாரங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே. தலைமை அமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையே நாட்டை நிர்வகிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியின் தலைவரையே தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும்.

**ஆணைக்குழுக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படல்வேண்டும்**

அடுத்து ஆணைக்குழுக்கள் அனைத்தும் மேலும் பலப்படுத்தப்பட்டு சுதந்திரமாகச் செயற்படுத்தக்க நடைமுறை வகுக்கப்பட வேண்டும். தற்போது பொது நிர்வாக சேவை, வெளிநாடுகளுக்கான தூதரக சேவை என்பவை சீர்கேடு கண்டுள்ளன. தூதரகசேவைகளுக்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளோ அல்லது தேர்தலில் தோல்வியுற்ற அரச தரப்பு அரசியல்வாதிகளோதான் அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். தற்போது அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக இந்நாட்டின் தேயிலை வர்த்தகரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கான தூதரக சேவைகள் மிக வேகமாக செயற்பட வேண்டிய காலகட்டம் இது. நாம் பன்னாட்டுச் சமூகத்துடன் பாரதூரமான பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். இத்தகைய முக்கிய துறைகளுக்கு எமது மக்களது வரிப்பணமே செலவு செய்யப்படுகிறது. எனவே அரச சேவை ஆணைக்குழுவுக்கு பூரண அதிகாரம் வழங்கி சுதந்திரமாகச் செயற்பட்டத்தக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இன்று முழு நாடுமே லஞ்சச் செயற்பாடுகளில் மூழ்கியுள்ளது. ஊழல்கள் பெருமளவில் தலைவிரித்தாடுகின்றன. இவை தொடர்பான முறைப்பாடுகளுக்கு முறையான விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படுவதில்லை. இத்தகைய முறைகேடுகளை விசாரிக்க, பூரண அதிகாரம் வழங்கி முறையற்ற விதத்தில் தேடப்பட்ட பெருந்தொகை மக்கள் பணத்தை நாட்டு மக்களுக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கும் விதத்தில் அதிகாரம் மிக்க ஆணைக்குழுவொன்று எதிர்காலத்துக்கும் பயன்படத்தக்கவிதத்தில் உருவாக்கப்படவேண்டும். அது மட்டுமன்றி ஊழல், மோசடிகளை மேற்கொண்டதாக நிரூபிக்கப்படுவோருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் குறிப்பிட்ட அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

**தேர்தல் நடைமுறை மாற்றியமைக்கப்படல் வேண்டும்**

அமைச்சரவையின் உறுப்பினர்கள் தொகை முப்பதுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் நடைமுறை மாற்றியமைக்கப்படல் வேண்டும். விருப்பு வாக்கு முறை மாற்றப்பட்டு மீண்டும் தொகுதிவாரி தேர்தல் நடைமுறை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சிறுபான்மைக் கட்சிகளுக்கு தமது மொத்த வாக்கு வீதத்துக்கேற்ற விதத்தில் ஆசனங்கள் ஒதுக்கி வழங்கப்பட வேண்டும்.



சோபித தேரரது மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் மீண்டும் இடம்பெற இடமளிப்பதில்லையென வாக்குறுதி வழங்கி, மைத்திரி-ரணில் தரப்பினர், 2015 ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற அரச தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆயினும் அத்தகைய வாக்குறுதிகளுக்கமைய மைத்திரி அரசு நடந்து கொண்டதா என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

ஜனவரி 8ஆம் திகதிய புரட்சி நாட்டு மக்களுக்குத் தற்போது கசந்து போயுள்ளது. இஞ்சியைக் கொடுத்து மிளகாய் வாங்கிக்கொண்டது போன்று தமது நிலமை ஆகிப் போய்விட்டதாக பொதுமக்கள் வெறுப்புடன் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை நாட்டு மக்கள் உரிய வகையில் பயன்படுத்தி மாற்றமொன்றை மேற்கொள்ளமுடியும். அது குறித்து தற்போது எத்தகைய எதிர்வு கூறலையும் மேற்கொள்ள இயலாதுள்ளது.

தற்போது அல்லே குணவன்ச தேரர் இத்தகைய குழப்பமான அரசியல் நிலையில் அரசியல் அரங்கில் தலை நீட்டியுள்ளார். அவரது தோசைக் கல்லைச் சூடேற்ற அடுப்பில் எரியவைக்கப்போகும் விறகு சோபித தேரர் அடுப்பில் எரியவைத்த விறகல்ல. அல்லே குணவன்ச தேரரது அணுகுமுறை அதற்கெல்லாம் முற்றிலும் மாறுபாடானது.

**அரசியல் நடைமுறையில் புரட்சியை ஏற்படுத்தப் புறப்பட்டிருக்கும் எல்லே குணவன்ச தேரர்**

"நான் முன்னெப்போதும் அரசியல் மேடையில் ஏறியதில்லை. அரசியலில் தலையிடுவதில்லையென்ற கொள்கையுடன் இருந்தவன் நான். ஆனால் இன்று இந்த நாட்டில் நடப்பவற்றைப் பார்க்கும்போது, நாம் ஈட்டிய சுதந்தரம் எம் கண்முன்னாலேயே பறிபோவதைக் காணும்போது, மத்தியவங்கி பிணைமுறை மோசடி போன்ற பெரும் கொள்ளையைப் பார்க்கும் போது, எதற்காக நான் எனது கொள்கையில் இறுக்கமாக இருக்கவேண்டுமென எண்ணத் தோன்றுகிறது. என்றாவது ஒருநாள் இந்த நாட்டுக்குப் பொருத்தமானதொரு தலைவரைக் கண்டுபிடிப்பதற்காகவே நான் அரசியலில் பிரவேசிக்கிறேன். அத்தகைய நபர் நாட்டின் வளங்களைப் பாதுகாப்பேனென தலதா மாளிகையில் வைத்து ஒப்பந்தமொன்றின் ஊடாக உறுதிசெய்ய வேண்டும்.

இப்பொழுதே 2020ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலுக்குப் பலர் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர். ஆனால் பைத்தியக்காரர்களிடம் நாட்டைக் கையளிக்க இயலாது. நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் விசுவாசமாக சேவையாற்றத்தக்க நியாயமானதொரு அரசியல்வாதியாகத் தம்மை நிரூபிக்கும், நாட்டு மக்களை நம்பிக்கை கொள்ளவைக்கும் அந்த மனிதருடனேயே நான் குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வேன். இவ்விதம்தான், அல்லே குணவன்ச தேரர் தமது முதலாவது வெடியின் திரியைப் பற்றவைத்துள்ளார். தொழிற்சங்கங்கள், பௌத்த துறவிகள், பொது அமைப்புக்கள் என பல தரப்புக்களையும் ஒன்றிணைத்தே அரசியல் புரட்சி யொன்றுக்கு குணவன்ச தேரர் தயாராகி வருகிறார்.

ஆயினும் அவர் குறிப்பிடும் அந்த நாடு குறித்தும், நாட்டு மக்கள் குறித்தும் அக்கறை காட்டத்தக்க, குணவன்ச தேரரின் தெரிவிலுள்ள அந்தப் பிரமுகர் யார் என்பது குறித்து அறிகுறியெதனையும் இதுவரை கண்டு கொள்ள முடியவில்லை.

சோபித தேரர் இன்று உயிருடன் இல்லை. அவர் இன்று உயிருடன் இருந்திருந்தால், தாம் உருவாக்கிய இந்த அரசுக்கு எதிராக அவரே போர்க்கொடி தூக்கியிருப்பார். அந்த அளவுக்கு அவர் தனிநபர் எவருக்கும் முக்கியத்துவம் கொடுக்காத, கொள்கைக்காகவே செயற்படும் வழக்கமுடையவராக இருந்துள்ளார். அத்தகைய சோபித தேரரது எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் பொய்த்துப் போய்விட்ட நிலையில், மீண்டும் இந்த நாட்டின் அரசியலில் புரட்சியொன்றின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளார், அல்லே குணவன்ச தேரர். அந்த முயற்சியில் அவரால் வெற்றியீட்ட இயலுமா? அல்லது இயலாது போகுமா? என்பதற்குக் காலம்தான் பதிலளிக்க வேண்டியுள்ளது.

## ஆசிரியருக்கான கடிதம்

# யாழ்.நகரில் ஆட்டோ ஓட்டுநர்களின் அட்டகாசம்

நான் கனடாவில் இருந்து எனது பெற்றோரைப் பார்வையிட யாழ்ப்பாணம் வந்திருந்தேன். யாழ் நகரில் வந்து சில நாள்களாக ஆட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி எனது போக்குவரத்துக்களை மேற்கொண்டிருந்தேன். யாழ் நகரிலிருந்து கடந்த மே மாதம் 31ஆம் திகதி பிற்பகல் எனது வீடு அமைந்துள்ள கொக்குவில் பகுதிக்குச் செல்வதற்க்க, வரிசையாக நின்ற ஆட்டோக்களின் சாரதிகளிடம் கொக்குவில் செல்வதற்கான கட்டணம் எவ்வளவு எனக் கேட்டபோது 500ரூபா எனக் கூறினார்கள். சற்றுப்பின் சென்று வேறொரு ஆட்டோ ஓட்டுநரிடம் கேட்ட போது, 300ரூபா எனக் கூறினார். நான் அவரது ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தி கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு வந்தவேளை நான் முதலில் கட்டணம் குறித்து விசாரித்து, 500ரூபா எனக் கூறிய ஆட்டோ ஓட்டுநர் நான் பயணித்த அந்த ஆட்டோவை வழிமறித்து நீ ஓடமுடியாது என தடுத்து நிறுத்தினார். நான் பயணித்த ஆட்டோ ஓட்டுநரிடம் அவரை விட்டு விட்டு மேற்கொண்டு ஆட்டோவை ஓட்டிச் செல்லுமாறு நான் கூறினேன். அவ்விதம் அந்த ஓட்டுநரைக் கணக்கிலெடுக்காது ஓட்டிச் சென்றபோது, ஆட்டோவை துரத்தி வந்து அதனுடைய சாவியை பிடுங்கி நான் பயணித்த ஆட்டோவை கஸ்தூரியார் வீதியின் நடுவே நிற்கவைத்து சென்று விட்டார். பின்னர் நான் பயணித்த ஆட்டோவின் சாரதி என்னையும் ஆட்டோவில் விட்டு விட்டு சாவியைப் பிடுங்கி சென்ற மற்ற ஆட்டோ ஓட்டுநரிடமிருந்து அதை மீளப்பெறுவதற்காகச் சென்றுவிட்டார். இதை அடுத்து கஸ்தூரியார் வீதியினூடாக சென்ற பல வாகனங்கள் போக்குவரத்து தடைபட்ட நிலையில் பயணிக்க சிரமப்பட்டன. இது ஆட்டோ ஓட்டுநர்களது காடைத்தனம் என்று அங்கு நின்ற பலரும் மனம் நொந்து கொண்டார்கள். பயணிகளிடம் இருந்து கூ்டிய கட்டணத்தை அறவிடும் நோக்கில், குறைந்த கட்டணம் அறவிடும் நியாயமான ஆட்டோ ஓட்டுநர்களை அச்சுறுத்துவது, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயம். அந்தக் குறிப்பிட்ட ரவுடித்தனம் செய்த ஆட்டோ ஓட்டுநரால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். யாழ்.நகரில்தான் ஆட்டோ ஓட்டுநர்கள் மிகவும் அதிகபடியான கூலியை அறவிடுகிறார்கள். யாழ்.நகரில் மீற்றர் பூட்டி ஓடும் ஆட்டோக்கள் மிகவும் குறைவு. ஆட்டோ ஓட்டுநர்களது கட்டணம் ஒரு நியாயமான அளவில் இருக்கும் விதத்தில் முறையான விதிமுறைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இத்தரப்பினரது ரவுடித்தனமும் சட்டத்தின் மூலம் ஒடுக்கப்படவேண்டும்.

*பாதிக்கப்பட்ட பயணி*
*ஆனந்த்- மூளாய்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணிகள் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** தியாக மனதுடன் செயல்படுவீர்கள். புதியவர்கள் விரும்பி அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு விலகும். உற்பத்தி, விற்பனை செழித்து ஆதாயம் உயரும்.

**மிதுனம்:** முக்கிய செயல்களில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை உடனே சரி செய்யவும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** குடும்ப தேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் தாமதம் ஏற்படலாம். மிதமான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** எண்ணம், செயலில் புத்துணர்வு உண்டாகும். விமர்சித்து பேசியவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மன சஞ்சலம் ஏற்பட்டு விலகும். தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிக்கும். தாராள பணவரவு இருக்கும்.

**விருச்சிகம்:** பிறர் செயலில் குறை காண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**தனுசு:** வெகுநாள் ஆசை இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணி புரிவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** எதிரிகளிடம் இருந்து விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். சுமாரான இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் விழிப்புடன் இருக்கவும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். உறவினர் வழியில் திடீர் செலவு ஏற்படலாம்.




# அடுத்த ஆண்டே 2.0

ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்துவரும் படம் '2.0'. கடந்த 2016ஆம் ஆண்டு முதல் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இந்த படம் காலா படத்துக்கு முன்பாகத் திரைக்கு வரும் எனத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் செம்மைப்படுத்தல் பணிகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றும் இதனால், '2.0' இந்த வருடம் வெளியாகப் போவதில்லை என்றும் அடுத்த ஆண்டே வெளியாகும் எனத் தகவல் கசிந்துள்ளது.

# மாற்றங்கள்



வாழ்க்கையில எல்லோருக்கும் பல மாற்றங்கள் வரும். சிலரது வாழ்க்கையே, மாற்றங்களால் ஆனதுதான். அதில அதிகமா வரும் மாற்றம், தடுமாற்றம். முக்கியமா, முடிவுகள் எடுக்க எமக்கு வரும் தடுமாற்றம். பல நாள்களில் நாம் எடுக்கும் சில முடிவுகள், ஒட்டுமொத்த வாழ்க்கையையே மாற்றிவிடும்.

வாழ்க்கையில் முடிவுகளை எல்லோரும் இரண்டு விதமாதான் எடுப்பாங்க. ஒண்ணு, மனசு சொல்றத கேட்டு; இன்னொண்ணு, மூளை சொல்றத கேட்டு. சில சமயம் மனசு சொல்றதக் கேட்டு எடுக்கிற முடிவுகள் சரியா இருக்கும், சில சமயம் மூளை சொல்ற முடிவுகள் சரியா இருக்கும்.

ஆனா, பல சமயம் நம்ம குழப்பமே... மனசு சொல்றத கேட்கிறதா, இல்லை. மூளை சொல்றத கேட்கிறதா என்பதுதான். இப்படி மூளையையும் மனசையும் போட்டுக் குழப்பிக்கிட்டு முடிவு எடுக்க வேண்டிய சமயத்தில நான் மனசு சொல்றதையும் கேட்க மாட்டேன்; மூளை சொல்றதையும் கேட்க மாட்டேன். பேசாம மனைவி சொல்றதைக் கேட்டிடுவேன்.

வேலை சுலபமா முடிஞ்சிடும். இத நீங்க எதிர்பார்க்கல தானே? அப்போ முதல் இரண்டு வரிகள மீண்டும் படிங்க!

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | | | 1 | 3 |
| 5 | | | 3 | | | | 7 | 2 |
| 3 | | | | 1 | | | | |
| | | | 9 | | | | | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | | | | | 6 | | | 7 |
| | | | | 8 | | | | |
| 6 | 3 | | | | 9 | | | 5 |
| 9 | 5 | | | | | 7 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 9 | 7 |
| 3 | 4 | 7 | 6 | 9 | 5 | 1 | 2 | 8 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 8 | 3 | 5 | 4 |
| 8 | 3 | 6 | 4 | 5 | 2 | 9 | 7 | 1 |
| 1 | 7 | 5 | 8 | 6 | 9 | 4 | 3 | 2 |
| 4 | 9 | 2 | 7 | 1 | 3 | 5 | 8 | 6 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 1 | 7 | 4 | 5 |
| 7 | 5 | 4 | 3 | 2 | 6 | 8 | 1 | 9 |
| 9 | 1 | 8 | 5 | 4 | 7 | 2 | 6 | 3 |

நேற்றைய விடை

# எமது புத்தகங்கள்

முகநூல் கவிதை



சாம்பலை மூடிய சுவர்கள்
அதிர்வினால் உடைந்து போய் விடுமோ?

மீண்டும் மீண்டும் இந்தப் புத்தகங்கள்மீது
அவர்கள் கற்களோடு தீப்பந்தங்களை எறிய
முற்படுகிறார்கள்

ஒட்டி உலர்ந்த சுவர்களில்
படிந்திருக்கிற சாம்பலை கிளற
முற்படுகிறார்கள்

எமது நிலத்தைப்போல
எல்லா வகையிலும் காட்சிப் பொருளாக
புரிந்து கொள்ளாமலே இருக்கின்றன எமது
புத்தகங்கள்

இந்தப் புத்தகங்களை விரிக்கும் பொழுது
சாம்பல் உதிர்ந்து கொட்டுகிறது
இவர்கள் எங்கள் சாம்பலையும் திருடிச்
செல்கிறார்கள்.

தாள்கள் மாற்றப்பட்ட எமது புத்தகங்களில்
புதிய கதைகள் எழுதப்பட்டு
சேகரிக்கப்படுகின்றன.



# கேள்விகளால் ஆனது பெண்களின் உலகம்

"என்னங்க, ஏன் இவ்வளவு லேட்டா வர்றீங்க?"
"ரொம்ப வேலைம்மா!"
" போன் பண்ணியிருக்கலாம்ல ஏன் பண்ணல?"
"வேலை பிசில மறந்துட்டேன்ம்மா..."
"போன் பண்ண மறக்கிற அளவு அப்படி என்ன வேலை?"
"ஆபீஸ் வேலைதான்!"
"ஆபீசுக்கு போன் பண்ணினேன்... நீங்க கிளம்பிட்டீங்கன்னு சொன்னாங்க எங்க போனீங்க?"
"அட, வெளியில ஆபீஸ் வேலைம்மா!"
"வெளில எந்த ஆபீஸ்?"
"அட, எங்க ஆபீஸ் வேலைதான். ஆனா வெளில..."
"அது முடிச்சுட்டு வர்றதுக்கு இவ்வளவு நேரமா?"
"அதான் ரொம்ப வேலைங்கிறேன்லடி!"
"ஒரு போன் பண்ண எவ்வளவு நேரமாகப் போகுது?"
"வேலை பிசிங்கிறேன்லடி!"

'அம்மா' மாறி 'அடி' வந்தபிறகும் இந்த் உரையாடல் இன்னொரு ரவுண்டு வரும். கேள்விகளால் ஆனது பெண்களின் உலகம், பதில்களால் ஆனது ஆண்களின் உலகம். இந்த இரு வகை மனிதர்களால் ஆனது இந்த உலகம்.

# நம்ம ஆளுங்க அறிவுக்கு




உலக நாடுகள் எல்லாம் பிச்சை வாங்கனும்டா

# twitter



வெண்பா@urs_venbaa
ஒரு காலத்தில் முடி இருந்ததெல்லாம் கருமையான நினைவுகள்

## மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

### கேள்வி கோரல்

### உலர் உணவிற்கான கேள்வி கோரல் மாவட்ட பொது வைத்தியசாலை நிதி மூலம் - மீண்டுவரும் செலவினம்

### DGH/KOC/D/2018/01

01. திணைக்கள பெறுகைக்குழு தலைவர் உரிய தகைமை மற்றும் ஆர்வமுள்ள கேள்வியாளர்களிடமிருந்து மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சிக்கான உலர் உணவு விநியோகத்திற்கான கேள்வி கோரலை முன் வைக்கின்றார்.
02. கேள்வி நடைமுறைகள் தேசிய திறந்த போட்டி விலைக்கேள்வி முறையினை கொண்டதாகும்.
03. தயாரிக்கப்பட்ட விலைக்கேள்விப் பத்திரங்களின் தொகுதி விருப்பமான மற்றும் தகைமையான கேள்வியாளர்களினால் மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளரிடம் கொள்வனவு செய்யமுடியும் (தொலைபேசி 021 228 4111, தொலைநகல் 021 228 5327. Email – dghkoc@gmail.com) கேள்விப் பத்திரங்களை கணக்கு கிளையில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.30 மணிவரை வேலை நாட்களில் பார்வையிட முடியும்.
04. கேள்வி பத்திரங்கள் 12.06.2018 இல் இருந்து 05.07.2018 வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணியில் இருந்து பி.ப 3.30 வரை, மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 ஐ செலுத்துவதோடு வியாபார பதிவுச் சான்றிதழின் அனுமதிக்கப்பட்ட பிரதி ஒன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.
05. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை 100,000 ரூபா வங்கி உத்தரவாத பத்திரத்தினை (Bid Bond) சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்வி பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அல்லது கணக்காளர் அறையிலுள்ள பெட்டியில் 05.07.2018 மு.ப 11.00 மணிக்கு முன்னராக சேர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்வி கோரல் பெட்டியானது மு.ப 11.00 மணிக்கு மூடப்பட்டு உடனே கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. பெறுகையினை எந்தவொரு படி நிலையிலும் இழப்பீடுகள் எதனையும் செலுத்தாது இரத்துச்செய்ய அல்லது முடிவுக்கு கொண்டுவர திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண உரிமையுண்டு.

தலைவர்
திணைக்கள பெறுகைக்குழு வடமாகாணம்.
தொலைபேசி .இல – 021 222 0811
தொலைநகல் - 021 222 0818
மின்னஞ்சல் - capdhsnp@gmail.com

(IN/ 7005)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று 12.06.2018 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் **30 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில்** கலந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும்

**செல்வராசா பிரபாகரன்**
**(B.com,M.com, HN.dip.in.Acc, HN.dip.in.It,PGDE)**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பலபட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக்கலாவோடை,
காரைநகர்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

(CS 17403)(14,17)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

235/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
(CS/17405)(11,17)
077 470 9841

## வயல்காணி விற்பனைக்கு

யாழ். 21 ஆம் வட்டாரம், மானிப்பாய் வீதியில் கோம்பயன் மணல் மயானத்துக்கு முன்னால் 11 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு.

(CS/17417)(15,17)

**021 222 7365**

## நிர்வாக அலுவலர் தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம் மொழித்தேர்ச்சியுள்ள சிங்களம் பேசத்தெரிந்த நிர்வாக அலுவலகர் தேவை. அரச, தனியார் துறைகளில் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

### கணினி தட்டெழுத்தாளர் தேவை (பெண்)

யாழ் வணிகர் கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம் கணினி தட்டச்சு செய்யக்கூடிய ஓரளவு Accounts (கணக்கு) தெரிந்த கணக்குப்பதியுனர் தேவை. பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பங்களை யாழ் வணிகர்கழகம், இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பங்கள் யாவும் 18.06.2018 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

021 222 8593 (IN 7004) (14,17) செயலாளர்.

## மரண அறிவித்தல்



### வேலாயுதசேயோன் சயிதரன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

தோற்றம் 16.02.1983 — மறைவு 10.06.2018

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதசேயோன் சயிதரன் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் வேலாயுதசேயோன் (முன்னாள் கிராம சேவையாளர், தலைவர் - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்) - விமலராணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், வீரசிங்கம் - ரசணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவரூபியின் (விரிவுரையாளர் - தொல்லியல்துறை கலைப்பீடம் - யாழ். பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும், ஆயூசிகாவின் பாசமிகு தந்தையும், செந்தூரன் (Australia), தனுசியா (U.K), விஜிதரன் (மாணவன் - SLIIT) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சர்மிளா, சிவமோகன், விஜயரூபன் (Australia), சாந்தரூபி, சத்யரூபி, காந்தரூபி, ஜெயரூபி ஆகியோரின் மைத்துனரும், திலீபனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2018) செவ்வாய்க்கிழமை நுணுவில் பிள்ளையார் கோயிலடி, சரசாலை வடக்கு, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CH/389) (11,17)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சுந்தரலிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரலிங்கம் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி அரியமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும் நவரஞ்சினியின்(திலகம்) ஆருயிர்க் கணவரும் சுபப்பிரதா, சிவப்பிரியா, மதிவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலேஸ்வரி, பஞ்சாட்சரலிங்கம், மகேந்திரலிங்கம் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராகவன், நற்கீரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் உதயகலா, பரம்சோதி, ஜெசிந்தா காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (மணி மாஸ்டர்) மற்றும் அம்பிகைமலர், கிருஷ்ணமூர்த்தி, புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஹரினி, சஞ்சனா, நிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2018) புதன்கிழமை மதியம் 1.30 மணியளவில் Chapel Redge Funeral Home (Canada) இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக Highland Hills Crematorium (Canada) மயானத்துக்கு ஏடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: ஆ.பஞ்சாட்சரலிங்கம்**
**(Kamaleswary Tex)**

(CS 17415) (14,17)

**077 787 8635**


ES
Printers
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner).
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board).
மக் பிரிண்ட். ரீ-சேட். புத்தகங்கள்.
கையேடு (Handbills).
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்.
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற. வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்.
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
357. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி. ஏ-9 வீதி.
கிளிநொச்சி.
நவீன சந்தை. முதலாம் மாடி. சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com
BATTLE NORTH
AR Rodny
18
மணியம் கபே
Maniyam Cafe
GVS

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# இம்முறையும் இலங்கை காப்புறுதி வரலாற்றில் அதிகூடிய ஆயுட்காப்புறுதி போனஸ் தொகை

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸிடமிருந்து

# ரூ.6.8 பில்லியன்



இக்களிப்பை கொண்டாட நீங்களும் வாருங்கள்

# Happiness CARNIVAL

இவ்வரலாற்று சான்றுமிக்க அதிகூடிய ஆயுட்காப்புறுதி போனஸ் தொகையான ரூ. 6.8 பில்லியனை உங்களுக்கு வழங்கும் மகிழ்ச்சி மிக்க இத்தருணத்தை கொண்டாட வாடிக்கையாளர்களாகிய நீங்களும் உங்கள் குடும்பத்துடன் ஹப்பீனஸ் கார்னிவலுக்கு வாருங்கள்

ஜூன் 16ஆம் திகதி
விகாரமாதேவி பூங்கா, கொழும்பு
நாள் முழுதும்

அனுமதி மற்றும் அனைத்து கேளிக்கைகளும்
இலவசம்

Sri Lanka Insurance
LIFE
வாழ்க்கைக்கு ... ட்பமான முதலீடு

# மக்களை ஈர்க்கும் பேச்சுக்கலை



பேச்சு என்னும்போது மேடைப் பேச்சு மட்டுமன்றி சாதாரண மக்களின் உரையாடல்களிலும் கலைநயம் இருப்பதைக் காணலாம். எந்த ஒரு கருத்தையும் அதை வாசிக்கும்போது அதில் ஆர்வம் காட்டாதவர்கள், அதே கருத்தை வைத்து ஒருவர் உணர்ச்சி ததும்பப் பேசும்போது அதை நன்கு ரசித்து ஏற்றுக்கொள்கிறார்கள். உலகிலேஎத்தனையோ பேர் தமது பேச்சுத் திறமையால் மக்களைக் கவர்ந்து நாட்டின் தலைவர்களாக உயர்ந்துள்ளார்கள். ஆரம்ப காலத்தில் பேச்சு கற்றறிந்தவர்களுக்கு மட்டும் விளங்கக் கூடியதாக இலக்கண மரபுடன் கூடியதாக இருந்தது. வி.கலியாண சுந்தரனார், பாரதியார் போன்றோர் எளிய நடையை அறிமுகப்படுத்தி வெற்றிகாண ஜனரஞ்சகமான எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்ட பேச்சு வழக்குத் தமிழ் நடைமுறையில் வந்தது. அரசியலிலே அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் நீக்ரோக்களின் அடிமைத் தளையை நீக்கும் சிரமமான பணியில் ஈடுபட்ட போது அவரது பேச்சுவன்மை, அவருடைய முயற்சிக்கு உறுதுணையாயிருந்தது. சீசரின்பால் மக்களுக்கு அனுதாபத்தையும், சீசரின் எதிரிகள் மேல் வெறுப்பையும் ஏற்படுத்திய மார்க் அன்ரனியின் பேச்சு வரலாற்று முக்கியம் பெற்றதாகும்.

இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வின்சென்ற் சேர்ச்சில் பாரதத்திலே ஜவகர்லால் நேரு, இந்தோனிசியாவில் சுகர்னோ ஆகியவர்கள் தங்கள் பேச்சு வன்மையால் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற தலைவர்களாக விளங்கினார்கள்.

பொதுவுடமை நாடான ரஷ்யாவில் லெனினின் உரைகளும், கியூபாவில் காஸ்ரோவின் உரைகளும் மக்கள் மத்தியில் பொதுவுடமைச் சித்தாந்தம் வளர வகை செய்தன.

துர்அதிஸ்டவசமாக நல்ல பேச்சாற்றல் தீயவிளைவுகளுக்கு காரணமாகவும் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் கொடிய விளைவுகளுக்கும், யுதர்மேல் நடத்தப்பட்ட காட்டு மிராண்டித் தனமான இனஒழிப்புக்கும் காரணமான ஹிட்லர் கூடத் தனது சாமர்த்தியமான பேச்சு வன்மையினால்தான் ஜேர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றினான். இன்று பல நாடுகளில் துவேச கருத்துக்களைத் தங்கள் பேச்சு வன்மையால் மக்கள் மனதில் புகுத்தி இன வேற்றுமையைத் தூண்டி விடுகிறார்கள். வர்த்தகத் துறையிலும், சமூக வாழ்விலும், மோசடி செய்யும் கும்பல்கள் தமது சாதுரியமான பேச்சினால் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றனர். இன்றும் போலி வைத்தியர்கள் வளரவும், மந்திரவாதிகள், சோதிடர் ஆகியோரின் உயர்வுக்கும் இந்த மக்களைக் கவரும் போலியான பேச்சுக்களையே காரணமாகும்.

## புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்



## வீட்டுத்தோட்டத்தில் பயிரிட்டு பெற்றுக் கொள்ளக்கூடியவை

- **காய்கறிகள்** – வெண்டி, கத்தரி, அவரை, போஞ்சி, தக்காளி, பயற்றை.
- **இலைக்கறி** – வல்லாரை, பொன்னாங்கண்ணி, பசளி, இலைக்கோவா, சலாது.
- **கிழங்குப்பயிர்**– மரவள்ளி, கரட், பீற்றூட், முள்ளங்கி, சேம்பு.
- **பழப்பயிர்கள்** – வாழை, பப்பாசி, கொய்யா, நெல்லி, மா.
- **சுவையூட்டிகள்** – கறிவேப்பிலை, இறம்பை, மிளகாய், இஞ்சி, கொத்தமல்லிக்கீரை.

## பெண்தானா?



1936ஆம் ஆண்டு பெர்லின் ஒலிம்பிக் பந்தயத்தில் 100மீற்றர் ஓட்டப் போட்டியில் ஹெலன் ஸ்டீபன்ஸ் என்ற வீராங்கனை வெற்றி பெற்றார். அவரது மின்னல் வேக ஓட்டத்தைக் கண்ட நடுவர்கள் அவரை ஓர் ஆண் எனச் சந்தேகித்தனர். அதனால் அவர் தனது ஆடைகளைக்களைந்து தன்னை ஒரு பெண் என நிரூபிக்க நேர்ந்தது.

## அறிஞர்கள் கூறிய அனுபவ மொழிகள்

**அலெக்ஸாண்டர்** – வாழ்வதில் நான் என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முறையாக வாழ்வதில் நான் என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**போப்** – ஒருவன் தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வெட்கப்படக் கூடாது. ஒப்புக்கொள்வதன் பொருள் என்ன? நேற்றையதை விட, இன்று அவனது அறிவில் முதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.

**கன்ஃபூஷியஸ்** – மற்றவர்கள் உங்களுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டாமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றை மற்றவர்களுக்கு நீங்களும் செய்யாமல் இருந்து விடுங்கள்.

**கிரேஸியன்** - எமக்குத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடுவதைவிட சும்மாவிருப்பது எவ்வளவோ மேல்.

**ராபர்ட்லின்ட்** – வாழ்க்கையில் எமக்குவரும் துன்பங்களில் பாதிக்கு மேல், நாமே கற்பனை செய்துகொள்பவைதான்.

**டிக்கன்ஸ்** – உங்கள் வாழ்க்கையில் கடந்துபோன கணங்களைத் திருப்பிக்கொண்டு வர முயற்சி செய்யாதீர்கள்.



# உன்னைப் போல ஒருவன்





சோக்கிரட்டீஸிடம் ஒரு மாணவன் வந்தான். "ஐயா! நல்ல மாணவன் ஒருவன் எப்படி இருக்க வேண்டும்." என்று கேட்டான். அதற்கு அவர் "மாணவன் ஒருவன் கொக்கைப் போலவும், கோழியைப் போலவும், உப்பைப் போலவும், உன்னை போலவும் இருக்க வேண்டும்" என்றார் "ஐயா! சற்று விளக்கமாகச் சொல்வீர்களா? அது எப்படி கொக்கைப்போல..." என்றான். "கொக்கு தான் நினைத்ததைச் சாதிக்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஒற்றைக்காலில் நிற்கும். அதாவது தனது இலக்கான மீனைப் பெற. அதே போல ஒரு மாணவன் பொறுமையாக இருந்து தனது இலக்கை அடைய வேண்டும்" என்றார். மீண்டும் மாணவன் "ஐயா! கோழியைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே அது எப்படி?" என்று கேட்டான். "கோழி குப்பையைக் கிளறுகிறது அந்தக் குப்பைகளுக்குள் தனக்குத் தேவையான இரையைத் தேடுகிறது. அது கிடைத்ததும் அந்தக் குப்பைகளை அப்படியே விட்டு விட்டு இரையை மட்டும் பக்குவமாகக் கொத்தி எடுக்கும். அதே போல மாணவர் கற்கும் போது பல நன்மைகளோடு தீயவற்றைத் தவிர்த்து நன்மைகளை (நல்லவற்றை) மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார். "சரி உப்பைப்போல இருக்க வேண்டும் என்றீர்கள் எப்படி? என்று கேட்டான் மாணவன், "ஆமாம், உப்பு எந்த உணவோடு கலந்தாலும் அது அந்த உணவில் இருக்கிறதென்று கூற முடியும். ஆனால் கலந்த உணவில் உள்ள உப்பு கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அதன் சுவையை மட்டும் உணர முடியுமல்லவா? அதே போல மாணவர்கள் எந்தத்துறையில் கற்க முடிந்தாலும், அந்தத்துறையில் சிறப்பான தனித் தன்மையை வெளிப்படுத்தி தனது மறைவுக்குப் பின்பும் அத்திறமையான செயலை இவர்தான் செய்தார் என்று கூறும்படி விளங்க வேண்டும்" என்றார், சோக்கிரட்டீஸ்.

இப்போதும் அந்த மாணவன் அவரை விடவில்லை. "குருவே! எல்லாம் சரி, புரிந்து கொண்டேன். ஆனால் கடைசியில் கூறினீர்களே அதுமட்டும்..." என்று இழுத்தான். அவர் "ஆ, உன்னைப் போல இருக்கவேண்டும் என்றேன் அதுவா?" என்றார். "ஆமாம்" என்று தலையாட்டினான் மாணவன்.

குரு "மாணவன் என்பவன் தனக்குள் எழக் கூடிய சந்தேகங்களை எந்தவிதத் தயக்கமுமின்றி ஆசிரியரிடமே கேட்டு தெளிவு பெற வேண்டும். அதற்காகத்தான் உன்னைப் போல இருக்க வேண்டும் என்றேன், போதுமா?" என்ற புன்னகையுடன் அம்மாணவனைத் தட்டிக் கொடுத்தார். மாணவனும் மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினான்.

# ஒரு மாதமாகியும் கொதிப்பை குறைக்கவில்லை கிலியோவா





ஹவாயில் உள்ள கிலியோவா எரிமலை. உலகின் சக்தி மிக்க எரிமலைகளில் அதுவும் ஒன்று. இந்த எரிமலை கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தொடர்ந்து வெடிப்பை மேற்கொண்டு வருகிறது. பல்லாயிரக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளன. கிலியோவா எரிமலை தொடர்பான ஒளிப்படங்கள் சிலவற்றை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. கிலியோவாவின் பேராபத்தை வெளிப்படுத்துகின்றன அந்தப் படங்கள். (ம)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1473
சீட்டிழுப்பு திகதி 11.06.2018
வெற்றி இலக்கங்கள்
05 15 21 64 N
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ. 22, 262, 200/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3042 திகதி: 11.06.2018 திங்கட்கிழமை
நிலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம் அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
05 59 68 71 Z 58 46,146,580/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 278
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.06.11
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 72,936,185/-
வெற்றி இலக்கங்கள்
27 41 49 66 K



YARL CiTE
Powered by RATNAM FOUNDATION
CENTRE FOR IT EDUCATION
Job Skills Development & Training

ICT & ENGLISH LANGUAGE SKILLS DEVELOPMENT & TRAINING
* Specialized programme for Youths & Students.
வறிய மாணவர்களுக்கு இலவசம்



ICT: Covers Certificate in ICT syllabus of NVQ level 4
Duration : 6 months
- Basics of computer systems, OS & Applications.
- Word processing, Spread sheet management.
- Presentation & Publication.
- Internet, e-mail & Social media.
- Computer Hardware
- Network & System Administration
- Graphic designing & Publishing.
- Web designing & hosting.

English Language: Covers communicative English syllabus of NVQ Level 3
- Listening, Speaking, Reading & Writing Skills.
- Vocabulary, Pronunciation & Grammar.
- Soft skills development.

Programme starts on: 15. 06. 2018

IT JOB SKILLS & SOFT SKILLS DEVELOPMENT & TRAINING
* Customized programme for Youths, Job seekers & Employees..
Based on NVQ level 4 syllabus Duration: 6 Months
Programme based on the Employer's Requirements and the Capacity of the Learner.
- Communicative English language & Soft Skills
- Computer Hardware, Networking & System Administration
- Web Design, Development & Digital Marketing.
- Graphic Design, Publishing, Animation & Photography.
FAST TRACK PROGRAMME

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
PHONE: 0212214099 MOBILE: 0772928853, 0702583250.
#125 Main Street, Jaffna. (IOFM Buildings 2nd Floor, near to Courts Complex)


## காசு...

கங்களும் தனிநபர்களும் பணம் பெற்றுக் கொண்டு அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளனர். அந்த ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகர் தெரிவித்தார்.

கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய கடற்தொழிலாளர்களின் மனுவைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவதுவெளிமாவட்ட மீனவர்கள் வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடற்தொழிலை மேற்கொள்வதற்கு கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சிடம் அனுமதி பெற்றுள்ளனர். கடலட்டை பிடிப்பதற்கும் அவர்கள் முறையான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். கடற்கரையில் வாடி அமைப்பது தொடர்பில் பிரதேச செயலரிடம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

கொழும்பு அமைச்சு கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்போது விதிக்கும் நிபந்தனைகளை மீறிச் செயற்படும் மீனவர்களுக்கு எதிராக மாத்திரமே நாம் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு செயற்படுபவர்களைக் கைது செய்வதற்கு கடற்படைக்கு பணித்துள்ளோம். 49 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 17 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களிடமிருந்து 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டமாக அறிவிடப்பட்டுள்ளது - என்றார். (ந-5,7,26)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. **திலகவதி விநாயகமூர்த்தி**

அன்னை மடியில் 15.01.1932 — ஆண்டவன் அடியில் 04.06.2016

திதி : 12.06.2018

**எங்கள் அன்பு அம்மாவே!**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய் எத்தனை துன்பங்கள் வந்த போதும் தளராது எம்மைப் பேணி பாதுகாத்து வளர்த்து நல்வழிகாட்டிய எங்கள் அன்பு அம்மாவே! நீங்கள் இறைபதம் அடைந்து இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டதம்மா. ஆனாலும் நீங்கள் எங்களைவிட்டு எங்கும் செல்லவில்லையம்மா. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகளை சுமந்து வாழ்வோமம்மா.


உங்களது ஆத்மா இறைபதம் அடைந்திட நாங்கள் தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
"திலகஸ்தான்" துன்னாலை கிழக்கு, கரவெட்டி

## மரண அறிவித்தல்

## அம்பலவாணர் நடராசா

(ஓய்வு நிலை இ.போ.ச. சாலைப்பரிசோதகர்)



பிறப்பு 03.11.1936 — இறப்பு 08.06.2018

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடராசாகடந்த(08.06.2018) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் பாஸ்கரன் (சுவிஸ்), சிறிகாந்தரூபன் (கண்ணன், கனடா), நடனசபேசன் (உதி, பிரான்ஸ்), குகேந்திரன் (ரசன், கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சோதிநாயகி (சுவிஸ்), தபாலினி (கனடா), கலா (பிரான்ஸ்), துசாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12/06/2018) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரந்தன் வீதி,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**(0761004195 - ரசன்)**

ஆழ்வார்

# ஆதன வர்த்தகத்துறையும் தொழில் மேம்பாடும்



**ஆதன வர்த்தகம்**
பன்னாட்டளவில் மிகப்பிரசித்தியுள்ளதும், அதிக வருமானத்தை ஈட்டவல்லதுமான துறையாக 'ஆதன வர்த்தகம்' விளங்குகின்றது. இன்றைய ஆதன வர்த்தகத் துறையானது, பல்வேறு மாற்றங்களுடன் கூடிய புதிய பரிணாம வளர்ச்சியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. மேலைத்தேய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தொழில்துறைகளில் கணிசமான வீதத்தினை இந்த ஆதன வர்த்தகமே கொண்டுள்ளது. இன்றைய ஐக்கிய அமெரிக்க அரச அதிபர் 'டொனால்ட் ட்ரம்பின்' ஆரம்பநிலை தொழில் துறையாக இவ்வாதன வர்த்தகத் துறையே விளங்கியது. அசுரகதியில் அவரை கோடீஸ்வர நிலைக்கு உயர்த்தியதுடன் அமெரிக்காவின் முதன்னிலை செல்வந்தர்கள் பட்டியலிலும் இடம்பெற அவருக்கு பின்புலமாக விளங்கியது இவ்வாதன வர்த்தகத்துறையாகும். தகவல் தொடர்பாடலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது ஆதன வர்த்தகத்துக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலை மிகவும் இலகுவானதாக மாற்றியுள்ளதுடன், உச்ச அளவிலான போட்டித்தன்மையையும் தோற்றுவித்துள்ளது. உள்நாட்டு சந்தையை மையமாகக் கொண்டு செயற்பட்ட இத்துறையானது, இன்று நாட்டுக்கு வெளியேயும் பன்னாட்டு சந்தையை இலக்குவைத்து வியாபகம் கொண்டுள்ளது.

ஆதன விற்பனை தொடர்பில் காணப்படுகின்ற சட்ட விதிமுறைகள் காரணமாக இத்துறையை பொருத்தமான நடைமுறைகளின் ஊடே நுணுக்கமாக கையாள வேண்டியுள்ளது. ஆதன உடமையாளர்கள் தமது பெறுமதிவாய்ந்த அசையாச்சொத்துக்களான வீடு, மனை, வணிகச் சொத்துக்கள் மற்றும் காணிகளை விரைவாக பரிவர்த்தனை (விற்பனை) செய்வதற்கு தொழில்முறை முகவர்களை அணுகி தமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு இருதரப்பினரும் அனுகூலமடைகின்றனர். தமது நாட்டிற்குள் மட்டுமன்றி நாடு கடந்தும் பல்வேறு வழிகளினூடாக இவ்வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும்சிலவிரும்பத்தகாத அசௌகரியங்கள்மற்றும்முறைகேடுகளும் இவ்வர்த்தகத்தின்போது இடம்பெற்று வருகின்றன.

**ஆதன பரிவர்த்தனை**
இலங்கையின் வடபகுதி தொழில்துறையில் அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்க துறையாக ஆதன வர்த்தகத்துறை காணப்படுகின்றது. ஆதன வர்த்தகத்துக்கு அண்மைக்காலமாக அதிக அளவு கேள்வி காணப்படுவதுடன், இத்துறையானது வடமாகாணத்தில் தொழில்முறையில் நன்கு விருத்திபெறாதுள்ளமையும் கண்கூடு. இந்தத் துறை தொடர்பான தெளிவின்மை, ஆதனம் தொடர்பான சட்டவிதிமுறைகள் மற்றும் அவ்வ தொடர்பில் அரசு காலத்துக்குக் காலம் மேற்கொண்டுவருகின்ற சட்டத் திருத்தங்கள் போன்ற விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சரியான தகவல் பரிமாற்றங்களை செய்து வர்த்தகத்தை மேற்கொள்ளும் அதேவேளை, அவர்களது நீண்டகால நம்பகத்தன்மையுடனான நன்மதிப்பையும் பெறவேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு வெளிப்படைத்தன்மையான, ஒழுங்குமுறையான ஆதன பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கு வடபகுதியில் சட்டரீதியான தொழில் முன்னெடுப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அத்தோடு தகுதிவாய்ந்த சட்ட நிபுணர்கள், துறைசார் நிபுணர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுடன் ஆதன பரிவர்த்தனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களும் மிக அரிதாகவே காணப்படுகின்றது.

**மரபுவழி ஆதனப் பரிமாற்றம்**
மரபுவழி தொழில் முறையிலேயே பெரும்பாலான ஆதனப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வெற்றிலையுடன் கூடிய அடையாளத்தோடு, வழிவழியாக பேணப்படும் சமூக வலையமைப்புகளுடன் அதிகளவு தனிநபர்கள் இந்தத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மிகச்சிறந்த வருமானமீட்டும் வகையில் தொழில் முயற்சியாளர்கள், 'கட்டட ஒப்பந்தகாரர்கள், சட்டத்தரணிகள், வங்கி மற்றும் நிதி நிறுவன உத்தியோகத்தர்கள், கல்விச் சமூகத்தினர், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் ஊடகத்துறையினர், முக்கியமாக அரசியல்வாதிகள், அவர்களைச் சார்ந்துள்ள உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களது தொழில் பங்காளர்கள்' ஆகியோருடனும், இன்னும் பல்வேறு துறை சார்ந்தோருடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**இடர்நேர்வு**
ஆயினும், சட்டரீதியான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ள ஆதன வர்த்தகங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான வர்த்தகங்கள் அனுமதிப்பத்திரமின்றியே மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது சில விரும்பத்தகாத அசௌகரியங்கள் மற்றும் முறைகேடுகளும் இடம்பெறுகின்றன. ஆதனம் தேடுவோருக்கு உரிய தகவல்களை வழங்காது உண்மைக்கு மாறான மற்றும் மிகைப்படுத்தபட்ட ஆதனங்களின் சந்தைப் பெறுமதிகளை முன்மொழிதல், அவர்களது விருப்பு வெறுப்புக்களை சரியாக கணிக்காது தமது சுயலாபத்தை கருத்திற்கொண்டு தாம் விரும்பிய ஆதனங்களை வெளிப்படுத்தல் போன்ற பல்வேறு இடர்பாடுகளை ஆதனம் தேடுவோர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**வட பகுதியில் ஆதன வர்த்தகம்**
அண்மையில் மேலோட்டமாக எடுக்கப்பட்ட சில தரவுகளின் அடிப்படையில், யாழ்ப்பாண நகரம் (மாநகரசபை பகுதி) மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் (யாழ் புறநகர்ப் பகுதி, நல்லூர், திருநெல்வேலி, அரியாலை) வசித்துவருகின்ற பல்வேறு தரப்பட்டவர்களும், ஏறத்தாழ 350 தொடக்கம் 450 வரையானோர் (05 வருட காலப் பகுதிக்கும் மேலாக தொழிலில் ஈடுபடுவோர்) இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதன் எண்ணிக்கையானது வருங்காலத்தில் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகியவை உள்ளடங்கலாக யாழ்ப்பாணம் முழுவதையும் அண்ணளவாக கணிப்பீடு செய்யுமிடத்து, ஆகக்குறைந்தது 1800 தொடக்கம் 2500 வரையான பதிவு செய்யப்படாத மேலும் பல ஆதன தரகர்கள் இருப்பதை ஊகிக்க முடியும்.

பொதுவாக ஆதனப்பரிமாற்றத்தின்போது அதன் இட அமைவு, குடியிருப்பு, வணிகம், விவசாயம் ஆகியன பிரதான வகைகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகின்றன. தரகுக்கட்டணம் ஆதனத்தின் விற்பனைப் பெறுமதியில் 1.5 வீதத்திலிருந்து 5 வீதம் வரை காணப்படுகின்றது. சில தரகர்கள் 5 வீதத்துக்கும் அதிகமாக அறவிடுகின்றனர். தொழில் முறையாக ஒழுங்குபடுத்தப்படாது மேற்கொள்ளப்படுகின்ற போதும் தரகர்களது விற்பனைத் திறன் மற்றும் அவர்களது தொடர்பு வலையமைப்பை குறைத்து மதிப்பிட முடியாது. பிரதான வணிக மற்றும் கேந்திர இட அமைவுகளைக் கொண்டுள்ள பெரும்பாலான ஆதனங்கள் தொடர்பில் சரியான தகவல்களை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. குறிப்பாக, 'ஆதன உடமையாளர், ஆதனத்தின் உண்மையான சந்தைப்பெறுமானம் மற்றும் தொடர்புகொள்ளவேண்டிய சரியான நபர்கள்' போன்ற விடயங்களை சுட்டிக்காட்டலாம். அவ்வாறு அனைத்து விவரங்களையும் அறிந்து கொண்டாலும் கூட, வடமாகாணத்தின் ஆதன உடமையாளர்கள் மேற்படி தரகர்களை மட்டுமே தொடர்புகொள்ளும் வண்ணம் அறிவுறுத்தும் நிலையும் காணப்படுகின்றது. இவை மட்டுமன்றி நேர்மையற்ற வகையிலேயே பெரும்பாலான ஆதன வர்த்தகங்கள் இடம்பெற்றுவருகின்றன.

**பன்னாட்டு நிறுவனங்களின் உள்நுழைவு**
அத்துடன் வடமாகாணத்துக்கு வெளியிலுள்ள நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டளவில் பிரபலமிக்க ஆதன வர்த்தக நிறுவனங்கள் அண்மைக்காலமாக இவ்வர்த்தகத்தில் காலூன்றியுள்ளன. மேலும் பல நிறுவனங்களும் எதிர்காலத்தில் இத்துறை சார்ந்து தடம்பதிப்பதற்கான ஏதுவான சூழ்நிலை களும் காணப்படுகின்றது.

**பொருத்தமான கட்டமைப்பு வேண்டும்**
மிகக்குறைந்தளவு முதலீட்டுடன் அதிகளவு வருமானத்தை உழைக்கக்கூடிய இந்த ஆதன வர்த்தகத்துறை, சிறந்ததோர் கட்டமைப்புடன் தொழில் ரீதியாக முன்னெடுக்கப்படுமிடத்து அதிகளவு சாதகமான அனுகூலங்களை தொழில் முனைவோர் அனுபவிக்க முடியும். அதிகளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும். தவிர கொள்வனவாளர், ஆதன விற்பனையாளர் ஆகிய இருவரும் திருப்தியடையக்கூடியதான அதிக கவனத்துடன் கூடிய பொறுப்புடமையை ஆதன முகவர்கள் சரியான முறையில் கட்டமைத்துக்கொள்ள முடியும்.

வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடிய விரைவான விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள், தற்போதுள்ள ஆதன வர்த்தகக் கட்டமைப்பை ஊடறுத்து சந்தையின் பெரும்பான்மை வகிபங்கை அடையக்கூடிய தந்திரோபாய திட்டமிடல்களுடன் கூடிய பிரயோகமாக அமைய வேண்டும். குறைந்தளவான சேவைக்கட்டண அறவீடு, தகவல் தொடர்பு வலையமைப்பின் விரிவாக்கம் என்பவற்றை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

**தொழில்வாய்ப்பு**
அதேபோன்று, 'மிகச்சிறந்த தொடர்பாடல் திறன்வாய்ந்த ஆற்றல்மிக்க ஆளணியினரை உள்வாங்குதல், வாடிக்கையாளர்களது ஆதனம் தொடர்பான அனைத்து விசாரணைகளையும் மிகக் கரிசனையுடன் அணுகுதல், இடைநிலை தொடர்பாளர்களை நன்மதிப்புடன் கூடிய அணுகுமுறையினூடாக கையாண்டு வாடிக்கையாளர் கட்டமைப்பைப் பலப்படுத்தல்' ஆகிய காரணிகளின் அடிப்படையையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனூடே தொழில் முறை ரீதியாக இவ்வாதன வர்த்தகத்தை முன்னெடுக்கும் நிறுவனங்கள் நீண்டகால அடிப்படையில் பெரிய அளவு சந்தைப் பாங்கை கண்டடைய முடியும். இலக்கு நோக்கிப் பயணிக்கவும் நிலைபேறான வகையில் வெற்றிகரமாக செயலாற்றவும் முடியும். மிகச்சிறந்த தொழில் வழங்குநர் என்ற உன்னத நிலையையும் எய்த முடியும்.

மிகக்குறைந்தளவு முதலீட்டுடன் அதிகளவு வருமானத்தை உழைக்கக்கூடிய இந்த ஆதன வர்த்தகத்துறை, சிறந்ததோர் கட்டமைப்புடன் தொழில் ரீதியாக முன்னெடு க்கப்படுமிடத்து அதிகளவு சாதகமான அனுகூலங்களை தொழில் முனைவோர் அனுபவிக்க முடியும்.

# மூக்கில் அவதானம் அவசியம்



மூக்கு, முக அழகுக்கு மட்டுமல்ல சுவாசத்திற்கும் முக்கியமானது. உள் இழுக்கப்படும் காற்றில் உள்ள தூசுகளை வடிகட்டி அனுப்புவது மூக்குதான். வாசனை அறியவும் மூக்கு பயன்படுகிறது. முக்கியத்துவம் நிறைந்த மூக்கு பற்றிய சில சுவாரஸ்யங்களை அறிவோம்...!

- மூக்கு, வாசனைகளைநுகர்வதற்கான பிரத்தியேக கலங்களைக் கொண்டுள்ளது. இவையே நறுமணத்தையும், நாற்றத்தையும்உணரக்காரணமாகஉள்ளன.
- காற்றில் ஆபத்தான இரசாயனங்கள் இருந்தால் மூக்கினால் உணர முடியும்.
- மனிதனின் மூக்கு 2 நாசித் துவாரங்களைக் கொண்டது. இந்த துவாரங்களை பிரிக்கும் தடுப்பு, 'நாசல் செப்டம்' எனப்படுகிறது.
- 'நாசல் செப்டம்' தடுப்பானது ஒரு குருத்தெலும்பு அமைப்பாகும். இது தசைகளை விட வலிமையானது. ஆனால் எலும்பை விட நெகிழ்வுத்தன்மை கொண்டது.
- மூக்கின் உச்சியானது 'நாசிக்குழி' எனப்படுகிறது. இங்குள்ள எத்மாய்டு எலும்பு நாசிக்குழியையும், மூளையையும் பிரிக்கிறது.
- இந்த 'எத்மாய்டு' எலும்பின் மீதுதான் கண்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. எனவே இதை கண்ணின் சுழல் அச்சு என்கிறார்கள்.
- தலையின் உட்பகுதியில் அதிக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது நாசிக்குழி. வெளிப்புறத்தில் மூக்கு அமைந்திருக்கும் பகுதிக்கு உட்புறத்தில் கண்ணின் பின்னால் அமைந்திருக்கிறது நாசிக்குழி.
- நாசிக்குழியில்தான் நாம் உள் இழுக்கும் காற்றானது உடலின் வெப்பநிலைக்கு ஏற்ப மாற்றப்படுகிறது. அதாவது அதிக வெப்பமான காற்று உடலுக்கு ஏற்ப குளிர்விக்கப்படுகிறது அல்லது குளிரான காற்று உடல் வெப்பத்திற்கேற்ப சூடாக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்படுகிறது.
- நாசிக்குழி பகுதியில் காணப்படும் நுண் மயிரிழைகள் போன்ற அமைப்பு காற்றில் கலந்து வரும் தூசுகளையும், நுண் துகள்களையும் வடிகட்டுகிறது.
- மூக்கின் உச்சிப்பகுதியாக கருதப்படும் நாசிக்குழியே, வாயின் உச்சிப் பகுதியாகவும் அமைந்துள்ளது.
- மூக்கினால் வாசனையை நுகர முடியாத நிலை 'அனோஸ்மியா' எனப்படுகிறது.
- லேசான வாசனையையும் உணர்ந்து கொள்ளும் அதிகப்படியான நுகர்ச்சி திறன் 'ஹைபரரோஸ்மியா' எனப்படுகிறது.
- வாசனை நுகர்வதில் ஏற்படும் திடீர் மாற்றம் 'டைசோஸ்மியா' எனப்படுகிறது.
- ஆண்களின் மூக்கு, பெண்களின் மூக்கைவிட பெரியது.
- மூக்கு சம்பந்தமான அறுவைச் சிகிச்சை 'ரினோபிளாஸ்டி' எனப்படுகிறது.

**மூக்கு பராமரிப்பு**

முக்கியத்துவம் நிறைந்த மூக்கு, பராமரிப்பில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மூக்கில் விரல்கள், குச்சிகளை விடக்கூடாது. தண்ணீர் மற்றும் மருந்து போன்ற திரவங்களை மூக்கில் ஊற்றிக் கொள்ளக்கூடாது. மருத்துவர் பரிந்துரை செய்யும் மருந்தை மட்டுமே மூக்கிற்கு பயன்படுத்த வேண்டும். மூக்கில் தேவையற்ற தூசு துரும்புகள் நுழைந்தால் இயற்கையாகவே தும்மல் ஏற்பட்டு வெளியேறிவிடும். ஒருவேளை அதில் அசுத்தங்கள் மிகுந்துவிட்டால் அதை சுத்தம் செய்ய பருத்தித் துணிகளையே பயன்படுத்த வேண்டும். தெரியாத மருந்துகள், பூக்களை மூக்கினால் நுகர்ந்து பார்க்கக்கூடாது. அசுத்தங்கள் நிறைந்த பகுதிக்கு செல்ல நேர்ந்தால் மூக்கினை கைக்குட்டை அல்லது மருந்து துணியால் மூடிக் கொள்ள வேண்டும். நோய் ஏற்படும்போதும் இவற்றைப் பயன்படுத்தி சுகாதாரம் பேண வேண்டும். மூக்கில் குருதிக் காயம் ஏற்பட்டால் உடனே மருத்துவரை நாட வேண்டும்.

## ஜீரண சக்தியை அதிகரிக்கும் 'ஜானு' சிரசாசனம்



"ஜானு" என்றால் முழங்கால் என்று பொருள். "சீர்ச" என்றால் தலை என்று பொருள். இந்த ஆசனத்தில் முழங்காலை தலையால் தொடுவதால் ஜானுசிரசாசனம் என்று அழைக்கப்படுகிறது.

**செய்முறை**

தண்டாசனத்தில் உட்காரவும். பிறகு இடது காலை மடக்கி குதிக்காலை பிறப்புறுப்பை தொடும்படி வைக்கவும். பாதம், வலது தொடையோடு ஒட்டியபடி இருக்கட்டும். வலது காலை இடுப்புக்கு நேராக நகர்த்தி வைக்கவும். கைவிரல்களை தலைக்கு மேல் உயர்த்தி மூச்சை ஆழமாக உள்ளுக்கு இழுத்து நிதானமாக வெளியே விட்டபடி,நேராக நீட்டி வைத்திருக்கும் இடது காலின் கட்டை விரலை இருகைகளின் கட்டை விரல்கள், ஆள் காட்டி விரல்கள், நடுவிரல்களால் பிடித்துக் கொள்ளவும்.

வலது கால் வளையாமல் நேராக இருக்கட்டும். தலையை மேலே உயர்த்தி 2 முறை ஆழமாக மூச்சை இழுத்து விடவும். மூச்சை வெளியே விட்டபடி உடலை வளைத்து வலது முழங்காலை நெற்றி தொடுமாறு வைக்கவும். முழங்கை மூட்டுகளை தரையில் தொடும்படி வைக்கவும். இந்த ஆசனத்தில் 30 முதல் 60 வினாடி சாதாரண மூச்சுடன் நிலைத் திருக்கவும். பிறகு மூச்சை உள்ளுக்குஇழுத்துதலையை மேலேதூக்கி வந்து கட்டை விரலை பிடித்திருக்கும் கைவிரல்களை விடுவித்து கால்கள் இரண்டையும் விடுவித்து நேராக நீட்டி உட்காரவும்.

**கவனம் செலுத்த வேண்டிய இடம்**

இடுப்பு, விலாத்தசை மற்றும் முழங்கால் பகுதி மீதும், சுவா திட்சடான சக்கரத்தின் மீதும் கவனம் செலுத்தவும்.

**பயிற்சிக் குறிப்பு**

ஆசனத்தில் நிலைத்திருக்கும் போது நீட்டி வைத்திருக்கும் காலை எந்த பக்கமும் சாயாதபடி நேராக வைத்திருக்க வேண்டும். கால்விரலை கை விரல்களால் பிடிக்க முடியாத வர்கள் ஒரு துண்டை உள்ளங்காலுக்கு வெளியே சுற்றிப் போட்டு துண்டின் இரு முனைகளையும் கை விரல்களால் கெட்டியாக பிடித்துக் கொண்டு, குனிந்து முழங்காலை தொட முயற்சிக்கவும். நெற்றியால் முழங்கால் மூட்டை தொட முடியவில்லை என்று காலை மடக்கி தொட முயற்சிக்கக் கூடாது.

**தடைக் குறிப்பு**

இடுப்பு சந்து வாதம், இடம் விலகிப் போன முதுகெலும்பின் டிஸ்க் தொந்தரவு உள்ளவர்கள் இந்த ஆசனத்தை செய்யக்கூடாது.

**பயன்கள்**

விலாப் புறதசைகள், இடுப்பு, கால்கள் மற்றும்வயிற்றிலுள்ளஉறுப்புகள்வலிமை பெறும். அஜீரணம், பசியின்மை நீங்கும். ஜீரண சக்தி அதிகரிக்கும். கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், கணையம், அட்ரீனல் சுரப்பி, குடல்கள், பாலின சுரப்பிகள் நன்கு இயங்க ஊக்கு விக்கிறது. சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுநீர்க்குழாய் ஆகியவற்றில் உண்டாகும் ஆரம்பகால கற்களைக் கரைக்க உதவுகிறது.

## இது புதுசு



ஆண்களுக்கான சேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 500 | 500 |
| கணவாய் | 800 | 800 | 800 | 900 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 500 | 400 |
| விளை | 500 | 450 | 500 | 800 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 100 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 100 | 200 | 300 | 400 |
| திருக்கை | 200 | 300 | 400 | 400 |
| மதனம் | 250 | 300 | 400 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 150 | 300 | 500 | 300 |
| வாளை | 150 | 300 | 400 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 120 | 140 | 160 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 60 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 160 | 140 | 120 | 180 |
| பாகல் | 200 | 200 | 260 | 220 |
| க.கிழங்கு | 100 | 60 | 100 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 110 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 130 | 160 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 20 |
| தக்காளி | 140 | 200 | 160 | 200 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 80 |
| கீரை | 40 | 50 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 35 | 40 |
| ப.மிளகாய் | 160 | 160 | 180 | 150 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 140 | 80 | 160 | 100 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 380 | 200 | 280 | 250 |
| லீக்ஸ் | 240 | 300 | 280 | 240 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 80 |
| தேசிக்காய் | 240 | 100 | 160 | 150 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 160 | 120 | 180 | 140 |
| கரட் | 280 | 300 | 280 | 220 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 120 | 160 |

# யங்ஹென்றிஸை வீழ்த்தி பாடும்மீன் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஜூன் 12

குருநகர்பாடும்மீன்விளையாட்டுக் கழகம்நடத்தியதூயவெளிவெற்றிக கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம்துரையப்பாவிளையாட்டு மைதானத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் தனேஸ். ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் இரண்டாவது கோலை மகிபன் பதிவுசெய்தார். 40ஆவது நிமிடத்தில் கீதன் பாடும்மீன் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் 65ஆவது நிமிடத்தில் குருநகர் பாடும்மீன் அணியின் இரண்டாவது கோலையும் கீதன் பதிவுசெய்தார். தற்போது கோல் கணக்கு 2:2. மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றதையடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 7:6 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

சிறந்த வீரனாக குருநகர் பாடும்மீன் அணியின் கீதன். சிறந்த கோல் காப்பாளராக இளவாலை யங்ஹென்றிஸ் அணியின் கோல் காப்பாளர் அமல்ராஜ் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)



## கார்மேல் போய்ஸ் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோண்டாவில்கலைவாணி விளையாட்டு கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கார்மேல் போய்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அணிக்கு 8 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தத் தொடர் கல்வியங்காடு ஜிபிஎஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் இருபாலை விக்றி அணியை எதிர்த்து கார்மேல்ஸ்போய்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இருபாலை விக்றி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனித் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுதர்சன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல்ஸ் போய்ஸ் அணி 3 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## கிளிநொச்சி மகா வித்தி அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தினதும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்கு ணகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆதிபன் 35 ஓட்டங்களையும், சாரணியன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கௌசிகன் 3 இலக்குகளையும், பிருந்தன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

157 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரணித், சாரணியன் இருவரும் தலா 3 இலக்குகளையும், சாத்வீகன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## மெதடிஸ்த பெண்கள் மாவட்டச் சம்பியன்



யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் அணி மாவட்டச் சம்பியனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தப் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:18, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் நேர்செற் வெற்றிபெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (ம-108)



## குறிஞ்சிக்குமரன் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 12

மெலிஞ்சிமுனை இருதயாராஜா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியின் முதலாவது கோல் 7ஆவது நிமிடத்தில் ரிதுசனால் பதிவு செய்யப்பட்டது. அதுவே. முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியில் மாற்றங்கள் நிகழவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில்மாதோட்ட எவ்.சி. அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 12

கலைமகள் சனசமூகநிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக மென்பந்து, கரப்பந்தாட்டம், கரம் தொடர்கள் நடத்தப்படவுள்ளன. இந்தத் தொடர்களில் பங்குபற்றவுள்ள கழகங்கள் நாளைக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## கால்பந்தாட்டம்


நக்கீரன் சனசமூக நிலையம் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கால்பந்தாட்டத் தொடரை நடத்தவுள்ளது. நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் இந்தத் தொடரில் 47 அணிகள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# சரிந்தது இலங்கை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 226 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இலங்கை அணி.
இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுக ளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமானது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 414 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக டவ்ரிச் 125 ஓட்டங்களையும், கோப் 44 ஓட்டங்களையும், கோல்டர் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லகிரு குமார 4 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 185 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக சந்திமல் 44 ஓட்டங்களையும், டிக்வெல்ல 31 ஓட்டங்களையும், பெரேரா 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், றோச், கபிரியேல் இருவரும் தலா 2 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கூ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இலங்கை அணியை இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய வாய்ப்பு இருந்த போதிலும், தானே தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவது என்று தீர்மானித்தது தீவுகள். அந்த அணி 7 இலக்குகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக பவல் 88 ஓட்டங்களையும், கோல்டர் 39 ஓட்டங்களையும், சிமித் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் குமார 3 இலக்குகளையும், கேரத் 2 இலக்குகளையும், லக்மல், பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இலங்கை அணிக்கு இலக்காக 453 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அந்த அணியால் 226 ஓட்டங்களை மட்டமே பெறமுடிந்தது. இதையடுத்து 226 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.
பந்துவீச்சில் சேஸ் 4 இலக்குகளையும், பிஸ்கூ 3 இலக்குகளையும், கபிரியேல் 2 இலக்குகளையும், கோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு போலந்து அணிக்குத் தாராளம் உள்ளது!



உலக கால்பந்து அரங்கில் செல்லமாக 'கழுகுகள்' (தி ஈகிள்ஸ்) என்று அழைக்கப்படும் போலந்து அணி உண்மையிலேயே கிண்ணத்தை வெல்வதற்குத் தேவையான வீரர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. தரம் வாய்ந்த வீரர்கள், அதி அற்புதமான ஒருங்கிணைக்கும் திறன், `திறமையான பயிற்சியாளர், வீரர்கள் மீது உயிரையே வைத்திருக்கும் ரசிகர் கூட்டம் என போலந்து கால்பந்து அணிக்கு ஏகப்பட்ட சிறப்பு அம்சங்கள் உள்ளன.

**தகுதிச் சுற்றில் போலந்தின் அடைவு**

இந்த முறை உலகக் கிண்ணத் தொடருக்கான கால்பந்து தகுதிச் சுற்றில் ஐரோப்பாவின் ஈ பிரிவில் போலந்து இடம்பெற்றிருந்தது. மொத்தம் 10 தகுதிச் சுற்று ஆட்டங்களில் 8 ஆட்டங்களில் அட்டகாசமான வெற்றியைப் பறித்தது போலந்து. ஓர் ஆட்டத்தில் சமநிலையும், ஓர் ஆட்டத்தில் தோல்வியையும் அந்த அணி சந்தித்தது. மேலும் 28 கோல்களைச் செலுத்திய போலந்து, எதிரணியிடம் 14 கோல்களை மட்டுமே வாங்கியிருந்தது. மொத்தம் 25 புள்ளிகளைப் பெற்ற போலந்து, 'ஈ' பிரிவில் முதலிடம் பெற்று ரஷ்ய உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது.
தகுதிச் சுற்று ஆட்டங்களின்போது மோன்டெனக்ரோ, ருமேனியா, அர்மீனியா, கஜகஸ்தான் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் அமர்க்களமான வெற்றியைப் பெற்றது.
ஆனால் கோபன்ஹேகனில் நடைபெற்ற டென்மார்க் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 0:4 என்ற கணக்கில் மோசமான தோல்வியைப் பதிவு செய்தது. ஆனால் டென்மார்க் அணிக்கு எதிரான மற்றொரு ஆட்டத்தில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது போலந்து. தகுதிச் சுற்றின் முடிவில் மற்ற வெற்றிகளின் காரணமாக எளிதில் ரஷ்ய உலகக் கிண்ணத் தொடருக்குள் போலந்து நுழைந்தது.

**தகுதியான தலைமை**

போலந்தின் அடைவுகளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது அணித் தலைவர் றொபர்ட் லெவன்டோவ்ஸ்கியின் அசகாய ஆட்டம்தான். அந்த அணி செலுத்திய 28 கோல்களில் 16 கோல்களை செலுத்தியவர் றொபர்ட் லெவன்டோவ்ஸ்கிதான் என்பது இங்கு குறிப்பிடத் தகுந்த விடயமாக அமைந்துள்ளது.
ருமேனியா, டென்மார்க் அணிக்கெதிரான ஆட்டங்களின்போது ஹட்ரிக் கோல்களைச் செலுத்தினார் றொபர்ட் லெவன்டோவ்ஸ்கி. இதனால் உலகக் கிண்ணத் தொடருக்கான அணியைத் தகுதி பெறச் செய்ததில் முக்கியமான காரணமாக றொபர்ட் அமைந்தார். அணியின் முதுகெலும்பாகவும், தலைமை வீரனாகவும் இருப்பவர் றொபர்ட்தான். அவர்தான் அணிக்கு முக்கிய பலமாக இருக்கிறார் என்று பயிற்சியாளர் ஆதம் நவால்கா புகழ்ந்துள்ளார்.
போலந்து தேசிய அணிக்காக 2008ஆம் ஆண்டு முதல் களமிறங்கி கலக்கி வருகிறார் றொபர்ட். இதுவரை போலந்து அணிக்காக 93 ஆட்டங்களில் விளையாடியுள்ள றொபர்ட் லெவன்டோவ்ஸ்கி 52 கோல்களை அடித்துள்ளார். பல விருதுகளையும், கிண்ணங்களையும் போலந்து அணிக்காக அவர் பெற்றுக்கொடுத்துள்ளார். போலந்து நாட்டின் ரசிகர்கள் ஒட்டுமொத்தத்தையும் கவர்ந்திருப்பவர் றொபர்ட்.
உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில் ஐரோப்பிய பிரிவில் அதிக கோல்கள் அடித்தவரும் இவர்தான். மொத்தம் 16 கோல்களை அடித்த இவர், 2 முறை ஹாட்ரிக் கோல்களும் அடித்தார். அணியின் ஸ்டிரைக்கரான றொபர்ட் லெவன்டோவ்ஸ்கி அணி வீரர்களை கட்டுக்கோப்பாகவும், திறமையாகவும் வழிநடத்துவதில் வல்லவர். அணியின் பாரத்தை மொத்தமாக சுமந்து கொண்டு ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார் றொபர்ட் லெவன்டோவ்ஸ்கி. போலந்து நாட்டின் மிகச் சிறந்த கால்பந்து வீரர்களில் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளார் ராபர்ட்.

**காயம் பின்னடைவு**

அதே நேரத்தில் அணியின் முக்கிய வீரர்கள் சிலர் காயமடைந்துள்ளது அந்த அணிக்கு பின்னடைவாக உள்ளது. அர்க்காடியுஸ் மிலிக், குபா பிளாஸ்சைக்கோவ்ஸ்கி ஆகியோர் காயமடைந்துள்ளனர். மேலும் சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரில் எதிர்பார்த்த உயர்மட்ட அளவிலான திறனை போலந்து அணி வெளிப்படுத்தவில்லை. 1938, 1974, 1978, 1982, 1986, 2002, 2006 ஆகிய ஆண்டுகளில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடத் தகுதி பெற்றது போலந்து. தற்போது 8ஆவது முறையாக உலகக் கிண்ணத் தொடரில் நுழைந்துள்ளது. 1974, 1982ஆம் ஆண்டுகளில் 3ஆவது இடத்தைப் பிடித்ததே போலந்து அணியின் உலகக்கிண்ணத் தொடருக்கான அதிகபட்ச அடைவாகும். இந்த முறை உலகக் கோப்பையில் 'எச்' பிரிவில் செனகல், ஜப்பான், கொலம்பியா அணிகளுடன் இணைந்துள்ளது போலந்து. பார்ப்பதற்கு எளிதான அணிகள் போன்று இருந்தாலும் செனகல், ஜப்பான், கொலம்பியா அணிகள் போலந்தின் திறமைக்குச் சவால் விடும் அணிகளாக இருக்கின்றன. எனவே போலந்து அணிக்கு முதல் சுற்று கடுமையாக இருக்கப்போகிறது. ஆனால், போலந்து குறைந்த பட்சம் கால் இறுதி வரையாவது முன்னேறும் என கால்பந்து விமர்சகர்கள் கணித்துள்ளனர்.





# மீண்டும் நடால்

பிரென்ஞ் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் ஸ்பெய்னின் ரபேல் நடால்.



பிரென்ஞ் பகிரங்கத் தொடரின் இறுதியாட்டம் பாரிஸ் நகரில் நடைபெற்றது. ஆண்கள் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து ஆஸ்திரிய வீரர் தியம் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். இரண்டாவது செற்றும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நடாலின் வசமானது. இதனால் மூன்றாவது செற்றையும் கைப்பற்றினால் நடால் சம்பியன் என்கிற நிலை. அந்த செற் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நடாலின் வசமாக அவர் 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார்.

பிரென்ஞ் ரென்னிஸ் தொடர் களிமண் தரை ஆடுகளங்களில் நடைபெறுகிறது. களிமண் தரையில் நடால் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வல்லவர். இதனால் அவர் களிமண் தரையின் ராஜா என்று அழைக்கப்படுகிறார். பிரென்ஞ் கிண்ணத்தை இதற்கு முன்னர் 10 தடவைகள் வென்றிருந்த நடால் 11ஆவது தடவையாக பிரென்ஞ் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

வழக்கமாக பிரென்ஞ் கிண்ணத்தை ஏந்தியதற்கும் இந்த வருடம் பிரென்ஞ் கிண்ணத்தை ஏந்தியதற்கும் சிறு வேறுபாடு இருக்கவே செய்கிறது. இந்த வருடம் அதிகம் உணர்ச்சிவசப்பட்டவராக கண்ணீர் மல்கியபடி அவர் கிண்ணத்தை ஏந்தினார். (ம)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS



உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் ரஷ்யாவில் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் பங்குபற்றவுள்ள உருகுவே அணி நேற்றுமுன்தினம் ரஷ்யாவைச் சென்றடைந்தது. (ம)

## டொட்டன் ஹாமுடன் ஹாரி கேனின் ஒப்பந்தம் நீடிப்பு


இங்கிலாந்து அணியின் தலைவரான ஹாரி கேன். டொட்டன்ஹாம் கழகத்துடன் தான் கொண்டிருந்த ஒப்பந்தத்தை எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரையில் நீடித்தார்.

ஸ்பெய்னின் முன்னணி கழகமான மட்ரிட்டுக்கு ஹாரி கேன் செல்லவுள்ளார் என்று செய்திகள் உலா வந்தன. இந்த நிலையில் அவரின் இந்த ஒப்பந்த நீடிப்பானது கேன் தொடர்பில் அண்மைக்காலமாக உலவி வந்த செய்திகள் வெறும் வதந்திகள் என்று சொல்லாமல் சொல்லியுள்ளன. (ம)



## உபதலைவர் பதவியை பெறுவதற்குச் சம்மதம்

### லையன் வெளிப்படை



ஆஸ்திரேலிய அணியின் உபதலைவர் பதவியைத் தந்தால் நிச்சயம் அதை ஏற்றுக் கொள்வேன் என்று தெரிவித்தார் நாதன் லையன்.

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உப தலைவர் வோர்ணர் இருவரும் சிக்கினார்கள். இவர்கள் இருவருக்கும் தலா ஓர் ஆண்டுத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அவர்களிடம் இருந்த பதவியும் பறிக்கப்பட்டது. தலைமைத்துவம் இலக்குக் காப்பாளர் ரிம் பெய்னிடம் ஒப்படைக்கப்பட்டது. உபதலைவர் யார் என்பது தொடர்பில் தற்போது மிகப்பெரும் கேள்வி எழுந்துள்ளது. அந்த இடத்துக்கு சுழல்வீரர் லையன் பரிசீலிக்கப்படுகிறார் என்று செய்திகள் வெளிவந்திருந்த நிலையில் உப தலைமைத்து வத்துக்குச் சம்மதம் என்று தெரிவித்தார் லையன். (ம)

காணி விற்பனைக்கு
கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் எருவன் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் காணிகள் விற்பனைக்கு உண்டு.
(9263) (14.17) தொடர்பு: 077 501 0196

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



ரஷ்யாவில் உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் கலந்துகொள்வதற்கான பிரேசில் அணி நேற்றுமுன்தினம் ரஷ்யாவைச் சென்றடைந்தது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.